பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆடி 1 செவ்வாய்க்கிழமை (17-07-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:233

# யாழ். செயலகத்துக்கு மிக அண்மையில் நேற்றுக் காலை கிளேமோர் தாக்குதல்!

## 9படையினர் படுகாயம்

யாழ்ப்பாணம்,ஜூலை17

யாழ்.ஆஸ்பத்திரி வீதி - ஆலய வீதிச் சந்திக்கு அருகில் சஞ்சுவானியர் தேவாலயத்துக்கு முன்பாக நேற்றுக் காலை 8.50 மணியளவில் படையினரின் 'டிரக்' ஒன்றின் மீது நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் 9 படையினரும் சிவிலியன் ஒருவரும் காயமடைந்தனர்.

காயமடைந்த படையினரில் நால்வரின் நிலைமை மோசமாக இருப்பதாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

முகமாலையில் இருந்து பலாலி நோக்கிச் சென்றுகொண்டிருந்த படையினரின் டிரக்கே கிளைமோர் தாக்குதலில் சிக்கியது.

அரச செயலகம் அமைந்துள்ள அதிஉச்சப் பாதுகாப்புப் பிரதேசத்தில் - யாழ். நகரின் மையத்தில் - பல இராணுவ முகாம்கள் அமைந்துள்ள பகுதிகளுக்கு நெருக்கமாக- நடத்தப்பட்டுள்ள இந்த அதிரடிக் கிளைமோர் தாக்குதல் படைத்தரப்பை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருப்பதாகச் செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டது.

இத்தாக்குதலில் காயமடைந்த படையினர் பலாலி இராணுவ ஆஸ்பத்திரிக்கு அவசரமாகக் கொண்டு செல்லப்பட்டனர். அவர்களில் கடுங்காயமுற்றோர் பின்னர் கொழும்பு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. கையில் காயமடைந்த சிவிலியனான

(14ஆம் பக்கம் பார்க்க)

# மேயர் ஸ்டாலினின் நண்பர் குடும்பத்துடன் தற்கொலை!

## மேம்பால ஒப்பந்தகாரரின் பரிதாப முடிவு

சென்னை,ஜூலை17

சென்னையில் மேம்பாலம் கட்டுவதில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் தொடர்பாக தமிழகப் பொலீஸாரால் தேடப்பட்டு வந்தவரும், சென்னை மேயர் மு.க.ஸ்டாலினின் நெருங்கிய நண்பருமான அண்ணா நகர் ரமேஷ், அவரது மனைவி மற்றும் பத்து, ஒன்பது, ஒரு வயதுகளுடைய அவர்களது மூன்று பெண் பிள்ளைகளும் நேற்றுக் காலை சென்னையில் உள்ள அவர்களது இல்லத்தில் இறந்து கிடக்கக் காணப்பட்டனர்.

குளிர்பானத்தில் விஷத்தைக் கலந்து அருந்தி அவர்கள் தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்படுகிறது.

ரமேஷின் சடலத்தின் அருகே இருந்த கடிதத்தில் -

லஞ்ச வழக்கில் தான் சம்பந்தப்பட்டிருப்பதாகச் செய்திகள் வெளிவந்ததைத் தாங்கிக் கொள்ள முடியாமல் குடும்பத்துடன் தற்கொலை செய்வதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

போதைப் பொருள் வைத்திருந்த

(14ஆம் பக்கம் பார்க்க)

# பொலீஸ் தடைகளை உடைத்துக்கொண்டு எதிரணியினர் நாடாளுமன்றம் பிரவேசம்!

## தமிழ் எம்.பிக்களும் களத்தில்!

கொழும்பு,ஜூலை17

**நாடாளுமன்றத்தை இடைநிறுத்தும் ஜனாதிபதியின் உத்தரவை மீறி, நாடாளுமன்றத்தைக் கூட்டும் அதிகாரம் தனக்கு இல்லை என்று சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்க எதிர்க்கட்சித் தலைவருக்கு அறிவித்ததை அடுத்து-**

**எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சென்ற எதிர்க்கட்சி எம்.பிக்கள் குழு நேற்றுக் காலை நாடாளுமன்ற நுழைவாயில் பகுதியில் போடப்பட்டிருந்த பொலீஸ் தடைகளை உடைத்தெறிந்து கொண்டு நேற்று நாடாளுமன்ற வளாகத்துக்குள் புகுந்தனர்.**

**இந்தப் போராட்டத்தில் ஐ.தே.கட்சி எம்.பிக்களுடன் தமிழர் கூட்டணி, தமிழ்க் காங்கிரஸ், ரெலோ ஆகிய தமிழ்க்கட்சிகளின் எம்.பிக்களும் கலந்து கொண்டனர்.**

நாடாளுமன்ற வளாகத்துக்குள் பலவந்தமாகப் புகுந்த எதிர்க்கட்சி எம்.பிக்கள் சுமார் தொண்ணூறு பேர் அங்கு நாடாளுமன்றக் குழு அறையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் எதிரணி நாடாளுமன்ற குழுக் கூட்டம் ஒன்றையும் நடத்தினர்.

இக்கூட்டத்தில் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் ஐ.தே.கட்சி மற்றும் ரவூப் ஹக்கீம் அணியின் எம்.பிக்கள் என சுமார் தொண்ணூறுக்கும் அதிக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

ஆனால் ஜே.வி.பி. உறுப்பினர்கள் பங்குபற்றவில்லை.

நாடாளுமன்றுக்கு முன்னால் உள்ள வீதிகள் மற்றும் நுழைவாயில்கள் நேற்று அதிகாலை முதல் இரும்புக் 'கேடர்கள்' போட்டு வழி மறிக்கப்பட்டிருந்தன. பொலீஸாரும் பெரும் எண்ணிக்கையில் குவிக்கப்பட்டிருந்தனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## அரியாலைக் கடலில் நேற்று 2 சிப்பாய்கள் சூட்டுக்குப் பலி!

யாழ்ப்பாணம்,ஜூலை17

அரியாலை கடற்பகுதியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இரு இராணுவச் சிப்பாய்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

கடற்பகுதியில் ரோந்து சென்ற படையினரை நோக்கிப் பூநகரிப் பகுதியில் இருந்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகவும் -

பதிலுக்கு ரோந்து சென்ற படையினரும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும் -

இந்த மோதலில் வள்ளத்தில் இருந்த இரு சிப்பாய்கள் கொல்லப்பட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் என்.செனிவிரத்தின (இரத்தினபுரி), எஸ்.கலதாரகே (புத்தளம்) ஆகிய இரு சிப்பாய்களே உயிரிழந்தனர்.

சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மரணங்கள் தொடர்பான வாக்குமூலங்கள் நேற்று யாழ்.நீதிமன்றில் நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் பதிவு செய்யப்பட்டன.

(உ-10)

## ஈழத் தமிழ்க் குழுக்கள் லண்டனில் மோதல்!

### கத்திக் குத்தில் ஐவர் படுகாயம்

லண்டன்,ஜூலை17

கிழக்கு பிரிட்டனில் உள்ள ரோமன் கத்தோலிக்க யாத்திரைத் தலம் ஒன்றுக்கு வழிபாடுகளுக்குச் சென்று விட்டுத் திரும்பிய ஈழத் தமிழர்களின் போட்டிக்குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதல் பெரும் கத்திக் குத்தில் முடிந்தது. ஐந்து பேர் படுகாயமடைந்தனர். அவர்களில் மூவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. மேலும் ஐந்து ஈழத் தமிழர்கள் பிரிட்டிஷ் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கிழக்கு பிரிட்டனில் நூற்றாண்டு காலம் பழைமை வாய்ந்த வேல்ஸ்சிங்ஹாம் கதிரைமாதா ஆலயம் ரோமன் கத்தோலிக்கரின் புகழ்பூத்த யாத்திரிகர் தலமாகும். இங்கு ஒவ்வொரு வருடமும் ஆடி மாதம் நடுப்பகுதியில் வரும் ஞாயிற்றுக்கிழமைகளில் தமிழில் பூசை வழிபாடுகள் நடைபெறுவதும் -

இந்தப் பூசைகளில் பங்குபற்றுவதற்காக உலகெங்கிலும் இருந்து தமிழ் மதகுருமார்கள் உட்பட பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் அப்போது அங்கு வந்து ஒன்றுகூடுவதும்-

இவ்வாறு வரும் யாத்திரிகர்கள் தமது வழிபாடு முடிந்ததும் வேல்ஸுக்குப் பக்கத்தில் உள்ள மீன்பிடிக் கிராமம் ஒன்று அமைந்துள்ள கடற்கரைக்கு உல்லாசப் பயணம் போவதும் - வழமை.

இம்முறை சுமார் ஐயாயிரம் தமிழர்கள் கதிரைமாதா ஆலய வழிபாடுகளுக்காக வந்து கூடினர். பகல் முழுவதும் பிரார்த்தனை மற்றும் வழிபாடுகளில் ஈடுபட்ட இந்தத் தமிழர்களில் சுமார் ஆயிரம் பேர் பின்னர்

(14ஆம் பக்கம் பார்க்க)

### தமிழ்க்கட்சிகள் இன்று கூட்டம்

கொழும்பு,ஜூலை17

ஜனாதிபதி அறிவித்துள்ள சர்வஜன வாக்கெடுப்புக் குறித்து ஆராய்ந்து முடிவு எடுப்பதற்காக பத்துத் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு இன்று மாலை கொழும்பில் கூடவிருப்பதாகத் தெரிகின்றது.

(உ)

### மணலாறில் 3 படையினர் பலி!

வவுனியா,ஜூலை17

மணலாறு பகுதியில் கொக்குத்தொடுவாய்க்கும் கோட்டைகேணிக்கும் இடையில் உள்ள இராணுவ காவலரண்கள் மீது நேற்று அதிகாலை 12.20 மணியளவில் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 3 படையினர் உயிரிழந்தனர் என்றும்-

அவர்களில் இருவரினது சடலங்களும் மற்றும் ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன என்றும்-

"புலிகளின் குரல்" வானொலி

(14ஆம் பக்கம் பார்க்க)

### முல்லைத்தீவில் கறுப்புப் பட்டி போராட்டம்

வவுனியா,ஜூலை17

யாழ். பல்கலைக்கழக மாணவன் திவ்வியனை விடுவிக்கக் கோரியும் யாழ்.பல்கலைக்கழகத்தை திறக்கும்படி வலியுறுத்தியும், முல்லைத்தீவு கல்வி வலய பாடசாலைகளின் ஆசிரியர்கள் நேற்று கறுப்புப்பட்டிப் போராட்டம் நடத்தினர்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வன்னிக் கிளை இந்தப் போராட்டத்தை ஒழுங்கு செய்திருந்தது.

(உ-ஒ)

## சாள்ஸ் அன்ரனி படையணியின் 10ஆவது ஆண்டு நிறைவு தினம்

வவுனியா,ஜூலை17

விடுதலைப் புலிகளின் ஆரம்பகால உறுப்பினரில் ஒருவரான லெப்டினன்ட் சாள்ஸ் அன்ரனியின் 18 ஆவது ஆண்டு நினைவு தினமும் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் 10ஆவது ஆண்டு நிறைவு தினமும் வன்னிப் பகுதியில் நேற்று முன்தினம் நினைவு கூரப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் சாள்ஸ் அன்ரனியின் திருவுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் 10ஆண்டு கால பதிவுகளை உள்ளடக்கிய நூல் ஒன்றையும் ஒளி நாடாவின் முதலாம் பாகத்தையும் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் தளபதி வீரமணி விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனிடம் வழங்கினார்.

தொடர்ந்து சாள்ஸ் அன்ரனி

(14ஆம் பக்கம் பார்க்க)

## சர்வஜன வாக்கெடுப்பு விவகாரத்தில் ஒதுங்கியிருக்க 7 அமைச்சர்கள் முடிவு

கொழும்பு,ஜூலை7

ஜனாதிபதி அறிவித்திருக்கும் சர்வஜன வாக்கெடுப்புத் தொடர்பான ஏற்பாடுகளிலும் பிரசாரங்களிலும் பங்குபற்றாமல் ஒதுங்கியிருப்பது என ஏழு அமைச்சர்கள் முடிவு செய்துள்ளனர் என்று கொழும்பு செய்தி வட்டாரம் ஒன்று தெரிவித்தது.

அமைச்சர்கள் ஜி.எல்.பீரிஸ், எஸ்.பி.திஸநாயக்க, மஹிந்த விஜயசேகர, ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளே, அமரசிறி தொடங்கொட, [illegible] மான் ஆகியோரே அந்த ஏழு பேரும் ஆவர்.

"அரசமைப்பைத் திருத்தவேண்டும் என்பது ஒரு தேசியத் தேவை ஆகும். அதற்கு சர்வஜனவாக்கெடுப்பு வைத்துத்தான் மக்கள் அனுமதி பெறவேண்டும் என்பது தேவையற்றது. அப்படிச் செய்வது வீணான நிதி, நேர செலவுகளைத்தான் தரும்" - என்று அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டதாகத் தெரிகின்றது.

சர்வஜன வாக்கெடுப்பின்போது

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## திவ்வியன் கைது விடயத்துக்கு சாதகமான பதில் கிடைக்காவிட்டால்

# பரந்தளவிலான போராட்டத்துக்கு மாணவர், மக்கள் தயாராக வேண்டும்

## அழைப்பு விடுக்கின்றது பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

யாழ்ப்பாணம்,ஜுலை17

"திவ்வியன் கைது விவகாரத்தில் இவ்வாரு இறுதிக்குள் சாதகமான பதில் கிடைக்காவிட்டால் அடுத்த வாரம் பரந்தளவிலான மாணவர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட இருக்கின்றன. மாணவர்களையும் பொதுமக்களையும் இதற்காகத் தயாராகுமாறு கேட்டுக்கொள்கின்றோம்."

- இவ்வாறு கோரியிருக்கின்றது யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்.

அந்த அமைப்பு நேற்று விடுத்த அறிக்கையிலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் கூறப்பட்டிருப்பதாவது:-

ஸ்ரீலங்கா இராணுவம் கைது செய்து தடுத்து வைத்துள்ள யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட இறுதி வருட மாணவனும், பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய முன்னாள் செயலாளருமான திவ்வியனை விடுவிப்பது தொடர்பாக இவ்வார இறுதிக்குள் சாதகமான பதில் தரப்படவில்லையாயின் அடுத்தவாரம் பரந்தளவிலான மாணவர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட இருக்கின்றன. பாடசாலை மாணவர்களையும் பொதுமக்களையும் இதற்காகத் தயாராகுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கைது நடவடிக்கையினால் ஏற்பட்ட பதற்ற நிலையாலும் அரச படையாள்களின் அடாவடித்தனங்களினாலும் வடக்குக் கிழக்குப் பிரதேச மாணவர்களின் கல்வி நிர்வாகங்கள் மற்றும் கல்விச் செயற்பாடுகள் ஸ்தம்பித்துப் போயிருந்தன. பெற்றோர்களும் பொதுமக்களும் தமது பிள்ளைகளுக்கு நாளை சம்பவிக்கப்போகும் ஒரு ஸ்திரமற்ற நிலைக்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டுமென்று ஒன்று திரண்டுள்ளனர். ஆனால் மாணவர்களினதும் மக்களினதும் நலன்களில் அக்கறை கொண்டுள்ளதாகக் குழல்ஊதி வருகின்ற ஸ்ரீலங்கா அரசு தமிழ் மாணவர்களின் கல்விக்கு ஏற்பட்டுள்ள மோசமான நெருக்கடிக்கு எந்தவித தீர்வினையும் இதுவரை முன்வைக்கவில்லை. இதற்கு மாறாகத் திவ்வியன் மீதான பொய்க்குற்றச்சாட்டினை - திரிபுபடுத்தி - பத்திரிகைகள் மூலமாகப் பிரசாரம் செய்து வருகின்றது.

### தமிழரைப் புலியாக நோக்கும் படைகள்

இலங்கையில் அரச படைகளினால் இதுவரை கொல்லப்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் தொகை சுமார் 70 ஆயிரமாகும். ஒவ்வொரு தடவையும் பொதுமக்களை அரசபடை கொன்றபோதெல்லாம், தாம் புலிகளைக் கொன்றுவிட்டதாகவே பிரசாரப்படுத்தி வந்துள்ளனர். ஆனால் புலிகளோ இதுவரையில் தமது தரப்பில் 17.ஆயிரம் போராளிகளை மட்டுமே இழந்துள்ளதாக அறிக்கைகள் ஊடாகக் கூறியுள்ளனர். இதுமட்டுமன்றி இனவாதநோக்குடனும் இன அழிப்புப் பார்வையுடனும் எம்மக்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் அரச படைகள் ஒவ்வொரு தமிழ் மகனையும் புலியாகவே நோக்குகின்றது. எவர் கைது செய்யப்பட்டாலும் புலிகளைக் கைது செய்து கொள்வதாகவே பிரசாரப்படுத்தித் தமது தமிழ் மக்கள் மீதான அடாவடித்தனங்களை மூடி மறைத்து வருகின்றது.

### புலி முத்திரை குத்தும் செயற்பாடு

அண்மையில் வடமராட்சி நெல்லியடிப் பகுதியில் ஸ்ரீலங்கா அரச படைகளினால் சுட்டுக்கொலை செய்யப்பட்ட மயில்வாகனம் ஜெயக்குமார் என்பவருக்குச் சம்பவித்த கோரமான சம்பவம் ஸ்ரீலங்கா அரச படையினரின் கண்மூடித்தனமான தாக்குதலுக்கும் புலிகள் என முத்திரை குத்தும் வழமையான பாணிக்கும் நல்ல எடுத்துக்காட்டு. மயில்வாகனம் ஜெயக்குமார் [illegible] காணலாம்.

லூரிக்கு அருகில் வசிப்பவர். இவர் அதிபர் சந்திரிகாவின் தாயாரின் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தீவிர ஆதரவாளராவார். கடந்த தேர்தல் காலத்திற்கூட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் வேல்முருகு தங்கராசாவிற்கு ஆதரவாகச் செயற்பட்டவர். ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் முக்கியமானதொரு கட்சியின் அமைப்பாளர் மயில்வாகனம் ஜெயக்குமார் . அத்துடன் வடமராட்சிப் பிரதேசத்தின் அநேகமான ஆயுதப்படையினருடன் நன்கு அறிமுகமானவர். கடந்த 5ஆம் திகதி மேற்படி இளைஞர் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தில் கொல்லப்பட்டார். அரச படையினர் தமது வழமையான பாணியில் ஜெயக்குமாரின் இறந்த உடலத்தின் இடுப்பில் கைத்துப்பாக்கியைச் செருகி கைகளில் கைக்குண்டுகளை வைத்து, படம் பிடித்து பொதுமக்களுக்கும் காண்பித்தபின் தாம் புலி உறுப்பினரை சுட்டுக்கொன்று விட்டதாகத் தெரிவித்து மந்திகை வைத்தியசாலையில் உடலத்தை ஒப்படைத்தனர்.

இத்தகைய கொடூரங்கள் இன்று ஸ்ரீலங்கா அரச கட்டுப்பாட்டில் அன்றாட நிகழ்வாகிவிட்டன. கைது செய்யப்படுபவர்களும் கொலை செய்யப்படுபவர்களும் புலிகள் என்றே முத்திரை குத்தப்பட்டுக் காரியம் முடிக்கப்படுவது இனவாத ஸ்ரீலங்கா அரசினது வழமையான இரக்கமற்ற செயற்பாடாகிவிட்டது.

### திரிவுபடுத்தி பத்திரிகைச் செய்தி

இராணுவம் தனது பத்திரிகைக் குறிப்பில் திவ்வியனிடமிருந்து ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகத் திரிபுபடுத்தித் தனது கைது நடவடிக்கையினை நியாயப்படுத்தி வருகின்றது. நாம் முன்பு பத்திரிகைகளில் தெரிவித்ததை மீண்டும் நினைவுபடுத்த விரும்புகின்றோம்.

கடந்த 9-7-2001 அன்று யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலாவை எமது மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் துணைவேந்தருடன் சென்று சந்தித்தபோது அவர் திவ்வியன் எந்த ஆயுதங்களையும் வைத்திருக்கவில்லை எனவும் திவ்வியனிடமிருந்து எந்த ஆயுதமும் கைப்பற்றப்படவில்லை என்றும் தெரிவித்திருந்தார்.

அத்துடன் நேற்று (15-07-2001) திவ்வியனை காங்கேசன்துறைத் தடுப்பு முகாமில் எமது பிரதிநிதிகள் சந்தித்தபோது யாழ்.மத்திய கல்லூரி அதிபர் இராஜதுரை அவர்களும் அங்கு இராணுவத்தினரால் அழைக்கப்பட்டிருந்தார்.

அவ்விடத்தில் இராஜதுரை அவர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் திவ்வியன், தான் ஆயுதங்கள் எதனையும் வைத்திருக்கவில்லை எனவும் இராணுவம் தன்னை சித்திரவதைக்கு உட்படுத்தியதாகவும் தனது உட்காயங்களுக்காக தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு கொண்டு சென்று வருவதாகவும் தெரிவித்தார். ஆனால் படைத்தரப்பு இதனைத் திரிபுபடுத்தி திவ்வியனிடமிருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்டதாகத் தமக்குத் தெரிந்த ஆயுதங்களின் பெயர்களைக் குறிப்பிட்டு மக்களை ஏமாற்றி வருகின்றது.

பாடசாலை மாணவரின் கல்வி நலன்கருதி, வரும் புதன்கிழமை தொடக்கம் பாடசாலைக்குச் சமுகமளிக்குமாறு கோரியிருக்கின்றோம். அதேவேளை பல்கலைக்கழக மாணவர்கள் திவ்வியன் விடுதலை செய்யப்படும்வரை தொடர்ந்தும் பகிஷ்கரிப்பில் ஈடுபடுவர்; எமது காலவரையறைக்குள் திவ்வியன் விடுதலை செய்யப்படாவிட்டால் எம்மால் விஷ்தரிக்கப்படவிருக்கும் மாபெரும் போராட்டத்துக்கு அனைவரினதும் அர்ப்பணிப்பு நிறைந்த பங்களிப்பினை எதிர்பார்த்து நிற்கின்றோம். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

## தூபி முன்றிலில் முகப்பு வளைவு

யாழ்ப்பாணம்,ஜுலை17

புளொட் அமைப்பின் ஏற்பாட்டில் கடந்த மூன்று நாள்களாக அனுஷ்டிக்கப்பட்டு வந்த வீரமக்கள் தினத்தின் இறுதி நாளான நேற்று யாழ். முற்றவெளியில் உள்ள தமிழாராய்ச்சி மாநாட்டு நினைவுத் தூபிகளின் முன்றிலில் முகப்புவளைவு திறந்து வைக்கப்பட்டது.

'நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு உயர்க்கொடை உத்தமர் நினைவாலயம்' என்ற வாசகம் பொறிக்கப்பட்ட இந்த முகப்பு வளைவை 'புளொட்' அமைப்பின் ஸ்தாபகரான அமரர் உமாமகேஸ்வரனின் மைத்துனர் வல்லிபுரம் இராசதுரை நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

யாழ்.மாநகரசபை உறுப்பினர் எம்.தவநாதன் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் நினைவஞ்சலி உரைகளும் இடம்பெற்றன. (உ-ஒ-10)

## மட்டக்களப்பில் நேற்றும் பகிஷ்கரிப்பு!

மட்டக்களப்பு,ஜுலை17

யாழ்.பல்கலைக்கழக மாணவன் திவ்வியனை விடுதலை செய்ய வேண்டும் என்றும், யாழ் பல்கலைக்கழகத்தை மீண்டும் திறக்க வேண்டும் எனறும் கோரி மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்கள் நேற்றும் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காலையில் மிகக்குறைந்த எண்ணிக்கையான மாணவர்கள் பாடசாலைகளுக்குச் சென்ற போதிலும் அவர்களும் சற்றுநேரத்தில் பாடசாலைகளை விட்டு வெளியேறினர். நேற்று ஆரம்பமாக இருந்த இரண்டாம் தவணைப்பரீட்சைகள் அனைத்தும் வேறு ஒரு தினத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாக வலயக்கல்விப்பணிப்பாளர் தி.பொன்னம்பலம் தெரிவித்தார்.

கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களும் விரிவுரைகளைப் பகிஷ்கரித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அனைத்துப்பீட மாணவர்களும் சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு பல்கலைக்கழக வளவினுள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஸ்ரீலங்கா அரசாங்கத்தைக் கண்டிக்கும் சுலோக அட்டைகளை மாணவர்கள் தாங்கியிருந்தனர். துணைவேந்தர் பேராசிரியர் எம்.எஸ்.மூக்கையா மாணவர் பேரவை பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தினர். தமது கோரிக்கைகள் நிறைவேறும் வரை விரிவுரைகளுக்கு சமுகமளிக்கப் போவதில்லை என மாணவர் பிரதிநிதிகள் தெரிவித்ததாக அறியவந்தது. (உ-21)

## கல்முனையில் களேபரத்தை அடுத்து உத்தியோகப் பற்றற்ற ஊரடங்கு

மட்டக்களப்பு,ஜுலை17

கல்முனையில் நேற்றுக் காலை இடம்பெற்ற களேபரங்களை அடுத்து அங்கு காலை 10 மணியுடன் உத்தியோகப்பற்றற்ற ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்த ஊரடங்குச் சட்டத்தை அறிவித்த விசேட அதிரடிப் படையினர், அங்கு நடமாடிய பொது மக்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் கூறப்படுகின்றது.

கல்முனையில் கடந்த சனிக்கிழமை முஸ்லிம் மாணவர்கள் இருவர் பொலீஸாரினால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தின் எதிரொலியாக இன்று காலையும் கல்முனை நகரில் மாணவர்களும் பொதுமக்களும் ஆர்ப்பாட்டம் செய்தனர். அந்த இடத்திற்கு வந்த விசேட அதிரடிப்படையினர்மீது இளைஞர்கள் கற்களை வீசியதாகக் கூறப்படுகின்றது. இதனையடுத்து பொதுமக்களை விசேட அதிரடிப்படையினர் அடித்து விரட்டினர். விசேட அதிரடிப்படையினரின் தாக்குதலில் காயமடைந்த முஸ்லிம் இளைஞர் ஒருவர் காயமடைந்து மட்டக்களப்புப் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வாகனம் ஒன்றையும் விசேட அதிரடிப் படையினர் தீவைத்துக் கொளுத்தியதாகவும் கூறப்பட்டது. கலவரங்கள் கட்டுக்கடங்காமல் போனதையடுத்து கல்முனைப் பிரதேசத்தில் வீதியில் யாரும் நடமாடக்கூடாது என விசேட அதிரடிப்படையினர் உத்தரவிட்டனர். நேற்று கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளும் இயங்கவில்லை. (உ-21)

## அம்பாறைப் பிரதேசத்தில் சிங்களவர் ஆர்ப்பாட்டம்

அம்பாறை, ஜுலை 17

அம்பாறைப் பிரதேசத்திலுள்ள சிங்கள மக்கள் நேற்றுமுன்தினம் மாலை முதல் படையினருக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வியாழக்கிழமை மட்டக்களப்பு கிரான் குளத்தில் வைத்து இனம் தெரியாதோரால் கடத்தப்பட்ட அம்பாறை வாசிகளில் இருவர் மறுநாள் சடலங்களாக மீட்கப்பட்டனர்.

இதனையடுத்து -

பொதுமக்களைப் பாதுகாப்பதற்கு படையினர் தவறிவிட்டனர் எனத் தெரிவித்து அம்பாறைப் பிரதேச சிங்கள மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அங்கு கடைகள், தனியார் நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள் என்பன நேற்று முதல் இயங்கவில்லை.

இப்பகுதியில் வெள்ளை மற்றும் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளன.மக்கள் ஆங்காங்கே வீதியில இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருப்பதால் போக்குவரத்துக்களும் தடைப்பட்டிருப்பதாக செய்தி ஏஜென்ஸி தெரிவித்தது. (உ-4-6)

## நெதர்லாந்தில் 'பொங்கு தமிழ்'

நெதர்லாந்தில் நேற்று 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வு உணர்ச்சி பூர்வமாகக் கொண்டாடப்பட்டது.

எழுநூறுக்கும் மேற்பட்ட ஈழத் தமிழர்கள் கலந்துகொண்ட இந்த நிகழ்வில் மண் மீட்புப் போரில உயிர் நீத்த மாவீரருக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டது.

யாழ். பல்கலைக்கழகச் சமூகத்தினரால் கடந்த ஜனவரியில் பிரகடனப்படுத்தப்பட்ட - சுயநிர்ணய உரிமை, மரபுவழித்தாயகம் ஆகியனவே ஈழத் தமிழர்களின் அபிலாஷை என்ற - பொங்கு தமிழ் பிரகடனம் இந்த நிகழ்வில் நினைவு கூரப்பட்டது. (உ-6)



டாக்டர் வி.யோகேஸ்வரன் தலைமையிலான புதிய குழு, சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் 2001 - 2002 ஆம் ஆண்டுக்கான நிர்வாகத்தைப் பொறுப்பேற்பது தொடர்பான வைபவம் கடந்த சனியன்று மாலை மருதனார்மடத்தில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரியின் விவசாய நிலைய கலந்துரையாடல் மண்டபத்தில் நடைபெற்றது. கடந்த வருடம் நிர்வாகக் குழுவின் பதில் தலைவரும் இக்கழகத்தின் ஸ்தாபகத் தலைவருமான லயன் சட்டத்தரணி எஸ்.பி.சிவஞானம் உரையாற்றுவதையும், புதிய தலைவர் டாக்டர் வி.யோகேஸ்வரன் (இடது புறத்திலும்), பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட லயன்ஸ் கழக பிராந்திய இணைப்பாளர் லயன் எஸ்.பத்மநாதன் மற்றும் பிராந்தியத் தலைவர் லயன் ஞானராஜா, மற்றுமொரு பிராந்திய இணைப்பாளர் லயன் தங்கராஜா (வலது புறத்திலும்) அமர்ந்திருப்பதை முதல் படத்திலும், புதிதாகப் பதவியேற்ற நிர்வாகக் குழுவை 2 ஆவது படத்திலும் காணலாம்.



முதற்கட்டப் பேச்சுக்க... பின் முஷாரப்பும் வாஜ்பாயும்

# வாஜ்பாய் - முஷாரப் இடையே முதற்கட்டப் பேச்சுக்கள் திருப்தி

## இரு தரப்பும் தகவல்

புதுடில்லி,ஜூலை17

பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளரும் அதிபருமான பர்வேஷ் முஷாரப்புக்கும் இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கும் இடையிலான முதற்கட்டப் பேச்சுக்கள் வெளிப்படையானவையாகவும் உறுதியானவையாகவும் அமைந்தன என்று இரு நாடுகளும் தெரிவித்துள்ளன.

நேற்று முன்தினம் ஆக்ராவில் இடம்பெற்ற பேச்சுக்கள் திட்டமிட்ட முக்கால் மணி நேரத்தைத் தாண்டி ஒன்றரை மணி நேரம் நடந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

காஷ்மீர் விவகாரம், எல்லை தாண்டிய பயங்கரவாதம் மற்றும் இருதரப்பு விடயங்கள் குறித்து இந்தப் பேச்சுக்களில் ஆராயப்பட்டதாகக் கூறப்பட்டது. காஷ்மீர் விவகாரமே பேச்சுக்களில் முக்கிய இடம்பெற்றதாக சுயாதீனச் செய்திகள் தெரிவித்தன.

எனினும் நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சுக்களின் விவரம் குறித்து இந்தியத் தரப்பு வெளியிட்ட தகவல்களை பாகிஸ்தான் கண்டனம் செய்துள்ளது.

நேற்றுக் காலை செய்தியாளர்களிடம் பேசிய ஜெனரல் முஷாரப்பும் இந்திய அறிக்கை குறித்துத் தனது கண்டனத்தைத் தெரிவித்தார்.

முன்னதாக நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சுக்கள் குறித்து அறிக்கை வெளியிட்ட இந்திய தகவல் துறை அமைச்சர் திருமதி சுஷ்மா சுவராஜ், இந்தியாவுக்கு அக்கறையான நான்கு விடயங்கள் பற்றி இரு தலைவர்களும் பேச்சு நடத்தியதாகத் தெரிவித்திருந்தார். காஷ்மீர் விவகாரம் குறித்துப் பேசப்பட்டதாக அவரது அறிக்கையில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இதனைக் கண்டித்து பாகிஸ்தான் தரப்பு வெளியிட்ட அறிக்கையில் -

காஷ்மீர் விவகாரத்தைவிட்டு ஏனைய விடயங்கள் குறித்து பிரதமர் வாஜ்பாய் பேச முற்பட்ட போது முக்கிய விடயமான காஷ்மீர் விவகாரம் குறித்து பேசிய பின்னர் ஏனைய விடயங்கள் குறித்துப் பேசலாம் என்று ஜெனரல் முஷாரப் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காஷ்மீர் மக்கள் விருப்பத்துக்கமைய தீர்வு காணப்படாவிட்டால் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரமான ஒரு முடிவு காணமுடியாது என்று முஷாரப் வாஜ்பாயிடம் திட்டவட்டமாகக் கூறிவிட்டதாகவும் பாகிஸ்தான் அறிக்கை தெரிவித்தது.

இதற்கிடையில் ஜெனரல் முஷாரப்பும் பிரதமர் வாஜ்பாயும் நேற்றுக் காலை மீண்டும் சந்தித்து மூன்றாம் கட்டப் பேச்சுக்களில் ஈடுபட்டனர்.

இந்தப் பேச்சுக்கள் சுமார் ஒரு மணி நேரம் இடம்பெற்றன. இதிலும் இரு தரப்பு விவகாரங்கள் குறித்தும் மேற்கொண்டு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இரு நாட்டுத் தலைவர்களும் விரிவாக ஆராய்ந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# எந்தப் பேச்சுக்களுக்கும் காஷ்மீரே மையமானது

## ஜெனரல் முஷாரப் கூறுகிறார்

ஆக்ரா,ஜூலை17

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான எந்த அர்த்தமுள்ள பேச்சுக்கும் காஷ்மீர் பிரச்சினையே மையமானது என்று பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளரும் அதிபருமான பர்வேஷ் முஷாரப் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை இரண்டாம் சுற்றுப் பேச்சுக்களில் கலந்து கொள்வதற்கு முன்னர் செய்தியாளர்களிடம் பேசிய முஷாரப் இதனைத் தெரிவித்தார். காஷ்மீர் விவகாரத்தை பிரச்சினை என்று கூறினாலும் சரி தகராறு என்று கூறினாலும் சரி இதற்கு தீர்வு காண்பதற்கான நடவடிக்கை இன்றி இரு நாட்டு உறவுகளிலும் எந்த முன்னேற்றத்தையும் காண முடியாது என்றும் முஷாரப் தெரிவித்தார்.

காஷ்மீர் விவகாரத்தைத் தீர்ப்பதற்குப் படிப்படியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன் முதற்கட்டமாக பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டும். அதனை ஏற்கனவே தொடங்கிவிட்டோம். பின்னர் இந்த விவகாரத்தைத் தீர்ப்பதற்கான உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கான வாய்ப்புக்களைத் துல்லியமாகக் கண்டறிய வேண்டும் என்று மேலும் சொன்னார். (ம)

# ஏவுகணை எதிர்ப்புச் சோதனைக்கு ரஷ்யா கடும் கண்டனம் தெரிவிப்பு

மொஸ்கோ,ஜூலை17

பசுபிக் சமுத்திரத்தில் நேற்று முன்தினம் அமெரிக்கா நடத்திய ஏவுகணை எதிர்ப்புச் சோதனைக்கு ரஷ்யா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் இந்த ஏவுகணை எதிர்ப்புச் சோதனை 1972இல் செய்து கொள்ளப்பட்ட கண்டம்விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைத் தவிர்ப்பு உடன்படிக்கையையும், சர்வதேச ஆயுதக் களைவு ஒப்பந்தத்தையும் மீறுவதாக அமைகின்றது என்று ரஷ்ய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

கண்டம்விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைத் தவிர்ப்பு உடன்படிக்கையைப் பேணுவதும் அதனை வலுப்படுத்துவதும் அவசியமானது என்று ரஷ்யா கருதுகின்றது. எனவே அமெரிக்கா உடனடியாகத் தனது திட்டத்தை நிறுத்தவேண்டும் என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல நாடுகளினதும் எதிர்ப்பையும் மீறி அமெரிக்கா ஏவுகணை எதிர்ப்பு சோதனையை நடத்தியுள்ளமை ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் மீண்டும் ஆயுதப் போட்டிகளை உருவாக்கும் என்று அஞ்சப்படுகின்றது. (ம-9)

தாஜ்மஹால் முன்பாக முஷாரப் தம்பதிகள்



# முஷாரப்புக்கு 'சல்யூட்' அடிக்க இந்தியத் தளபதி பின்னடிப்பு!

புதுடில்லி,ஜூலை17

பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளரும் ஜனாதிபதியுமான ஜெனரல் பர்வேஷ் முஷாரப்பின் இந்திய விஜயத்தின் போது அவருக்கு இந்திய ஜனாதிபதி மாளிகையில் அளிக்கப்பட்ட வரவேற்பில் பல படை அதிகாரிகள் அவருக்கு 'சல்யூட்' அடித்து மரியாதை செலுத்தினர். ஆனால் இந்திய விமானப் படைத் தளபதி டிப்னிஸ் அவருக்கு 'சல்யூட்' அடிக்கவில்லை. முஷாரப்புடன் அவர் கைகளை மட்டும் குலுக்கிக் கொண்டார்.

கடந்த சனியன்று காலை இந்த முறைப்படியான வரவேற்பு அளிக்கப்பட்டது. ஜெனரல் முஷாரப்பை இந்திய ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் வரவேற்றதை அடுத்து, அவருக்கு இந்தியாவின் முப்படைத் தளபதிகளை அறிமுகப்படுத்தும் நிகழ்வு இடம்பெற்றது. அப்போதே இந்திய விமானப்படைத் தளபதி, ஜெனரல் முஷாரப்புக்கு அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டார். முஷாரப்பும் டிப்னிஸும் கைகுலுக்கிக் கொண்டனர். ஆனால் டிப்னிஸ் 'சல்யூட்' அடிக்கவில்லை. இத்தகைய வரவேற்புகளில் வழமையான செயற்பாடு காரணமாக தம்முடைய பாட்டில் 'சல்யூட்' அடிக்கப் போன முஷாரப், விமானப்படைத் தளபதி 'சல்யூட்' அடிக்காததை உணர்ந்து கொண்டு, தனது கையை சடக்கென இறக்கிக்கொண்டார்.

1999ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் வாஜ்பாய் பஸ் மூலம் பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்டபோது இந்திய - பாகிஸ்தான் எல்லையான வாகா பகுதியில் அவரை வரவேற்பதற்கு பாகிஸ்தானின் முப்படைத் தளபதிகளும் மறுத்திருந்தனர். அவர்களுள் பாகிஸ்தானின் அப்போதைய இராணுவத் தளபதியான ஜெனரல் முஷாரப்பும் அடங்குவார். அதற்குப் பதிலடியாகவே அவருக்கு 'சல்யூட்' அடிக்க இந்திய விமானப்படைத் தளபதி மறுத்ததாகக் கூறப்படுகின்றது. (உ)

# 2008ஆம் ஆண்டு ஒலிம்பிக்கை நடத்தும் வாய்ப்பு சீனாவுக்கு!

## கடும் எதிர்ப்புக்கு மத்தியிலும் கிடைத்தது

மொஸ்கோ,ஜூலை17

மனித உரிமைகள் அமைப்புக்களின் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் 2008 ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் போட்டிகளை நடத்தும் வாய்ப்பை சீனத் தலைநகர் பெய்ஜிங் பெற்றுக் கொண்டிருக்கின்றது.

கடந்த வெள்ளியன்று நடந்த சர்வதேச ஒலிம்பிக் குழுவின் கூட்டத்தில் சீனாவுக்கு இந்த வாய்ப்பை அளிப்பதான முடிவு வாக்கெடுப்பு மூலம் தீர்மானிக்கப்பட்டது.

இரண்டாயிரமாம் ஆண்டுக்குரிய ஒலிம்பிக் போட்டிகளை நடத்தும் சந்தர்ப்பத்தை சிட்னியிடம் இரண்டு வாக்குகள் வித்தியாசத்தில் கோட்டைவிட்ட பெய்ஜிங் இம்முறை மிக அதிக வாக்கு வித்தியாசத்தில் அந்த வாய்ப்பைத் தட்டிச் சென்றுள்ளது.

இம்முறை முதல் சுற்று வாக்களிப்பில் பெய்ஜிங் - 44, ரொறன்ரோ - 20, இஸ்தான்புல் - 17, பாரிஸ் - 15, ஒஸாகா - 6 ஆதரவு வாக்குகளைப் பெற்றன. ஒஸாகா நகரை நீக்கிவிட்டு நடத்தப்பட்ட இரண்டாம் சுற்று வாக்கெடுப்பில் பெய்ஜிங் - 56 ரொறன்ரோ - 22, பாரிஸ் - 18, இஸ்தான்புல் - 9 வாக்குகளைப் பெற்றதை அடுத்து, 2008 ஆம் ஆண்டுக்குரிய ஒலிம்பிக் நடத்தும் வாய்ப்பு பெய்ஜிங்குக்கு வழங்கப்படுவதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

சீனாவுக்கு வெளியே இருந்தபடி திபெத் அரசுக்கு தலைமை வகிப்பவர் என்று கூறப்படும் மதத் தலைவா தலாய் லாமா "இந்த முடிவு சீனாவின் அடக்குமுறைகளை ஊக்கப்படுத்துவதாகவே அமையும்" - என்று புதுடில்லியில் வைத்துக் கூறினார்.

"இந்த விளையாட்டுக்களை நடத்தும் அடிப்படைத் தகுதி தனக்கு உண்டா என்பதை சீனா நிரூபிக்கத்தான் வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ள சர்வதேச மன்னிப்புச் சபை "சீனாவில் மரணதண்டனை விதிக்கப்பட்டவர், அத்தண்டனைக்கு உட்படுத்தப்பட முன்னர் பொதுமக்களின் முன்னால் அவமானப்படுத்தப்படும் சடங்கை நிகழ்த்துவதற்காக இந்த விளையாட்டு மைதான ஸ்டேடியங்களுக்கு அழைத்து வரப்படுவதுதான் வழமை என்பதே வேதனைக்குரிய விடயம்" - என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

மதத் தலைவர்களை சிறையில் அடைப்பதற்காகக் கடுமையாக விமர்சிக்கப்பட்டு வந்த பெய்ஜிங் குறித்து, இந்த வாக்கெடுப்புக்குச் சரியாக ஒரு வாரத்துக்கு முன்னர் அறிக்கை ஒன்றை வெளியிட்ட சர்வதேச மன்னிப்புச் சபை, கடந்த மூன்று மாத காலத்தில் மட்டும் ஆயிரத்து 781 பேருக்கு சீனா மரணதண்டனை விதித்திருப்பதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன என்று குறிப்பிட்டிருந்தது.

மனித உரிமைகள் விடயத்தில் மிகமோசமான பதிவுகளைக் கொண்டிருக்கும் சீனாவுக்கு ஒலிம்பிக் நடத்தும் வாய்ப்பைக் கொடுப்பது பொருத்தமானதல்ல என்று அதே தினத்தில் ஐரோப்பிய நாடாளுமன்றமும் கூறியிருந்தது.

எனினும் இந்த எதிர்ப்புக்களையெல்லாம் மீறி ஒலிம்பிக் நடத்த வாய்ப்புக் கிடைத்ததை ஒட்டி சீனாவில் பெரும் கொண்டாட்டங்களும் மகிழ்ச்சி ஆரவார நிகழ்ச்சிகளும் இடம்பெற்று வருகின்றன. (உ)



உலகின் அதிக சனத்தொகை கொண்ட நாடு எனக் கருதப்படும் சீனாவுக்கு ஒலிம்பிக் விளையாட்டுகளை நடத்தும் வாய்ப்பு கிடைத்ததை ஒட்டி தலைநகர் பெய்ஜிங்கின் சங்கன் அவென்யூவில் இடம்பெற்ற கொண்டாட்டங்களின் போது எடுக்கப்பட்ட படம்.

# காஷ்மீர் மோதல்களில் 39 பேர் பலி!

புதுடில்லி,ஜூலை17

காஷ்மீர் விவகாரம் குறித்து இந்திய, பாகிஸ்தான் தலைவர்கள் பேச்சு நடத்திக்கொண்டிருந்த அதே சமயம் - நேற்று முன்தினம் - ஜம்மு காஷ்மீரில் இடம்பெற்ற பல்வேறு மோதல்களில் மொத்தம் 39 பேர் உயிரிழந்தனர்.

காஷ்மீரில் இரு இராணுவ நிலைகள் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல்களில் ஐந்து படையினர் பலியாகினர்; 13 பேர் காயமடைந்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜம்முவில் தீவிரவாதிகளுடன் இடம்பெற்ற மோதலில் 20 தீவிரவாதிகளை தாம் சுட்டுக் கொன்றுள்ளதாகவும் -

காஷ்மீரில் இடம்பெற்ற வேறு இரு மோதல்களில் எல்லை தாண்டி ஊடுருவ முயன்ற 14 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் - இந்திய இராணுவம் தெரிவித்துள்ளது. (ம)

## மாகாண மட்டத் தமிழ்த்தினப் போட்டி

# 14 முதலிடங்களைப் பெற்று

# யாழ். மாவட்டம் முன்னணியில்!

யாழ்ப்பாணம், ஜூலை 17

வடக்கு — கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் மாகாண மட்டத்தில் — திருகோணமலையில் — நடத்தப்பட்ட தமிழ்மொழி தினப் போட்டிகளில் யாழ். மாவட்டம் 14 முதலிடங்களைப் பெற்று மாகாண மட்டத்தில் முதன்மை பெற்றுள்ளது.

இந்தப் போட்டிகளில் திருகோணமலை மாவட்டம் 10 முதலிடங்களையும், வவுனியா மாவட்டம் 5 முதலிடங்களையும், மட்டக்களப்பு மாவட்டம் 6 முதலிடங்களையும், மன்னார் மாவட்டம் 2 முதலிடங்களையும், கல்முனை மாவட்டம் 5 முதலிடங்களையும், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்கள் முறையே தலா ஒவ்வொரு முதலிடங்களையும் பெற்றுள்ளன.

முதலாவது இடத்தைப் பெற்ற யாழ்.மாவட்ட மாணவர்கள் மற்றும் அவர்களின் பாடசாலை விவரம் வருமாறு:-

★ பிரிவு i (ஆக்கம்):- மு. மெடோன் ஆன்சியா (சென். ஜோண் பொஸ்கோ)

★ பிரிவு iii (கட்டுரை–கடிதம்):– ஸ்ரீவரதன் சுகிர்தா (வேம்படி மகளிர்)

★ பிரிவு iv (கட்டுரை - சுருக்கம்) :– சி. சாலினி(வேம்படி மகளிர்)

★ திறந்த போட்டி (குறுநாடகம்):- அ. செ. லிண்டா (திருக்குடும்பக் கன்னியர் மடம்)

★ பிரிவு iv (சிறுகதை ஆக்கம்) :-ஸ்ரீதரன் அம்பிகா(சுண்டுக்குளி (மகளிர்)

★ பிரிவு v (சிறுகதை ஆக்கம்):- இ. சர்வேஸ்வரா (யாழ். இந்து)

★ பிரிவு iv (பாவோதல்):– ம. திருவரங்கன் (யாழ்ப்பாணக் கல்லூரி)

★ பிரிவு iii (இசை — தனி):– கு. ஜெகதீசன் (யூனியன் கல்லூரி)

★ பிரிவு iv(இசை—தனி):- து. கேசவன் (சாவகச்சேரி இந்து)

★ பிரிவு v (இசை—தனி):- ந. தனசொரூபி (கொக்குவில் இந்து)

★ பிரிவு iii (நடனம் — தனி):– வி. ஜீவிதா (யூனியன் கல்லூரி)

★ பிரிவு iv (நடனம் — தனி):- ஏ. சுபத்திரா (வேம்படி மகளிர்)

★ திறந்தபோட்டி (வில்லுப்பாட்டு) :– யாழ்ப்பாணக் கல்லூரி

★ திறந்தபோட்டி (விவாதம்) :– சென்· ஜோண்ஸ் கல்லூரி.

போட்டிகளில் இரண்டாம், மூன்றாம் இடங்களைப்பெற்ற யாழ். மாணவர்களின் விவரம் (பாடசாலை உட்பட) வருமாறு :-

★ பிரிவு ii (கட்டுரை) :– க. மாதங்கி (வேம்படி மகளிர்)

★ பிரிவு V (திறனாய்வு) :- க. சிவதாரணி (பரு. மெதடிஸ்த பெ. உ. பா.)

★ பிரிவு iV (கவிதை ஆக்கம்):- ஆ. மதுரா (வசாவிளான் ம. ம. வித்.)

★ பிரிவு ii (பேச்சு):- யூட். பிரதீபன் (புனித ஹென்றியரசர்)

★ பிரிவு ii (பேச்சு):– பே. புஸ்பனா (மகாஜனா)

★ பிரிவு V (பேச்சு):. கு. பார்மதி (யூனியன் கல்லூரி)

★ பிரிவு ii (பாவோதல்) டா. நிரோஜா (அராலி சரஸ்வதி ம. வி)

★ பிரிவு iii (பாவோதல்):- ஸ்ரீ. தாரணி (யாழ். இந்து மகளிர் கல்லூரி).

★ பிரிவுV (பாவோதல்):– பா. பிரணவன் (மகாஜனா).

★ பிரிவு ii (இசைதனி ):- தெ. பவனுஜா (வேம்படிமகளிர்)

★ பிரிவு ii (நடனம் — தனி):– யோ. வினோதா (வேம்படிமகளிர்)

★ திறந்தபோட்டி(நடனம் குழு):- இராமநாதன் கல்லூரி)

★ திறந்த போட்டி (நாடகம்):– ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

★ திறந்த போட்டி (தமிழ் அறிவு வினா விடைப் போட்டி):– ஸ்கந்தவரோதயக்கல்லூரி).

(7)

## நவீன சந்தைக் கட்டடத்துக்கு அடிக்கல்

திருநெல்வேலி நவீன சந்தைக் கட்டத் தொகுதிக்கு அடிக்கல் நடும் வைபவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது.

மூன்று மாடிகளைக் கொண்ட இக்கட்டத் தொகுதிக்கான அடிக்கல்லை ஈ. பி. டி. பி. யாழ். மாவட்ட பிரதி அமைப்பாளரும், நல்லூர் பிரதேச சபைத் தலைவருமான க. மணிபல்லவராஜன் நட்டார்.

இவ்வைபவத்தில் அரச அதிபர் க. சண்முகநாதன், பொறியியலாளர் பி. கிரிதரன் மற்றும் நல்லூர் பிரதேசசபை அதிகாரிகளும், ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

இதற்கான 60 லட்சம் ரூபா நிதியை ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும், வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு — கிழக்கு தமிழ் விவகார அமைச்சருமான கே. என். டக்ளஸ் தேவானந்தா ஒதுக்கியிருந்தார். (ஐ-9)

## கைதடி கூ. சங்க ஊழியருக்கு புதிய சம்பளக் கொடுப்பனவு

அரியாலை, ஜூலை 17

கைதடி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் பணியாளர்களுக்கான புதிய சம்பளக் கொடுப்பனவை இம் மாதம் முதல் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகச் சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கைதடி ப. நோ. கூ. சங்கம் பணியாளர்களுக்குப் புதிய சம்பளத் திட்டத்தை அமுல்ப்படுத்தும் பட்சத்தில் குடாநாட்டில் புதிய சம்பளத்திட்டத்தை அமுல் செய்யும் பத்தாவது கூட்டுறவுச் சங்கமாக அது இருக்கும்.

(ஐ-17)

## சாகித்திய விழாவுக்கான விண்ணப்பங்கள் சேகரிப்பு

வடமராட்சி கிழக்கு, ஜூலை 17

வடமராட்சி கிழக்கு பிரதேச மட்டத்திலான சாகித்திய விழாவுக்கான போட்டிகளுக்கு பாடசாலைகளிலிருந்தும், தனியாரிடம் இருந்தும், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவு கலை கலாசார பேரவையினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கவியரங்கம், சிறுகதை, சமூக நாடகம், புராண நாடகம், நாட்டுக்கூத்து, கரகம், காவடி,கோலாட்டம், கும்மி, வில்லிசை ஆகிய போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்போட்டிகளில் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வசிப்போரும், இப்பிரிவிலுள்ள அலுவலகங்களில் கடமையாற்றுபவர்களும் மட்டுமே விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-182)

## கைதடியில் நிவாரண விநியோகம்

அரியாலை, ஜூலை 17

கைதடிப் பகுதியில் இயங்கி வரும் கைதடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இரண்டு கிளைகளிலும் மொத்தமாக 750 குடும்பங்களுக்கு இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டு வருவதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ–17)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 23 — 12 — 1949



மறைவு 17 — 06 — 2001

### திருமதி ஜெயராஜா நாகேஸ்வரி
(பாலாமணி)

சுடர்தந்த பேரொளி சொல்லாமல் போனதெங்கே?
உயிர்தந்த உன்னுரு நிலத்தினில் வீழ்ந்ததிங்கே!
உருத்தந்த நீயின்று உருவிழந்து போனபின்
கண்ணீரில் நாமினிக் காலத்தைக் கழிப்பதெங்கே?

அழுகைக்கு இனிமேல் ஆறுதல் இல்லை!
அன்புக்கு இனிமேல் அணைகரம் இல்லை!
உயிருக்கு இனிமேல் உணர்வுகள் இல்லை;
கொற்றவா எம் மனைக்குக் குரலினி இல்லை!

எங்கள் குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி கேட்டவுடன் எமதில்லம் நாடி ஓடோடி வந்து எமக்கு ஆறுதல் கூறியோருக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து எமது துயரில் பங்கு கொண்டோருக்கும் மற்றும் பல வழிகளிலும் எமக்கு உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்களுக்கும், உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் தபால், தந்தி, தொலைபேசி மூலம் எம்முடன் தொடர்பு கொண்டு துயர் பகிர்ந்தோருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவிக்கின்றோம்.

இன்று (17-07-2001) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய வைபவத்திலும் அன்னாரின், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்கின்றோம்.

- கணவன், பிள்ளைகள்

25/1, அம்பலவாணர் வீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம்.

(90144)


## அபிவிருத்தி தொண்டர்களுக்கு பயிற்சி

வடமராட்சி கிழக்கு, ஜூலை 17

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 100 அபிவிருத்தித் தொண்டர்களுக்கு ஐந்து பயிற்சி நெறிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தையல் இயந்திரம் திருத்துதல், விவசாய உபகரணங்கள் திருத்துதல் ஆகிய பயிற்சிகள் பருத்தித்துறையிலும் —

வலை பின்னல் பயிற்சி, கடல் உணவு தயாரித்தல் பயிற்சி, பனம் பொருள் உற்பத்திப் பயிற்சி ஆகியன குடத்தனைப் பகுதியிலும் — நடத்தப்பட்டு வருகின்றன.

அபிவிருத்தி தொண்டர்கள், முன்னர் அப் பகுதியிலுள்ள பாடசாலைகளிலும், பொது இடங்களிலும் பல்வேறு சிரமதானப் பணிகளை மேற்கொண்டனர்.

(ஐ-182)

## இன்று நினைவு ஆராதனை



வண. அறிவர் டி. ரி. நைல்ஸ் அவர்களின் 31 ஆவது ஞாபகார்த்த நினைவு நாள் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு பரி. பேதுரு ஆலய நிமர் மண்டபத்தில் நடைபெறுகின்றது.

அன்னார் 1908 ஆம் ஆண்டு மே மாதம் 4 ஆம் திகதி தெல்லிப்பழையில் பிறந்து, யாழ். மத்திய கல்லூரி இலங்கைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் கல்வி கற்றுப் புலமை பெற்றார்.

பெங்களூரில் இறையியல் கல்வியைப் பெற்ற இவர் 1935 ஆம் ஆண்டு அனைத்துலக கிறிஸ்தவ மாணவர் இயக்கம் நடத்திய மாநாட்டில் கலந்து கொண்டு சமயப்பணி புரிந்தார். 1936 ஆம் ஆண்டு குரு அபிஷேகம் பெற்ற இவர் 1938 ஆம் ஆண்டு தாம்பரத்தில் நடைபெற்ற அனைத்துலக மிஷனறி மாநாட்டில்கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினார்.

1941 முதல் 1945 வரையிலான காலப் பகுதியில் இவர் இலங்கை தேசிய கிறிஸ்தவ சங்கத்தின் (N. C. C) பொதுச் செயலாளராகக் கடமையாற்றினார். 1948 ஆம் ஆண்டு இடம்பெற்ற அனைத்துலக சபைகளின் முதற் பேரவையின் தொடக்க வழிபாட்டில் கலந்துகொண்டு இவர் சிறப்புச் சொற்பொழிவும் ஆற்றியுள்ளார்.

1950 முதல் 1953 வரையிலான மூன்று வருட காலப் பகுதியில் கொழும்பு புனித வேதாகம ஆய்வு மன்றத்தின் இயக்குநராகவும் இவர் கடமையாற்றியுள்ளார். 1956 முதல் 1962 வரையிலான 6 வருடகாலம் யாழ். மத்திய கல்லூரியின் அதிபராக விளங்கிய இவர் அந்த நாள்களில் கல்லூரியின் வளர்ச்சிக்கு அரும்பணி ஆற்றினார்.

ஆற்றிய பணிகள் காரணமாக இவர் அனைத்துலகத் திருச்சபை மன்ற ஏழு தலைவர்களில் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அனைத்துலகத் திருச்சபைக்கு ஆற்றி வந்த பெரும்பணிக்காக வெளிநாடுகளில் உள்ள மூன்று நிறுவனங்கள் இவருக்கு டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்துள்ளன.

★

உதயன்

## விடுவிப்பை விரைந்து செய்க!

வேகமும் வேண்டும்; அத்துடன் விவேகமும் வேண்டும். விடயங்களை வெற்றிகொள்ள இவை இரண்டும் அவசியம்.

தற்போதைய நெருக்கடி நிலையில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இந்த உண்மையை நன்கு உணர்ந்துகொண்டு அறிவு ரீதியாகச் செயற்பட்டிருப்பது அதன் பிந்திய அறிக்கையில் தெளிவாகத் தெரிகின்றது.

கல்விச் சமுதாயத்தின் நன்மை கருதித்தான் பகிஷ்கரிப்புப் போராட்டம் யாழ்.பல்கலைக்கழகத்துக்கு வெளியே பாடசாலைகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. யாழ்.பல்கலைக்கழக மாணவன் திவ்வியனுக்கு ஏற்பட்ட கதி ஏனைய மாணவர்களுக்கும் ஏற்படாமல் பார்த்துக்கொள்வதும் அதன் நோக்கங்களில் ஒன்று.

அதேசமயம் நமது கல்விச் சமுதாயத்தின் நன்மை கருதி மேற்கொள்ளப்படும் நடவடிக்கை கல்விச் சமுதாயத்திற்கு அழிவு தருவதாக இருந்துவிடக் கூடாது என்பதிலும் நாம் சிரத்தையாக இருக்கவேண்டும். அந்த அடிப்படையில்தான் பாடசாலை பகிஷ்கரிப்பைக் கைவிடுமாறு கோருவது என்ற முடிவுக்குத் தாங்கள் வந்ததாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குறிப்பிட்டிருப்பது விதந்துரைக்கப்பட வேண்டியதாகும்.

ஜி.சீ.ஈ. (உயர்தரப்) பரீட்சை, ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை, இரண்டாம் தவணைப் பரீட்சை எனப் பல்வேறு தேர்வுகளுக்கு அடுத்து வரும் நாள்களில் அல்லது வாரங்களில் மாணவர்கள் முகம் கொடுக்க வேண்டிய நெருக்கடியில் இருக்கும் போது, எதிரிக்கு எதிர்ப்புக் காட்டுவதாகக் கூறிக்கொண்டு அந்த எதிரி விரும்பும் செயலைச் செய்வதா என்ற யதார்த்தபூர்வ நிலைப்பாட்டை மாணவர் தரப்பு உணர்ந்து உரிய நடவடிக்கை எடுத்திருப்பது வரவேற்கத்தக்கது.

அதேசமயம் -

இது தொடர்பான தமது அறிக்கையில் மாணவர் ஒன்றியம் சுட்டிக் காட்டியுள்ள சில விடயங்களும் இங்கு மீண்டும் வலியுறுத்தப்பட வேண்டியவையாகும்.

கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள மாணவன் திவ்வியனை - இவ்வளவு சர்ச்சைகள், பிரச்சினைகளுக்குப் பின்னரும் கூட - விடுதலை செய்யாமல் அல்லது நீதிமன்றத்தில் ஆஜர் செய்யாமல் அரசுத் தரப்பு காலத்தை இழுத்தடித்து வருவது ஏன்?

இதில் தொடர்ந்தும் காலதாமதம் - அல்லது இழுத்தடிப்பு - காட்டப்படுமானால் -

தாம் சித்திரவதை செய்ததால் ஏற்பட்ட உள், வெளிக் காயங்கள் ஆறும் வரை திவ்வியனை நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதைப் படைத்தரப்பு தாமதித்து வருகின்றது என்ற மாணவர்கள் தரப்பின் குற்றச்சாட்டை நியாயப்படுத்துவதாக அது அமைந்துவிடும் என்பதை, இத்தகைய குற்றச்சாட்டுகளை அவ்வப்போது பத்திரிகை அறிக்கைகள் மூலம் மறுத்து வரும் பாதுகாப்புப் படைகளின் யாழ். தளபதியும், ஏனைய படை மற்றும் பொலிஸ் அதிகாரிகளும் உணர்ந்துகொள்ளவேண்டும்.

பாடசாலைப் பகிஷ்கரிப்பு விடயத்தில் பொதுநலன் கருதி தற்காலிகமாக - சுமுகமான - ஒரு முடிவுக்கு மாணவர்கள் தரப்பு வருவதற்கு படைத் தரப்பில் கூறப்பட்ட உறுதிமொழியும் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவன் திவ்வியனை விடுவிப்பதற்கு அல்லது நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்கு படைத்தரப்பு வழங்கியுள்ளதாகக் கூறப்படும் உறுதிமொழியை உரிய கால அவகாசத்துக்குள் செயற்படுத்துவதே, மீண்டும் குடாநாட்டில் கல்வித்துறை சீர்குலையாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு உதவும்; மூடப்பட்டிருக்கும் யாழ்.பல்கலைக்கழகம் திறக்கப்படுவதற்கு வழிசெய்யும்.

இந்தப் பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு காண வேண்டுமானால் அதனை விரைந்து செய்க என சம்பந்தப்பட்டோரைக் கோர விரும்புகின்றோம்.

# 4 மாகாண சபைகளை கவிழ்க்கத் தயாராகுங்கள்!

## எதிர்க்கட்சிகளுக்கு ரணில் அழைப்பு

கொழும்பு,ஜூலை17

அரசுக்கு எதிரான போராட்டம் வீதி ஆர்ப்பாட்டம் முதல் மாகாண சபைகளைக் கவிழ்ப்பது வரை பல்வேறு கட்டங்களில் தொடர்ந்து தீவிரமாக முன்னெடுக்கப்படும்.

எதிர்க்கட்சிகளின் கூட்டணி இவ்வாறு திட்டமிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சர்வஜன வாக்கெடுப்பைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பது குறித்து எதிர்க்கட்சிகள் கடந்த வெள்ளியன்று ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூடி ஆராய்ந்தன.

ஜனநாயகத்துக்கு முரணாகச் செயற்படும் அரசுக்கு எதிராக சகல எதிர்க்கட்சிகளும் கூட்டாகச் செயலில் இறங்கவேண்டும் என்று ரணில் விக்கிரமசிங்க அங்கு தெரிவித்தார். அரசின் கட்டுப்பாட்டில் உள்ள நான்கு மாகாண சபைகளையும் கவிழ்ப்பது தொடர்பாகவும் ஆலோசிக்குமாறும் ரணில் கட்சிகளைக் கேட்டுக்கொண்டார். (ஐ)

## பூரான் கடித்த 100 பேருக்கு சிகிச்சை

வடமராட்சிப் பிரதேசத்தில் வெள்ளைப் பூரானால் கடியுண்டு மந்திகை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றோரின் எண்ணிக்கை நூறைத் தாண்டியுள்ளது.

கடந்த சனியன்று அல்வாய் கிழக்கைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் அருட்சோதி (வயது 32), உடுப்பிட்டி சந்தை வீதியைச் சேர்ந்த யே.இராஜேஸ்வரன் (வயது 34), துன்னாலை தெற்கைச் சேர்ந்த தியாகர் தங்கவேலு (வயது 50) ஆகியோர் பூரான் தீண்டியதால் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## நாட்டு நடப்பு

### போதை - VIII

மண்டிக் கள் அருந்தினோர்க்கு
மலசல சிக்கல் இல்லை
வண்டியும் சுருக்கம் கண்டு
வயிறொட்டிப் போவ தில்லை
வண்டுகள் பூச்சி பூரான்
வாயாரக் குடித்த எச்சம்
உண்டிடும் போது மீசை
உதவிடும் வடியாய் அன்றோ?

*- விகடகவி -*

# அரசு - எதிர்க்கட்சி மோதலால் சமாதான முயற்சிகள் கிடப்பில்!

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே நோர்வே மேற்கொண்டிருக்கும் சமாதான முயற்சிகளில் பாரிய முட்டுக்கட்டை நிலை ஏற்பட்டிருப்பதாக ராஜதந்திரிகளை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

அரசுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் இடையே நாடாளுமன்ற அதிகாரத்துக்காக ஏற்பட்டிருக்கும் மோதலை அடுத்து உருவாகி இருக்கும் அரசியல் சூழ்நிலை சமாதான முயற்சிகளுக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியிருக்கிறது என்றும் -

"சமாதான முயற்சிக்கு இரு கட்சிகளின் அணுகுமுறை மிக அவசியமானது. ஆனால் இப்போது பிரதான இரு கட்சிகளும் நாடாளுமன்ற அதிகாரத்துக்காகச் சண்டையிட்டுக்கொண்டிருப்பதால் சமாதான முயற்சிகள் கிடப்பில் போடப்பட்டுவிடும்" என்று ஆசிய நாட்டு ராஜதந்திரி ஒருவர் கூறியிருக்கிறார். (ஐ)

# சர்வஜன வாக்கெடுப்பை ஈ.பி.டி.பி. மனப்பூர்வமாக வரவேற்கின்றது

## ஒரே குரலில் ஆதரிப்போம் என்கிறார் டக்ளஸ்

தற்போது நடைமுறையிலிருக்கும் அரசமைப்பு மாற்றப்பட வேண்டும் என்பதில் இந்நாட்டின் பெரும்பாலான மக்கள் ஒருமித்த கருத்தையே கொண்டிருக்கின்றனர். எனினும் தற்போதுள்ள தேர்தல் முறைகளும் அரசமைப்பு விதிமுறைகளும் பெரும்பாலான மக்களின் விருப்பத்திற்கு இசைவான மாற்றங்களை ஏற்படுத்துவதற்குத் தடையாகவே இருக்கின்றன. எனவே இதற்காகப் பொது மக்களின் ஆணையை மீண்டும் பெறும் வகையில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள சர்வஜன வாக்கெடுப்பை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி மனப்பூர்வமாக வரவேற்கின்றது.

ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கான முயற்சியில் இறங்கியிருக்கும் வடக்கு - கிழக்கைச் சேர்ந்த சில கட்சிகள் அரசமைப்பு மாற்றத்தை விடவும் ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டும் என்றே நப்பாசை கொண்டிருக்கின்றன. ஆனால் அரசமைப்பு மாற்றப்படாதவரை ஆட்சிப் பீடத்தில் இருக்கும் ஆள்களை மாற்றிக்கொள்வதால் மட்டும் எந்தப் பிரச்சினையும் தீர்ந்துவிடப் போவதில்லை என்பது தெளிவு.

1978ஆம் ஆண்டில் அன்றைய ஜனாதிபதியான ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அவர்கள் மக்களின் முன்பாகப் பரந்தளவு விவாதத்திற்கு விடப்படாமல் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியை அறிமுகமாக்கி தற்போதைய அரசமைப்பை நடைமுறைக்குக் கொண்டு வந்தார். நாடாளுமன்றத்தில் இருந்த அதீத பெரும்பான்மையைப் பயன்படுத்தி நிறைவேற்றப்பட்ட அரசமைப்பு நாட்டு மக்கள் அனைவர் மீதும் தற்போது பெரும் சுமையாக மாறிப்போயிருக்கிறது.

தற்போது அமுலிலுள்ள அரசமைப்புச் சட்டமானது மக்கள் விரும்பும் மாற்றங்களை ஏற்படுத்துவதற்குப் பெரும் தடையாகவுள்ளது என்பது மறுக்கப்பட முடியாதது. இந்த அரசமைப்பானது தமிழ் பேசும் மக்களின் நலன்களுக்கு மட்டுமன்றி சிங்கள மக்களுக்கும் இலங்கை மக்கள் அனைவரதும் எதிர்கால நலன்களுக்கும் உவப்பானதாக இல்லை என்பது வெளிப்படையானது. இந்த அரசமைப்பு முறை அரசியல் படுகொலைகள் தொடர்வதற்கும், யுத்தம் நீடிப்பதற்கும் உகந்த சூழலையே தோற்றுவித்துக்கொண்டிருக்கிறது.

எனவே இனப்பிரச்சினைக்கு நியாயமான, நிரந்தரமான தீர்வை எட்டுவதற்கும் அதன் மூலம் யுத்தத்திற்கு முடிவு கட்டுவதற்கும் அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கும் ஏதுவாக அனைத்து மக்களினதும் சமத்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் புதிய அரசமைப்பு தோற்றுவிக்கப்பட வேண்டும் என்றே ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி பாடுபடுகிறது.

ஆதலால் ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் சமாதான, சகவாழ்வு காணும் தமது ஆவலை வெளிப்படுத்தும் வகையில் மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்னும் இலக்கை நோக்கி நடைபோடும் வகையிலும், யுத்தத்தின் மூலம் ஏற்படுகின்ற அழிவுகளை தடுத்து நிறுத்த வேண்டும் என்ற எண்ணத்தை வெளிப்படுத்தும் வகையிலும் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக ஒரே குரலில் அரசமைப்பு மாற்றப்பட வேண்டும் என்பதை ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

அரசமைப்பு மாற்றப்பட வேண்டும் என்பதை மறுக்க முடியாத சிலர் கூட இது உகந்த தருணம் அல்ல, பொருத்தமான சூழல் இல்லை எனக் கதைகள் சொல்லுகின்றனர். இதற்கு முன்பாகவும் பல சந்தர்ப்பங்களில் இவ்வாறு கூறப்பட்டதுண்டு. இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்ட போதும் 1989, 1994 பொதுத் தேர்தல்களின் போதும், 2000ஆம் ஆண்டில் புதிய அரசமைப்பு நகல் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போதும், இன்னும் இது போன்ற பல சந்தர்ப்பங்களில் தமிழ் மக்களுக்கு தலைமை தாங்க முற்பட்ட சிலர் இவ்வாறு கூறிக் கொண்டிருந்ததை தமிழ் பேசும் மக்கள் மறந்திருக்கமாட்டார்கள். காலம் எவருக்காகவும் காத்திருக்கப் போவதில்லை. உகந்ததும் பொருத்தமானதுமான சூழல் வரட்டும் என்று காத்துக் கொண்டிருக்க வேண்டும் எனக் கூறுவதும் சரியானதல்ல. எனவேதான் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒரே குரலில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் அரசியல் செயற்பாடுகளுக்கு அங்கீகாரம் வழங்கும் வகையில் புதியதொரு அரசமைப்பின் தேவையை வலியுறுத்தும் வண்ணம் செயற்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## நூலகங்களுக்கு கணனி வசதி ஏற்பாடு செய்யக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை17

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள உள்ளூராட்சிமன்ற பொது நூலகங்களுக்கு கணனி வசதிகளை ஏற்படுத்தித்தரவேண்டும் என உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சர் நந்தமித்ர எக்கநாயக்கா, வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனா ஆகியோரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாண நூலகப் பணியாளர் ஒன்றியம் இக்கோரிக்கையினை விடுத்துள்ளது. இம்மாகாணங்களில் உள்ள நூலகர்களுக்கும், நூலக உதவியாளர்களுக்கும் கணனிப் பயிற்சி வழங்குமாறும் -

அத்துடன் யாழ்.மாநகர சபை, திருகோணமலை நகரசபை, குச்சவெளி பிரதேச சபை நூலகங்களில் கடமையாற்றும் நூலக உத்தியோகத்தர்களுககு வாரத்தில் இருதினங்கள் விடுமுறை வழங்கப் படுவது போல, ஏனைய வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள உள்ளூராட்சி மன்ற நூலக உத்தியோகத்தர்களுக்கும் விடுமுறை அனுபவிக்க உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் அக்கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-173)

### நாளை

ஆடி 2
புதன்கிழமை
திதி: துவாதசி
முற்பகல் 7.56 வரை.
நட்சத்திரம் : மிருகசீரிடம்
பின்இரவு 3.13 வரை.
கரிநாள்
பிரதோஷ விரதம்
சுபநேரம் : 4.30 - 6.00
ராகுகாலம் : 12.00 - 1.30
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

எப்படிப்பட்ட வார்த்தைப் பின்னல்களும் தோற்றுவிக்காத உணர்ச்சியை, சரியாகக் கையாளப்பட்ட சிறிய மௌனம் உணர்த்திவிடும்.

- மார்க் ட்வெயின்.


**கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!**



கேட்டறிக மிதிவெடி இருக்கக்கூடிய இடங்களை; அறிந்தபின் தவிர்க்குக அவ்விடங்களுக்குள் போவதை.

# நலன்புரி நிலையங்களில் உள்ள இளைஞருக்குத் தொழிற் பயிற்சி!

முளாய்,ஜூலை17

நலன்புரி நிலையங்களில் வாழும இளைஞர், யுவதிகளுக்கு தொழிற் பயிற்சி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

யாழ்மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள நலன்புரி நிலையங்களில் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் தங்கியுள்ளன.

மேற்படி குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பை விருத்தி செய்யும் நோக்குடனேயே இத்தொழிற் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

தொழிற் பயிற்சி வழங்குவதற்குத் தகுதியானவர்களைத் தெரிவு செய்யும் வேலைகள் ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவு ரீதியாக மேற கொள்ளப்பட்டு வருகின்றது. மிக விரைவில் இவர்களுக்கான மிகவும் பொருத்தமான தொழிற் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. (ஜ-99)

## மாபெரும் விளையாட்டுப் போட்டி - 2001

**மானிப்பாய்**
**வலி.தென்மேற்கு**
**பிரதேச சபை**

மேற்படி போட்டிகள் பற்றிய மேலதிக விவரங்கள் எமது பிரதேச சபை எல்லைக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களும், வீரர்களும் கவனிக்கும் பொருட்டு அறிவிக்கப்பட்டுள்ளது.

★ 'தாச்சி' போட்டிக்கு விண்ணப்பித்த கழகங்கள் எதிர்வரும் 20-07-2001ஆம் திகதிக்கு முன் தொடர்புகொண்டு போட்டி அட்டவணையைப் பெறவும்.

★ பளுதூக்கல் நிகழ்வுக்கான விண்ணப்ப முடிவுதிகதி 20-07-2001ஆகும்.

★ பளுதூக்கல் பயிற்சி முகாம் 23-07-2001 திங்கள் மாலை 4மணிக்கு (புதியநேரம்) பிரதேச சபை மண்டபத்தில் வலி. தென்மேற்கு பிரதேச செயலக விளையாட்டு அதிகாரி திரு.எம்.ஆர்.மோகன் தலைமையில் இடம்பெறும். வீரர்கள் சமுகம் தரவும்.

★ கரபந்தாட்டம் 'ஓவர்கேம்' (Over Game) சுற்றுப் போட்டிக்கு 23-07-2001 இற்கு முன் படிவம் பெற்று விண்ணப்பிக்கவும்.

★ கிரிக்கெட், கரபந்தாட்டம், (செட்அப்), வலைப்பந்தாட்டப் போட்டி அட்டவணை ஏற்கனவே அறிவிக்கப்பட்டு எமது விளம்பரப்பலகையில் இடப்பட்டுள்ளது.

செ.ரமேஷ் J.P
உள்ளூராட்சி உதவியாளர்,
விளையாட்டு இணைப்பாளர்,
வலி.தென்மேற்கு பிரதேச சபை
மானிப்பாய்.

வெ.அ.ஜோன்சன்
J.P.U.M.
தலைவர்,
பிரதேச சபை, மானிப்பாய்

(C-17454)

## நன்றி நவில்கின்றோம்



இமையாணன் ஸ்ரீமுருகன் ஆலயத்தின் கட்டட புனர்நிர்மாண திருப்பணி வேலைகளுக்காக அமைச்சிலிருந்து ஆறு லட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்து தந்துதவியவரான, வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ்மொழி விவகாரங்கள், இந்து கலாசார அமைச்சரும், ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகமுமான மாண்புமிகு அமைச்சர் கௌரவ திரு.கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும் திரு.ப. இரவீந்திரன் (இணைப்பாளர், நெல்லியடி, கரவெட்டி) அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இமையாணன் ஸ்ரீமுருகன் ஆலய
பரிபாலன சபை.

(90147)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

தம்பாட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயப் புனரமைப்பு, குழாய் நீர்விநியோகம், குளம் புனரமைப்பு, சனசமூக நிலையம் புனரமைப்பு ஆகியனவற்றின் புனரமைப்பு வேலைகள் செய்வதற்கு நிதி ஒதுக்கித் தந்துதவியவரான



மாண்புமிகு கௌரவ அமைச்சர்
**திரு.K.N.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்

எமது ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர்
**திரு.ந.மதனராசா**
அவர்களையும்



திரு.N.திருச்செல்வம் J.P.
ஊர்காவற்றுறை பிரதேச சபை உப தலைவர்
அவர்களையும்

தம்பாட்டி மக்கள் சார்பாகப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆலய பரிபாலன சபை,
கி.மு.சங்கம், சனசமூக நிலையம்,
தம்பாட்டி.

(90143)

## வினாவிடை போட்டி முடிவு

யாழ்ப்பாணம்,ஜூலை17

யாழ்.கல்வி வலயத்தினால் அண்மையில் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட வலயமட்டக் கணித, விஞ்ஞான வினாவிடைப் போட்டியின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற பாடசாலைகளின் விவரம் வருமாறு:-

*பிரிவு I (தரம்6, 7, 8)*

★ முதலாமிடம் - யாழ்.இந்துக் கல்லூரி.

★ இரண்டாமிடம் - சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.

★ மூன்றாமிடம் - சென்.பற்றிக்ஸ் கல்லூரி.

பிரிவு II (தரம் 9, 10, 11)

★ முதலாமிடம் - யாழ்.இந்துக் கல்லூரி.

★ இரண்டாமிடம் - சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.

★ மூன்றாமிடம் - சென்.ஜோன்ஸ் கல்லூரி.

*பிரிவு III (தரம் 12, 13)*

★ முதலாமிடம் - வேம்படி மகளிர் கல்லூரி.

★ இரண்டாமிடம் - யாழ்.இந்துக் கல்லூரி.

★ மூன்றாமிடம் - சென்.ஜோன்ஸ் கல்லூரி. (ஜ-10)

## தொலைபேசி விவரக்கொத்து

தென்மராட்சி,ஜூலை17

சாவகச்சேரிப் பகுதியில் தொலைபேசிப் பாவனையாளர்களின் தொலைபேசி விவரக்கொத்து **(Telephone Directory)** சாவக்சேரி அஞ்சல் அலுவலகத்துக்கு வந்துள்ளது.

தொலைபேசி பாவனையாளர்கள் தமது தொலைபேசி விவரக் கொத்தினை கரவெட்டி அஞ்சல் அலுவலகத்தில் இயங்கும் சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-117)

## தேர்வுப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜூலை17

கொழும்பு பல்கலைக்கழகத்தின் வெளிவாரித் தகவல் தொழில்நுட்பப் பட்டத்துக்கான தேர்வுப் பரீட்சை எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை காலை 10மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சையில் தோற்றவுள்ளோருக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ்.கல்வி வலய வட்டாரங்கள் தெரிவித்தன. (ஜ-10)

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை17

வேலணை பிரதேச சபை எல்லையினுள் அடங்கும் வேலணை கிராமத்தில் கட்டாக்காலி நாய் அழிப்பு வேலைகள் எதிர்வரும் 19ஆம் திகதி வியாழக்கிழமை பொதுச் சுகாதார பரிசோதகர் தலைமையில் இடம்பெறவுள்ளன. அன்றையதினம் வளர்ப்பு நாய்களை வீட்டினுள் கட்டி ஒத்துழைப்பு வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான முற்றிவும் எதிர்பார்க்கக் கூடிய வினாத்தாள்கள் 2 உட்பட - 4 கடந்தகால வினாத்தாள்கள் விடைகளுடன்

**அளவையியலும்**
**விஞ்ஞான முறையும்**

சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
வெளியீடு: IPE - SRILANKA

(90108)

## கணனி இயக்குநர் தேவை

எமது அச்சகத்துக்கு, கணனி இயக்குநர் தேவை. இருபாலாரும் தமது அனுபவச் சான்றிதழ்களுடன் உடன் நேரில் வரவும்.

**ஸ்ரீ சாயி அச்சகம்**
1227, கே.கே.எஸ். வீதி,
(பூநாறி மரத்தடி)
யாழ்ப்பாணம். (90141)

## வாசகர் திருமுகம்

### போக்குவரத்துச் சபை அதிகாரி விளக்கம்

"அராலி வடக்கில் 785 இலக்க பஸ் சேவையால் மாணவர் பெரும்பாடு" என்ற விடயம் சம்பந்தமாக தங்களது 2001.07.10ஆம் திகதிய 'உதயன்' பத்திரிகையின் 'வாசகர் திருமுகப்' பகுதியில் அராலியைச் சேர்ந்த எஸ்.செல்வி என்பவரால் வரையப்பட்ட திருமுகம் தொடர்பாக பின்வருவனவற்றை சம்பந்தப்பட்டவர்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு தெரியப்படுத்துகின்றேன்.

மேற்படி திருமுகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாதை இல.785 பேருந்துச் சேவை பொன்னாலையில் இரவுத் தங்கல் செய்யப்பட்டு, அங்கிருந்து தினமும் காலையில் 6.45மணிக்கு ஆரம்பிக்கப்படுகிறது. 2001.06.09ஆம் திகதி இரவு இரவுத்தங்கலில் இச் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட காப்பாளருக்கு திடீரென ஏற்பட்ட சுகயீனம் காரணமாக காலையில் அவரால் கடமைக்குச் சமுகமளிக்கமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டது.

மேலும் 2001.06.23ஆம் திகதி இச் சேவைக்குரிய பேருந்து அட்டவணைப்படி பொன்னாலையில் இருந்து புறப்பட்டு வரும் போது மூளாயில டீசல் பைப் உடைந்ததால் மேற்கொண்டும் சேவையைச் செயலாற்ற முடியாது போய்விட்டது. எதிர்பாராதவிதமாக இச் சேவையில் பாதிப்பு ஏற்பட்டதன் காரணமாக மக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்காக மிகவும் மனம் வருந்துகின்றோம்.

பொது முகாமையாளர்,
வ.பி.போ.ச.

கோண்டாவில்.

### கல்வியியற் கல்லூரி அனுமதி

தேசிய கல்வியியற் கல்லூரிக்கு புதிதாக மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் போது பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெறக்கூடிய மாணவர்களும் உள்வாங்கப்படுகின்றனர்.

இதனால் கல்வியியற் கல்லூரி அனுமதியை எதிர்பார்த்திருக்கும் - பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத - மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

- இவ்வாறு பல்கலைக்கழக அனுமதி பெறக்கூடிய மாணவர்கள் கல்வியியற் கல்லூரிக்கு அனுமதிக்கப்படுவதால் குறிப்பிட்ட ஒரு தொகை மாணவர்கள் இரண்டும் கெட்டான் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இதனைச் சம்பந்தப்பட்ட மாணவர்களும், அதிகாரிகளும் கவனத்தில் எடுத்துச் செயற்படுவார்களா?

- கே.ரமணன்.

யாழ்ப்பாணம்.

## ஸ்ரீ வல்லிபுரா போட்டோ

★ 05-07-2001 வரை எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட படச்சுருள்கள் யாவும் பிரதியாக்கம் செய்து வந்துவிட்டன.

★ 18-07-2001 ஆம் திகதி படச்சுருள்களும் வீடியோக் கசற்றும் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும்.

★ கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வீடியோக் கசற் எடுத்துவர ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கலாம்.

**UTHAYAN VIDEO**
7-7/4, Ground Floor,
Orchand building, Galle Road,
Wellawatha, Colombo - 06

நல்லூர் 021-2604
புலோலி 070-212720

(90145)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக அலுவலர்
**கந்தையா ஸ்ரீவள்ளிநாயகி**

அவர்களது மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அரசாங்க அதிபரும்,**
**யாழ்.மாவட்டச் செயலக அலுவலர்களும்,**
**நலன்புரிக் கழக உறுப்பினர்களும்.**

*மாவட்டச் செயலகம்,*
*யாழ்ப்பாணம்.*

(C/17452)

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

அன்னையின் மடியில்
10-08-1928

ஆண்டவன் மடியில்
19-07-2000

**திருமதி**
**அலிஸ் நாகம்மா பெஞ்சமின்**

எனது தாயாரின் நினைவாக நன்றி செலுத்தும் ஆராதனை சங்கானை தென்னிந்தியத் திருச்சபையில் எதிர்வரும் (21-07-2001) சனிக்கிழமை மாலை 3 மணிக்கு (SLT) நடைபெறும். உறவினர், அன்பர், சபையார் அனைவரும் இதில் கலந்துகொள்ளுமாறு அன்பாக அழைக்கப்படுகிறீர்கள். தனிப்பட்ட அழைப்பு விடுக்க இயலாமைக்கு வருந்துகிறேன்.

- அருட்திரு. பெஞ்சமின் ஜெயராஜா

*ஏழாலை தெற்கு, சுன்னாகம்.*

(90142)

# யாரிடம் போவோம்?

**நாவற்குழியில் இருந்து இடம் பெயர்ந்து மீண்டும் அங்கு சென்று பார்த்த போது அலங் கோலமாய்க் காட்சி தந்த தனது வீடு, அடுத்த வாரம் போய்ப் பார்த்தபோது எரிந்து சாம்ப ராய்க் கிடந்ததைக் கண்டு மனம் வெதும்புகின்றார் இக்கட் டுரையை வரைந்த ரி.பாரதி.**

இந்த யுகத்தில் எம்மக்களுக்கு விடிவும் இல்லை; வீடும் இல்லை. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வித மான கோணத்தில் பிரச்சினைகள் எழும். சமாளித்துச் செல்லும் சக்தி யும் வல்லமையும் ஒரு சிலருக்கே உண்டு.

இன்று தென்மராட்சி மக்களின் நிலை 'மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த' கதையாகிக் கொண் டிருக்கிறது. யுத்தத்தால் பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ள தென்மராட்சிப் பகுதியைத் தற்போது மக்கள் சென்று பார்வையிட்டு வருகின்றனர். அனேக மான பகுதிகளில் மக்கள் பார்வை யிட மட்டும் படையினர் அனுமதித் துள்ளனர். போனது போக எஞ்சிய வற்றையாவது மனத்திருப்திக்கு எடுத் துச் செல்ல என்று வீடு சென்றவர்க ளுக்கு சொந்த வீட்டிலுள்ள சொந் தப் பொருள்களை எடுத்துச் செல் லத் தடை விதிக்கப்படுகிறது. 'அங்கு கடிதம் வேண்டு!', 'இங்கே கைெயழுத்து வேண்டு!', 'என்ன என்ன பொருள்கள வீட்டில் உள்ளன என்று விதானையி டம் சென்று உறுதிப்படுத்து!' என்று அங்குமிங்குமாக அலையவிட்டபடி உள்ளனர் ஊர்ப்பாதுகாவலர்கள்.

"உரிமை உள்ளவர்களுக்கும் உரிமை அற்றவர்களுக்கும்" வித்தி யாசம் தெரியாதவர்களால் நாட்டைப பாதுகாப்பது மிகக் கஷ்டம்தான். திரு டர்களைக் கட்டுப்படுத்தும் நோக்கு டன் இப்படிச் செய்யப்படுவதாகக் கூறி னும் முழுத்திருட்டும் இங்குதான் நடைபெறுகிறது. ஆட்டைக்கடித்து மாட்டைக்கடித்து மனிதரைக் கடிக் கும் கட்டம் நடந்து கொண்டிருக்கி றது. பொருள்கள் யாவும் கடத்தி முடிந்து ஜன்னல், கதவு, ஓடு, கூரை என வீடே மாயமாகிக் கொண்டிருக் கிறது.

ஏனைய இடங்களைப் போல் எனது ஊரான நாவற்குழி இல்லை. அந்த ஊரைப்பற்றி நன்கு தெரிந்த வர்களுக்கு தற்போது இரு பாதைக ளைத் தவிர வேறு எப்பாதையாலும் அங்கு உட்புகவோ வெளியேறவோ முடியாது என்பது நன்கு புரியும். இந்த இரு பாதைகளிலும் வழிநெடுக 'பாது காப்புப் படையினர் மிக அதிகமாக உள்ளனர். சோதனைகளும் மிகக் கெடுபிடியாக உள்ளது, எதற்கோ தெரி யாது. அத்தகைய இடங்களில் பொருள்கள் காணாமற் போவதென் றால் என்ன மாயாஜாலம்! யார் கண் கட்டு வித்தைக்காரர்? பொருளின் உரிமையாளருக்குக் கிடைக்காத அனு மதி ஊர்க்கள்ளனுக்கும் வேற்றூரா னுக்கும் எவ்வாறு கிடைக்கிறது? வேலியே பயிரை மேய்ந்து கொண்டி ருப்பதுதான் உண்மை. போலி உத் தரவுப் பத்திரங்களுடன் பொருள்க ளைக் கொண்டுவருபவர்கள் வழியில் நிற்பவர்களை 'Fifty-Fifty' எனக் குஷிப்படுத்துகின்றனர். ஊரில் 'பாது காப்பினர்' நிற்கும் போது என்ன கவலை என்றிருந்த எமக்கு இதைக் கேள்விப் பட்டதும் மனம் வேதனைப்படுகின் றது.

ஒவ்வொருவனும் தனது கட மையை உணர்ந்து செய்தால் எந் தப் பிரச்சினையும் இல்லையே! இன் னொருவருக்கு உரியதை எடுத்துக் கொள்ளும் பழக்கம் அனேகரிடம் காணப்படுகிறது. அடுத்தவன் பொருள் என்று உணர்ந்து அவர்களால் அது என்று கைவிடப்படுகிறதோ அன்று தான் இந்தப் பிரச்சினையும் முடிவுக்கு வரும். யார் யாருடையதை எடுத்துக் கொள்கிறார்கள் என்பதையும் அவர் அவர்களே தீர்மானித்துக் கொள்ளட் டும்.

இப்பொழுது எனது ஊரில் மாநகர சபையினரின் வேலையையும் 'பாது கா[illegible]ினரே' மேற்கொண்டு வருகின் [illegible] எமது ஊரை சுத்தப்படுத்திக் [illegible] இருக்கின்றனர். வேலிகளை எரி[illegible]தோடு வீடுகளையும் எரித்து நாச மாக்கியவாறு எம்மக்களின் சாபகங் களை வேண்[illegible]கில[illegible]ார். வேலிக்கு நெருப்பு வைப்பதில் [illegible]ட கணிப்புத் தெரியாது வீட்டையும் [illegible]த்து நெருப்பு வைத்தவரைக் கண்டு என்ன கதைப் பது, எவ்வாறு கதைப்பது? என என்று தான் ஒருவார்த்தை கேட்க [illegible]டியுமா? யாருடையதானால் அவனுக்[illegible] என்ன! நியாயம் கேட்பவர்களுக்கு இ[illegible] எழுத துக்கள் கொண்ட ஒரு சொ[illegible]ல் பட்டம் சூட்டி 'கே.கே.எஸ்' [illegible]ன்ற தொங்கல் மோட்சத்திற்கு அனு[illegible]விடு வர்.

இன்று அனேகர் எமக்கு [illegible] வயதில் மோட்சம் வேண்டாம் நாம் மானிடப் பிறவியை கொஞ்சம் அனு பவிக்க போகின்றோம் என்று மௌன விரதம் அனுஷ்டிக்கின்றனர். இன் றைய கட்டத்தில் எனது வீடும் பல லட்சம் ரூபா பெறுமதி உடைய பொருள்களுடன் எரிந்து சாம்பலாகிக் கிடக்கிறது. அந்த மன உளைச்சலில தான் நான் இதை எழுதுகிறேன். எம மைப் பாது'காக்கவும்' விடமாட்டார் கள் தாமும் எம்மை பாது'காக்க' மாட டார்கள் "நாம் யாரிடம் போவோம்? இவற்றை யாருக்கு எடுத்துரைப்போம்?"

அவர்கள் எரிக்கும் வேலிக்குள் ளும் வீட்டுக்குள்ளும்தான் அவர்கள் தேடுபவர்கள் இருப்பார்கள் என நினைக்கிறார்கள் போல. வேண்டுமா னால் நான்கு கால்கள் மறைந்திருக் கலாம். ஆனால் இவர்கள் தேடும் இரண்டு கால்கள் அதற்குள் நிற்ப தில்லை. "வேலியைக் கொளுத்துகி றோம்; அவர்களைப் பிடிக்கிறோம்; உங்களைப் பாதுகாக்கின்றோம்" என வீடுகளை எரித்து ஊரை பாலை வனம் ஆக்குகிறார்கள். நஷ்டஈடு என இங்கு அனுப்பும் பிச்சையில் இடை யில் நின்று கிள்ளுபவர்கள் கிள்ளி, அள்ளுபவர்கள் அள்ளி, போனது போக எஞ்சியது ஒவ்வொரு குடும் பத்தினருக்கும் 15,000 ரூபா. அது பெறுவதற்கும் எத்தனையோ கையெ ழுத்துக்கள், அலைச்சல்கள் இந்தப் பணத்தில் ஒரு வீட்டுக்குரிய அத்தி வாரத்தை ஒழுங்காக இந்தக் காலத் தில் போடமுடியுமா? போட்டாலும் அதற்கு என்ன பாதுகாப்பு உத்தர வாதம் - மீண்டும் அடித்து உடைக்க மாட்டார்கள் என்பதற்கும்!

மீண்டும் பதிவு, நஷ்டஈடு, நிவார ணம் இதுவும் ஒரு தொழில்தானோ? அந்த நஷ்டஈட்டையும் நிவார ணத்தையும் பெற்று சப்புக் கொட்டு பவர்கள் மத்தியில் உண்மையும், உபு தேசமும் புறக்குடத்தில் ஊற்றிய நீர்தான்.

தமது வாழ்நாள்களை சந்தோஷ மாக நகர்த்த எண்ணி ஒரு வசதி யான வீடு, பொருள்கள் வாங்கி சொத துடன் சுகமாக இந்நாட்டில் வசிக்க எண்ணுகின்றார்கள். சிறுசிறு துளி யாகச் சேர்த்த சொத்தை பருவத்திற்கு பருவம் தவறாது வரும் "யுத்தப் பெரு வெள்ளம்" அடித்துக் கொண்டு போய் விடுகின்றது.

வெளிநாட்டில் எம்மக்களிற்கு 'CITIZEN' கிடைத்தாலும் எம்நாட் டில் அது உணர்வுபூர்வமாகக் கிடைக காது. இதை எம்மக்கள் தற்போது உணர்ந்து கொண்டு வருகின்றனர். அதை மெல்ல மெல்ல வெளிகாட்ட வும் ஆரம்பித்துள்ளனர். நியாயத்தை வெளிப்படையாகச் சொல்ல ஆரம் பித்து விட்டனர். அநியாயமும், அதர் மமும், அடக்க ஒடுக்குமுறைகளும் எந்த மாற்றமும் இன்றித் தொடருமா யின், இறுதியான எழுச்சி நிகழ்வு கள் நடப்பது நிச்சயம். அப்போதா வது "சாதுமிரண்டால் காடு கொள் ளாது" என்பதை உணர்ந்து கொள் ளட்டும். எமக்கு எந்த ஆட்சியுமே வேண்டாம் என்று மக்கள் வெளிப்ப டையாக புலம்புகின்றனர். "பிச்சை வேண்டாம் நாயைப் பிடி" என்ற கட டம். எது பிச்சை, எது நாய் என்பதை

# யார்க் கெடுத்துரைப்போம்?

உங்கள் சிந்தனைக்கே விட்டுவிடுகி றேன். "இசுஜின் ஓ நீல்" என்ற நாலா சிரியர் ஒருவர் சொன்னது போல "இதில் நிகழ்காலம் இல்லை; எதிர் காலமும் இல்லை. கடந்த கால நிகழ வுகளே நிரந்தரமாக உள்ளன." என் பதை எந்த ஆட்சி உணர்ந்து கொள ளப் போகிறதோ தெரியவில்லை.

நாம் ஒரு வெற்றியை அல்லது ஒரு பொருளை பெறவேண்டுமாயின் அதற்குரிய விலையைக் கொடுத்தால் தான் அது நமக்குரியதாகும். "வேண டுவனக்கெல்லாம் விலை கொடுக்கப் படல் வேண்டும்" என்ற "மாக்ஸ்" இன் வைரவரிகளை ஒருமுறை நினை வுபடுத்திக் கொள்ளுங்கள். எதை வேண்ட எதைக் கொடுக்க வேண்டும் என்பதையும் நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

※

## மந்திகை மருத்துவமனை 'இங்குபேட்டர்' பெட்டி பழுது:

# நிறைகுறைந்து பிறக்கும் குழந்தைகளை யாழ்.ஆஸ்பத்திரிக்கு அனுப்பும் இக்கட்டு

## கொழும்பிலிருந்து புதியது எடுத்துவர அனுமதியில்லை

தென்மராட்சி,ஜூலை17

மந்திகை ஆஸ்பத்திரியில் பிரச வமாகும் நிறை குறைந்த சிசுக்களை வைத்துப் பராமரிக்கும் 'இங்குபேட்டர்' என்னும் பெட்டி பழுதடைந்துள்ள தால் இரண்டரைக் கிலோவுக்கு உட் பட்ட நிறையுடன் பிறக்கும் பிள்ளை களை யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அனுப்பிவைக்க வேண் டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆறு மாதங்களில் ஆஸ் பத்திரியில் பிறந்த 504 குழந்தை களில் 17 சதவீதமானவை நிறை குறைந்தவையாகவே பிறந்துள்ளன.

இந்த ஆஸ்பத்திரியில் எம்எஸ்எவ் மருத்துவ சேவை அமைப்பின் மகப் பேற்று சிகிச்சை நிபுணர் ஒருவர் கடமையாற்றி வருவதால் வடமராட சிப் பிரதேசத்தைச் சேர்ந்த பெருமளவு கர்ப்பிணித் தாய்மார் தமது பிரசவத் துக்காக இந்த ஆஸ்பத்திரிக்கு வருகை தருகின்றனர்.

இதனால் நிறைகுறைந்த குழந் தைகளை வைத்துப் பராமரிப்பதற்கு இரு 'இங்குபேட்டர்' பெட்டிகள் தேவை யாக உள்ளதாக ஆஸ்பத்திரி வட்டா ரங்கள் தெரிவித்தன.

இந்த நிலையில் பாவனையில் இருந்த பெட்டியும் மூன்று மாதங் களுக்கு முன்னர் பழுதடைந்துள் ளது. இதனால் நிறைகுறைந்த குழந் தைகளை பலத்த பாதுகாப்புடன் அவசரமாக யாழ்.போதனா வைத்தி யசாலைக்கு கொண்டு செல்ல வேண் டியுள்ளது.

புதிய 'இங்குபேட்டர்' பெட்டி ஒன் றைக் கொழும்பில் இருந்து எடுத்து வருவதற்கு படையினர் அனுமதி மறுக்கப்படுவதால் அதனை இங்கு கொண்டுவர முடியவில்லை எனத் தெரி யவருகிறது.

பிரசவத்திற்கென இந்த ஆஸ்பத் திரிக்கு வரும் பெருமளவு கர்ப்பி ணித் தாய்மார் போசாக்கின்மை காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக வும் பிரசவ விடுதி வட்டாரங்கள் தெரி வித்தன.

போசாக்கின்மை காரணமாக கடந்த ஆறு மாதங்களில் எட்டுத் தாய்மார்களுக்குக் குறைப்பிரசவம் ஏற்பட்டுள்ளதாகவும் புள்ளி விவரங் கள் தெரிவிக்கின்றன. (ம-117)

# கல்வியியற் கல்லூரிகளில் தொழிற் பயிற்சி நெறி

## விண்ணப்பங்களை அனுப்பலாம்

காரைநகர்,ஜூலை17

தேசிய கல்வியியற் கல்லூரிக ளுக்கு ஆசிரியர் கல்வியில் மூன் றாண்டு கால சேவை முன் உயர் தொழிற் பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கவுள்ளோர் 99ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்பு நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட் சையில் சித்தியடைந்திருப்பதுடன் இந்த ஆண்டு ஜனவரி மாதம் முத லாம் திகதி 24 வயதிற்கு உட்பட் டவர்களாகவும் இருக்க வேண்டும்.

ஆரம்பக்கல்வி, சமூகக்கல்வி, நூலக விஞ்ஞானமும் தொடர்பாடலும, முதல் மொழி, விவசாயம், மனைப் பொருளியல் ஆகிய பாடநெறிகளைக் கற்பதற்கு 220 புள்ளிகளுக்குக் குறை யாமலும் -

விஞ்ஞானம், இந்துசமயம் ஆகிய பாடநெறிகளுக்கு 200 புள்ளிகளுக்குக் குறையாமலும் -

கணித பாடநெறிக்கு 160 புள்ளி களுக்குக் குறையாமலும் -

தொழில்நுட்பக் கல்வி, சங்கீதம், நடனம், சித்திரம் ஆகிய பாடநெறி களுக்கு 180 புள்ளிகளுக்குக் குறை யாமலும் -

விண்ணப்பிப்போரின் தகைமை கள் இருக்க வேண்டும்.

இதேவேளை -

ஆங்கிலப் பாடநெறிக்கு விண் ணப்பிப்போர் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலம் அல்லது ஆங்கில இலக்கியத்தில் திறமைச் சித்தியுடன் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட் சையில் ஆங்கிலம் உட்பட மூன்று பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். அல்லது ஜி.சீ.ஈ.சாதாரண தரத்தில் ஆங்கிலம் அல்லது ஆங் கில இலக்கியத்தில் விசேட சித்தி யுடன் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் ஏதாவது மூன்று பாடங்களில் சித்தி யடைந்திருக்க வேண்டும்.

மேற்படி பாடநெறிகளுக்கு விண் ணப்பிப்போர் தமது விண்ணப்பங் களை அடுத்த மாதம் 10ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னதா கக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் *பரீட்சை ஆணையாளர் நாயகம், பாடசாலை பரீட்சை ஒழுங் கமைப்புப் பகுதி, தேசிய மதிப்பீட்டு பரீட்சை சேவைகள், பரீட்சைத் திணைக்களம், ஒபலவத்த, பத்தர முல்ல* என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-73)

## சினைப்பர் தாக்குதலில் சிப்பாய் பலி!

கொழும்பு,ஜூலை17

மட்டக்களப்பு கிரான்குளம் அரு கில் நேற்றுமுன்தினம் விடுதலைப் புலி கள் நடத்திய சினைப்பர் தாக்குத லில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் பொது மகன் ஒருவர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## படையினர் விசனம்

தென்மராட்சி,ஜூலை17

பல்கலைக்கழக மாணவனை விடுவிக்குமாறு அறிக்கை விட்டமைக் காக வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் பருத்தித் துறை முகாமுக்கு அழைக்கப்பட்டு படையணி பிரிகேடியரால் விசனம் தெரிவிக்கப்பட்டது. இச்சம்பவம் கடந்த வெள்ளியன்று இடம்பெற்றது.

பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற சந் திப்பில் திவ்வியன் கைது செய்யப் பட்ட காரணத்தை விளக்கிய 52 ஆவது படையணியின் பிரிகேடியர் குலதுங்க திங்கட்கிழமை தொடக்கம் மாண வர்களைப் பாடசாலைக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொண்டதாகச் சந்திப்பில் கலந்துகொண்ட சங்கப் பிரதிநிதியொருவர் தெரிவித்தார். (ஐ-117)




**சர்வதேச லயன்ஸ் கழகங்கள் மாவட்டம் 306பி பிராந்தியம் 9 மற்றும் 10க்குரிய 16 கழகங்களின் நடப்பு வருட சேவைகள் திட்டமிடல் கூட்டம் கடந்த 24ஆம் திகதி கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. இதில் பிராந்தியத்திற்கான சேவைத் திட்டங்களைப் பிராந்தியத் தலைவர் லயன் செ.ஞானராசா விளக்குதைப் படத்தில் காணலாம். பிராந்தியம் 9இன் தலைவர் லயன் ஆர்.நடராசாவும் ஏனைய லயன்ஸ் கழக பிரமுகர்களும் அமர்ந்துள்ளனர். (ஐ-100)**



**அச்சுவேலி - ஆவரங்கால் பகுதி சலவைத் தொழிலாளர்களின் தொழில் வசதியை மேம்படுத்தும் நோக்குடன் அச்சுவேலி தெற்கு மருதங் குளத்தில் அமைக்கப்பட்ட 'சலவைத் தொட்டித் திட்டத்தில்' நிறுவப் பட்ட ஏழு சலவைத் தொட்டிகளையும் தொழிலாளர்களிடம் கையளிக் கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.**

**விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலி.கிழக்குப் பிரதேச சபையின் உபதலைவர் யூ.எல்.ஏ.ரவி, பிரதேச சபையின் செய லாளர் க.குகதாசன், அச்சுவேலி தெற்கு கிராம சேவகர் சாந்தரூபன் மற்றும் விவசாயிகள் சம்மேளன நிர்வாகிகள், தொழிலாளர்கள் சல வைத் தொட்டிகளைப் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம்.**

*(படம்:-அச்சுவேலிச் செய்தியாளர்)*

# ஆடிப்பிறப்பும் அர்த்தமுள்ள விரதங்களும்

*"ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை*
*ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே*
*கூடிப்பனங்கட்டி கூழும் குடிக்கலாம்*
*கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே"*

இது நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் பாடல்வரிகள் ஆகும். சைவத் தமிழ்மக்கள் வாழ்வு நலன் கருதியும் உழவர் பெருமக்களது பலன கருதியும் ஆடிப்பிறப்பை முறைதவறாது காலங்காலமாகக் கொண்டாடி வருகின்றனர். இத்தினம் தெட்சணாயன ஆரம்ப காலத்தில் வருவதால் ஆடிப்பிறப்பை நாடிக்கொண்டாடுகின்றார்கள்.

**இன்று ஆடிப்பிறப்பு**

*"உழுவார் உலகத்தார்க்(கு) ஆணி; அ∴தாற்றா(து) எழுவாரை எல்லாம் பொறுத்து"* என்ற குறள் மொழியின்படி பயிர் வளர்த்து மக்களின் உயிர் வளர்க்கும் உழவர் பெருமக்கள் தங்கள் வேளாண்மைச் செயற்பாடுகளை ஆடிமாதத்தில் ஆரம்பிப்பார்கள். இதனால் தான் 'ஆடிவிதை தேடிவிதை' என்றும் 'ஆடிக்காற்றில் அம்மியும் பறக்கும்' என்றும் முதுமொழிகள் தோனறின எனலாம். சிலர் இந்நாளை விரதநாளாகக் கருதி ஆலய தரிசனம் செய்து சுபீட்ச வாழ்விற்காகப் பிரார்த்திப்பர். இந்நாளில் பலவித பலகாரங்கள் செய்து, ஆடிக்கூழ் உண்டு கூடிக்குலாவுவர். சிறுவர்களுக்குக் கூழ்குடிப்பதென்றால் கொண்டாட்டம் தானே! கூழோடு கொழுக்கட்டையும் சேர்ந்தால் குதூகலம் மேலும் அதிகமாகுமன்றோ! அந்த ஆனந்தத்தின் எல்லையைத் தொடுவதுபோல் மேலே உள்ள பாடல அமைந்துள்ளது.

ஆடிமாதத்தில் ஆடிப்பூரம், ஆடிஅமாவாசை, ஆடிச்செவ்வாய் என்பனவும் முக்கிய நாள்களாகும். ஆடிப்பூரம் அம்பாளின் ருது காலமெனக் கொள்ளப்படுகிறது. அம்பிகை ஆலயங்களில் அம்பிகையை அலங்கரித்து எழுந்தருளச்செய்து கன்னித்தாயென எண்ணி அம்பாள் துதிபாடுவர். அம்பாள் அடியார்கள் அம்பாளுக்குப் பட்டாடைகளும் பலவித ஆபரணங்களும் வழங்கி, அடியார்களுக்கும், அந்தணப் பெருமக்களுக்கும் தானதருமங்கள் செய்து மகிழ்வர். கன்னிப் பெண்களும் சுமங்கலிகளும் இவ்விரதத்தை அனுஷ்டித்து எண்ணிய எண்ணியாங்கு எய்துவர்.

ஆடி அமாவாசை அமாவாசைகளிற் சிறந்ததாகும். தந்தையரை இழந்தவர்கள் மிகுந்த பயபக்தியோடு அவர்களின் ஆத்மசாந்திக்காக விரதமிருந்து, ஆலயங்களுக்குச் சென்று, அந்தணர்களுக்குத் தானதருமம் செய்து இல்லத்தில் இனபந்துகளோடு கூடியிருந்து அமாவாசை விருந்துண்டு பிதிர்களுக்குப் பிரீதி செய்வர். இந்த விரதம் காப்பதால் சந்தானவிருத்தி, தேக ஆரோக்கியம், நிலைபேறு, பிதிர்களின் ஆசீர்வாதம் என்பன கிடைக்கும் என்பர்.

அடுத்து ஆடிச்செவ்வாய் விரதமும் முக்கியமானதே ஆகும். ஆடிமாதத்தில் வரும் அனைத்துச் செவ்வாய்க்கிழமைகளிலும் அம்பாளையும் முருகனையும் சிந்தித்தும் வந்தித்தும் அடியார்கள் விரதமிருப்பர். செவ்வாய் வழிபாடு முருகனுக்குப் பிரியமானதாகும். அம்பாளையும் முருகனையும் பயபக்தியோடு இத்தினங்களில் வழிபடுபவர்கள் செவ்வாய்த்தோஷ நிவர்த்தியும் திருமணப்பேறும் அடைவர் என்பது அனுபவச் சான்றுகளாகும்.

**க.ச.பிள்ளை**

எனவே, ஆடிமாத விரதங்கள் அனுகூலமானவை என்று கருதி அனுஷ்டிப்பது நல்ல பலன்களைத்தரும். ஆடி மாதத்தில் சுபகாரியங்கள் செய்யப்படுவதில்லை என்ற எண்ணம் மக்கள் மத்தியில் பரவலாக இருந்துவருகிறது. அப்படிச் செய்தால் எல்லாம் ஆடிப்போம் என்ற பயமோ தெரியவில்லை. "நாளும் கோளும் நல்லவர்க் கில்லை" என்பதும் "அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே" என்றும் சொல்லப்படுவதை உணர்ந்து தெளியலாம்.

இதைவிட ஆடி மாதத்தில் 'ஆடிபெருக்கு' என்ற ஒரு விழாவும் கொண்டாடப்படுவது வழக்கம். இதனைப் பண்டைய இலக்கியங்களில் 'புனலாட்டு' (புனித நீர் வரவேற்பு) என்ற விழாவாகக் காண்கின்றோம். ஆடிமாதத்தில் வான்முகில் வழாது பெய்து ஆறுகளில் புதுப்புனல் கதித்துவரும். இந்தப் புதுப்புனலை ஆறுகளில் வரவேற்பதற்காக ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனைவரும் சென்று நீராடி அதன்பின் விழாக்கோலம் பூண்டு, உண்டு களித்து மகிழ்வர். இவ்விழா ஆடி 18 ஆம் நாளில் கொண்டாடப்படுவதால் இதற்கு 18 ஆம் பெருக்கு என்றும் பெயருண்டு. எமது பாரம்பரியங்களை மறந்துவிடாது நினைவு கூர்ந்துகொண்டு கடைப்பிடிப்பது எம்மவர்க்கு நன்மை பயப்பதாகும்.

*"நல்லாற்றான் நாடி அருளாள்க; பல்லாற்றான்*
*தேரினும் அ∴த துணை"* - குறள்.

★

## கூழ் குடித்து மகிழ்வோமே!

ஆடி பிறந்துவிட்டால் நமக்கெல்லாம் நல்ல
ஆனந்தமும் கூடவே பிறக்குமென்று
கூடியிருந்து ஒன்றாய்க் கூழ்குடித்து நாம்
கும்மியடித்துப் பாடி மகிழ்வோமே!
தேடியே சுற்றஞ்சூழச் சென்று கோயிலில்
தெய்வத்தின் தாள்கள் பணிந்து நிம்மதி
நாடி நமக்கு நல்வாழ்வு நல்க வேண்டுமென
நாமமுச்சரித்து நலம்பல பெறுவோமே!

- கவிமணி இராசையா ஸ்ரீதரன்

## முதலாவது பிறந்த தின வாழ்த்து

HAPPY



BIRTHDAY

### செல்வி ட. ஜிரோமி

கொழும்பில் வசிக்கும் டயஸ்-துஷ்யந்தி தம்பதிகளின்
செல்வப் புதல்வி
**செல்வி ட.ஜிரோமி**

தனது முதலாவது பிறந்த நாளை இன்று(17-07-2001) செவ்வாய்க்கிழமை கொழும்பில குதூகலமாகக் கொண்டாடுகின்றார். ஜிரோமியை அன்பு அப்பா, அம்மா, தாத்தா(இராசா), அம்மம்மா (பாலசரஸ்வதி), மாமா(துஷ்யந்தன்), சித்தி (துஷாந்தி) ஆகியோர் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

*இராசா ஹாட்வெயர்,*
*177, ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:-
தாத்தா க.இராசதுரை
*(இராசா)*

(89915)

## நான்காம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
19
-
11
-
1961



உதிர்வு
30
-
07
-
1997

### செல்வி கந்தசாமி மைதிலி

திதி:- 17-07-2001

ஆண்டு நான்கு சென்றும்
ஆறவில்லையம்மா உன் துயரம்
வாழ்ந்த உறவுகளை வாடவிட்டு
வானுலகம் சென்றதேனோ?

*உமது பிரிவால் துயருறும்:*
அம்மா,
சகோதர சகோதரிகள்.

*ஆடியபாதம் வீதி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*

(89996)

## 3 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

17-07-2001

HAPPY



BIRTHDAY

### செல்வி அபிராமி

ஸ்ரீரங்கநாதன் பாலேஸ்வரி தம்பதிகளின்
செல்வப் புதல்வி
**செல்வி அபிராமி**

தனது மூன்றாவது பிறந்தநாளை இன்று (17.07.2001) செவ்வாய்க்கிழமை கனடாவிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, தங்கை - சிவகாமி, தாத்தா, அம்மம்மா, பெரியம்மா குடும்பம் (லண்டன்), மாமாமார் (கனடா), பெரியப்பா (ஜேர்மனி), சித்தப்பா (பிரான்ஸ்), மாமி குடும்பம் (லண்டன்) மற்றும் இருபாலையில் இருக்கும் அப்பம்மா, பெரியமாமி, நாதன் மாமா, சுசிலா மாமி, மச்சாள்மாரான தர்சினி, ரூபி, ரஞ்சினி ஆகியோர் வரதராஜப் பெருமாள் அருளால் பல்லாண்டு காலம் சீரோடும் சிறப்போடும் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

*லக்சுமி பவான்,*
*இருபாலைச் சந்தி.*

(90128)

தகவல்:
**நாதன் மாமா.**

## கல்வி அபிவிருத்தி கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூலை17

யாழ்.மாவட்ட கல்வித்தரம் பற்றியும் கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், குறைபாடுகளை இனம் காணவும் அதனடிப்படையில கல்வி அபிவிருத்தித் திட்டம் தீட்டுவதற்குமான முன்னோடிக் கருத்தரங்கு இன்று செவ்வாய்க்கிழமை காலை 10மணிக்கு வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சின் யாழ் அலுவலகத்தில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் யாழ்.குடாநாட்டு வலயக் கல்விப்பணிப்பாளர்கள், மேலதிக கல்விப்பணிப்பாளர், உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், பல்கலைக்கழக துணைவேந்தர், அரசாங்க அதிபர், தொழில்நுட்ப கல்லூரி அதிபர், உயர் தொழில்நுட்பக் கல்லூரி அதிபர், கல்வியியற் கல்லூரி பீடாதிபதி, கோப்பாய்- பலாலி ஆசிரியர் கலாசாலைகளின் அதிபர்கள், திறந்த வெளிப்பல்கலைக் கழக இணைப்பாளர் ஆகியோரும் கலந்துகொள்ள உள்ளனர்.

## மருந்துகள் வந்தன

சண்டிலிப்பாய்,ஜூலை17

கடந்தவாரம் இங்குவந்து சேர்ந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின கப்பலில் யாழ்.சுகாதாரத் திணைக்களத்திற்கான போலியோ (இளம்பிள்ளைவாத நோய்) தடுப்பு சொட்டு மருந்து உட்பட நோய்த் தடுப்பு ஊசி மருந்துகள் எடுத்துவரப்பட்டுள்ளன.

கடந்த ஒன்றரை மாதகாலமாகப் போலியோ சொட்டு மருந்துக்குக் குடாநாட்டில் பலத்த தட்டுப்பாடு நிலவிவந்தது குறிப்பிடத்தக்கது.

(ம-135)

## ஆலயத்தை புனரமைக்க நடவடிக்கை

சண்டிலிப்பாய்,ஜூலை17

சுழிபுரம் மேற்கு சம்விலதுறையிலுள்ள சம்புநாதேஸ்வரம் சிவன் ஆலயத்தைப் புனரமைப்புச் செய்வதற்கு ஆலய பரிபாலன சபை நடவடிக்கை மேற்கொண்டுவருகின்றது.

சுமார் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்த இந்த ஆலயம் நீண்டகாலமாகச் சேதமடைந்த நிலையில் காணப்பட்டு வருகின்றது என்றும் -

சம்வில்துறை துறைமுகமாக இருந்தபோது தமிழ்நாட்டு யாத்திரீகர்களுக்கும் இவ்வாலயத்திற்கு வந்து ஆலயத்தைத் தரிசித்துச் சென்றார்கள் என்பதை வரலாறு மூலம் அறியக்கூடியதாக இருப்பதாகவும் -

ஆலய பரிபாலன சபையின் செயலாளர் கு.வி.கந்தசாமி தெரிவித்தார்.

(ம-135)

## அதிகாரி நாளை காங்கேசன் செல்வார்

யாழ்ப்பாணம்,ஜூலை17

காங்கேசன்துறை கைதிகள் தடுப்பு முகாமுக்கு நாளை புதன் கிழமை சென்று அங்குள்ள கைதிகளைப் பார்வையிடவுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரி என். ஜீவேஸ்வரா உணவு மற்றும் கடிதங்களையும் அவர்களிடம் கையளிப்பார்.

உறவினர்கள் நாளை புதன் கிழமை காலை உணவு மற்றும் கடிதங்களைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு அவர் தெரிவித்துள்ளார்.

(ம-10)

## கூட்டுறவுச் சங்க பணியாளருக்கு சம்பள உயர்வு

சண்டிலிப்பாய்,ஜூலை17

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாள்களுக்கு திருகோணமலையிலுள்ள வடக்கு-கிழக்கு மாகாண கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழு வெளியிட்ட 31-99 இலக்க சுற்றறிக்கையின்படி கடந்த ஜூன் மாதச் சம்பளத்தில் சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.கூட்டுறவு உதவி ஆணையாளர் இதற்கான அனுமதியை வழங்கியதை அடுத்து இந்தச் சம்பள உயர்வு வழங்கப்பட்டதாகச் சங்கப் பொது முகாமையாளர் தெரிவித்தார். கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்க பண்டத்தரிப்புக் கிளை இச்சம்பள உயர்வை வழங்குமாறு நீண்டகாலமாகக் கோரி வந்தது குறிப்பிடத்தக்கது.

(ம-135)

## அவசரகாலச் சட்டம் காலாவதியான பின்னர்

# கொழும்பு நகரின் பாதுகாப்பு பொலீஸார் வசம் என அறிவிப்பு

கொழும்பு,ஜூலை17

அவசரகாலச் சட்டம் காலாவதியானதைத் தொடர்ந்து தலைநகர் கொழும்பின் சகல நுழைவாயில்களிலும், வீதிச் சோதனை நிலையங்களிலும் இருந்து படையினர் வாபஸ் பெறப்பட்டு அவர்களுக்குப் பதிலாக அவ்விடங்களில் பொலீஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகக் கொழும்பு மாவட்டப் பிரதிப் பொலீஸ்மா அதிபர் ஜெராட் இக்னேசியஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பு நகரின் பாதுகாப்புத் தொடர்ந்தும் பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும், தற்போதைய சூழ்நிலையில் நகரினுள் பாரிய தாக்குதல்கள் இடம்பெற வாய்ப்புகள் இல்லை என்றும் அவர் கூறியிருக்கிறார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

தற்போது கொழும்பு நகரின் பாதுகாப்புக்காக, கொழும்பு நகருக்குள் உள்ள பொலீஸ் நிலையங்களில் இருந்தே பொலீஸார் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு நகரின் பிரதான நுழைவாயில்களான தெஹிவளைப் பாலம், பாமன்கடைப் பாலம், பேலியகொடைப பாலம், பொறளை மற்றும் அத்தியடி உட்பட அனைத்து நுழைவாயில்களிலும் அவற்றையொட்டிய பகுதிகளிலும் நகரினுள் சுமார் 60 வீதிச் சோதனை நிலையங்களிலும் பொலீஸாரே கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

சந்தேகத்திற்கிடமானவர்களின் நடமாட்டங்கள் மற்றும் வாகனச் சோதனைகளையும் பொலீஸாரே மேற்கொள்வர். அத்துடன் இருள் மங்கும் மாலை நேரம்முதல், அதிகாலை வரை இந்த நடவடிக்கைகளில் விஷேட நடமாடும் பொலீஸ் சேவையும் இடம்பெறுகிறது எனவும் தெரிவித்தார்.

இதேவேளை -

கொழும்பு நகரின் பல்வேறு பகுதிகளில் வீதிச் சோதனை நிலையங்களில் பொலீஸாருடன் படையினரும் இணைந்தே காணப்படுகின்றனர். இரவு வேளைகளில் பல பகுதிகளில் படையினர் மட்டுமே வீதிச் சோதனைகளில் ஈடுபடுவதையும் காணமுடிகிறது. என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று சுட்டிக்காட்டியிருக்கிறது. (ஐ)

### விளையாட்டை ஊக்குவிக்க ஏற்பாடு

மூளாய்,ஜூலை17

பாரம்பரிய விளையாட்டுகளை ஊக்குவிப்பதற்கு வலிகாமம் மேற்குப் பகுதியில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


மேற்படி பகுதியில் நீண்டகாலமாக வழக்கத்தல் இருந்துவந்த பாரம்பரிய விளையாட்டுகள் பல ஊக்குவிக்கப்படாமல் வழக்கொழிந்துபோகும் நிலை காணப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து இவ்விளையாட்டுகளை ஊக்குவிப்பதற்கு வலி.மேற்குப் பிரதேச செயலகம் தற்போது நடவடிக்கை எடுத்துள்ளது. (ஐ-99)

### நீதிமன்றில் பொலீஸாரைத் தாக்கிய பெண்

தென்மராட்சி,ஜூலை17

விவாகரத்து வழக்கின் மனுதாரரான பெண் ஒருவர், நீதிமன்ற நடவடிக்கைக்குக் குந்தகம் விளைவிக்கும் விதத்தில் நீதிமன்றினுள் சத்தமிட்ட போது, நீதிவானின் பணிப்பின் பேரில் அவரைச் சத்தமிடவேண்டாமெனக் கூறவந்த பெண் பொலீஸாரை, அப்பெண் தாக்கிய சம்பவம் அண்மையில் பருத்தித்துறை நீதிமன்றில் இடம்பெற்றது.

இப்பெண்ணுக்கு நீதிவான் ஒரு வார சிறைத் தண்டனை விதித்ததுடன், இக்காலப் பகுதிக்குள் இப்பெண்ணை உளநல பரிசோதனைக்கு உட்படுத்துமாறு யாழ்.உளநல மருத்துவ நிபுணர் தயா சோமசுந்தரம் அவர்களைப் பணித்தார். (ம-117)



மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் க.மயிலேறும்பெருமாளுக்கு, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் திரு.வீ.ப. வேலாயுதபிள்ளை மாலை சூட்டி வரவேற்பதை இப் படத்தில் காணலாம். (உ-182)

# மா தட்டுப்பாட்டை நீக்குமாறு அமைச்சரிடம் முறைப்பாடு

யாழ்.குடாநாட்டில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் கோதுமை மாவுக்கு நிலவும் தட்டுப்பாடு குறித்து, பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து முறையிட்டிருக்கின்றனர்.

யாழ.மாவட்ட விவசாய உற்பத்தி நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சீ.வே.கே. சிவஞானம் தலைமையில் சென்ற சங்கத் தலைவர்கள் மா விநியோகத்தில் உள்ள தடங்கல்களை நிவர்த்திசெய்து தருமாறு அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர்மா தட்டுப்பாட்டை உடனடியாக நிவர்த்திசெய்து அதனைச் சீராக விநியோகிப்பதற்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்வதாக அமைச்சர் தேவானந்தா கூட்டுறவுச் சங்கத் தூதுக் குழுவினரிடம் உறுதியளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை-

யாழ்.பல்கலைக்கழகம் மூடப்பட்டிருப்பது குறித்தும் மற்றும் மாணவர்களின் கல்வியின் எதிர்காலம் குறித்தும் சங்கத் தூதுக் குழுவினர் அமைச்சருடன் உரையாடினர்.(ஐ-17)

# பிரான்ஸ் அரசமைப்பையே ரணில் விரும்புகிறாராம்!

## ஜனாதிபதியிடம் தெரிவித்தார்

கொழும்பு,ஜூலை17

நாட்டின் தற்போதைய நெருக்கடிக்கு பிரான்ஸ் அரச முறையில் (Franch Governmental System) தீர்வு காணும் யோசனையொன்றை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடந்தவாரம் ஜனாதிபதியைச் சந்தித்தபோது முன்வைத்துள்ளார்.

கடந்த 10ஆம் திகதி இரவு பத்து மணியளவில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. மிகவும் இரகசியமாக நடைபெற்ற இந்தச் சந்திப்புக் குறித்துத் தற்போது அரசதரப்பினர் தகவல்களை வெளியிட்டதன் மூலம் அதுபெரும் சர்ச்சையாக மாறியுள்ளது. (ஐ)

## சர்வஜன வாக்கெடுப்பு என்று அரசுகூறும்

# சர்வாதிகார வார்த்தைகளைக் கேட்டு சிறுபான்மையினர் ஏமாறிவிடக் கூடாது!

## விக்கிரமபாகு கருணாரத்ன கூறுகிறார்

சிறுபான்மையின மக்களுக்கு சமத்துவம் வழங்குவதற்கான அரசமைப்புக்கு, மக்கள் ஆணை பெறுவதறகே சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்போவதாகக் கூறும் அரசின் சர்வாதிகார வார்த்தைகளுக்கு ஏமாந்து போய்விடாதீர்கள்.

புதிய இடதுசாரி முன்னணியின் பொதுச செயலாளரும், மேல்மாகாண சபை உறுப்பினருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன இவ்வாறு கேட்டிருக்கிறார்.

தேசிய அரசாங்கம் என்ற பயமுறுத்தலுக்குச் சவாலாகவே ஜனாதிபதி குமாரதுங்க நாடாளுமன்றக் கூட்டத்தொடரை ஒத்தி வைத்துள்ளார். அதேவேளை அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்கா உட்பட ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தேசிய அரசு ஒன்றை அமைக்கத் திட்டமிட்டு வருகின்றனர். அத்தகைய அரசாங்கம் ஒன்று அமைககப்படுமெனில் அது சிங்களப் பேரினவாதிகளுக்குச் சாதகமாகவே அமையும் என்பதையும், சிறுபான்மை மக்கள் உணரவேண்டும். எனவே இன்றைய நெருக்கடியான சூழ்நிலையில் பேரினவாத சக்திகளின் பசப்பு வார்த்தைகளுக்கு மயங்கிவிடாமல், தேசிய இனப் பிரச்சினைக்கு உரிய தீர்வைக் காண்பதற்கு இடதுசாரி சக்திகளும், சிறுபான்மையின மக்களும் ஒன்றுபட முன்வரவேண்டும்-என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட பிரிட்டிஷ் பிரஜை கொழும்பில் கைது

கொழும்பு,ஜூலை17

சிறுவர் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டின்பேரில் பிரிட்டிஷ் உல்லாசப் பயணி ஒருவர் கொழும்பில் உள்ள ஹோட்டல் ஒன்றில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பந்தப்பட்ட ஹோட்டலில் - திடீர் சோதனை நடத்தியபோது சிறுவா துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டிருந்த இந்த பிரிட்டிஷ் பிரஜை கைது செய்யப்பட்டார். அவருடன் இருந்த சிறுவனும் மீட்கப்பட்டுள்ளதாக பெண்கள் மற்றும் சிறுவர்கள் பொலீஸ் பணியகத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட பிரிட்டிஷ் பிரஜை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப பட்டுள்ளார்.

1999இல் இவ்வாறான குற்றச்சாட்டின்பேரில் கைது செய்யப்பட்ட நோர்வேப் பிரஜை ஒருவருக்கு 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயம் மீது கடந்த 95ஆம் ஆண்டு இடம்பெற்ற விமானத் தாக்குதலில் பலியானோரின் நினைவாக நவாலி வடக்கு புலவர் வீதியில் அமைக்கப்பட்ட நினைவுக்கல் அண்மையில் திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டது.

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் மயில்வாகனம் இராசையா நினைவுக்கல்லை திரைநீக்கம் செய்து வைப்பதை முதல் படத்தில் காணலாம். அருகில் ஹேமலதா செல்வராஜா குழந்தைகள் ஞாபகார்த்த நிதியத்தின் செயலாளர் திருமதி செ.செல்வராணி, திருமதி கந்தையா அழகரத்தினம் ஆகியோரும் குழந்தைகளும் படத்தில் உள்ளனர். (ஐ-185)

### குருநகரில் விதவைகளுக்கு நிதி உதவி

குருநகர்,ஜூலை17

குருநகரிலுள்ள விதவைகளில் சுமா 300 பேருக்கு குருநகர் ஜேம்ஸ் சமூக சேவை அமைப்பினால் தலா 1000ரூபா வழங்கப்பட்டது.

இந்த நிதி வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் பகல் 11.00 மணிக்கு, குருநகர் புனித யாகப்பர் ஆலய மண்டபத்தில் இந்த அமைப்பின் தலைவர் திருமதி ம.யூஜின் தலைமையில் நடைபெற்றது. குருநகர் பங்குத்தந்தை அருட்திரு. பி.எவ். பொனிபஸ் நிகழ்வில் பிரதம விருந்தினராகவும், யாழ்.சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை அதிபர் எஸ்தங்கராஜா ஜே/68 றெக்கிளமேசன் கிழக்கு கிராம சேவையாளர் எஸ்.யூலன்,சமாதான நீதிவான் எஸ்.ஞானசீலன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டார்கள். (ம-51)

### மீன் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜூலை17

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் உயர் தேசிய முகாமைத்துவ (H.N.D.M) முதலாம் வருட மீள் பரீட்சை இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் நிறுவனத்தில் நடைபெறவுள்ளது. (ஐ)

# 'எய்ட்ஸை'க் கட்டுப்படுத்த இலங்கைக்கு உலக வங்கி நிதி

இலங்கையில் 'எய்ட்ஸ்' நோயைக கட்டுப்படுத்தும் திட்டங்களுக்கு என உலக வங்கி ஒரு கோடி டொலர் நிதிஉதவி வழங்க உள்ளது.

சுகாதார அமைச்சர் டபிள்யூ.டி.ஏ. செனிவிரத்தினவின் முயற்சியால் இந்த நிதிஉதவி கிடைத்ததாக சுகாதார அமைச்சு வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான நிதிஉதவி குறித்து, தற்போது இலங்கை வந்துள்ள உலகவங்கித் தூதுக்குழுத் தலைவர் சலீம் ஹபய்ம் சுகாதார அமைச்சரிடம் தெரிவித்துள்ளதாகவும், அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேருவளை முதல் நீர்கொழும்பு வரையான கரையோரப் பகுதிகளில் போதை மருந்துக் கடத்தலை தடுப்பதற்கும் -

'எய்ட்ஸ்' பற்றிய விழிப்புணர்வை பொதுமக்களிடம் ஏற்படுத்துவதற்கான, விசேட நிகழ்சிகளை நடத்துவதற்கும் -

இந்த நிதி பயன்படுத்தப்படும் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

# யாழ். கலாசார அலுவலர்கள் திருமலை செல்ல வேண்டியதில்லை

## செயலமர்வு இங்கு நடக்கும்

யாழ்ப்பாணம்,ஜூலை17

திருகோணமலையில் எதிர்வரும் 23ஆம் திகதி முதல் நடைபெறவுள்ள, கலாசார உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வில், யாழ்.மாவட்டக் கலாசார உத்தியோகத்தர்கள் கலந்து கொள்ளத்தேவையில்லை என்றும் -

இவர்களுக்கென வேறொரு தினத்தில் யாழ்ப்பாணத்தில் செயலமர்வு நடத்தப்படும் எனவும் -

வடக்கு - கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் எஸ்.எதிர்மன்னசிங்கம் அறிவித்துள்ளார்.

இந்தச் செயலமர்வை நடத்துவதற்கென பண்பாட்டலுவல்கள் திணைக்கள அதிகாரிகள் குழு ஒன்று விரைவில் யாழ்ப்பாணம் வருகை தரும் எனவும் - அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வெளிவந்துவிட்டது

A/L அளவையியல் - G.A.Q. மெய்யியல் மாணவர்களுக்கு புதிய பாடத் திட்டத்துக்கமைவாக அளவையியற் போலிகள்- விலை 50/= மட்டுமே. நியமம் - நியமமில் - சொற்போலிகள் அனைத்தும். ஆசிரியர். திரு.வே.யுக பாலசிங்கம் M.A. Dip -IN. EDU எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (90071)

## தவறிவிட்டது

மிருசுவில் வடக்கு மிருசுவிலைச் சேர்ந்த துரைராசா வினோதினி என்பவரது விசேட அ.அட்டை (இல. 091026486) 14.07.2001 அன்று மானிப்பாயில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து நிருத்திகா ஜுவல்லர்ஸ், 177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (90146)

மகேசன் வீதி, நவாலி வடக்கைச் சேர்ந்த கிருஸ்ணபிள்ளை பாஸ்கரன் என்பவருடைய விசேட அ.அட்டை (இல.0905016125) கடந்த 12.07.2001 அன்று யாழ்.நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்படி முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (C/17453)

## புறொயிலர் குஞ்சுகள்

புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- வை.சிவகுமார், 461, நாவலர் வீதி, அத்தியடி அல்லது றஞ்சிதன், சுபகணநாதன், பண்ணை வீதி, மாவிசந்தி, அல்வாய். (90139)

## விற்பனைக்கு

SONY T.V. 2020, டெக் G.15 என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு:- 25, சிவன் புதுவீதி, நல்லூர்.(90140)

## வினாத்தாள்

இரண்டாம் தவணைக்கான ஆண்டு 6 தொடக்கம் 11வரை சகல பாடங்களுக்கான மாதிரி வினாத் தாள்களை தலையாழி பிறவுண் வீதியில் உள்ள நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம். (90152)

## புறொயிலர் விற்பனைக்கு

Broiler குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி.
T.P. No. 3529, 2867. (90149)

## விற்பனைக்கு

இரண்டு மாதம் நிரம்பிய அல்சேஷன் நாய்க்குட்டிகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:- இல.6, நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கு. (இராமகிருஷ்ணா பாடசாலைக்கு அருகில்) (90134)

## திருவாசக முற்றோதல்

தென்மராட்சி,ஜுலை17

சாவகச்சேரி வித்தகம் நிலைய அன்பர்களும் தென்மராட்சி திவ்விய ஜீவன சங்கத்தினரும் இணைந்து நடத்தும் திருவாசக முற்றோதல் எதிர்வரும் 20ஆம் திகதி கரவெட்டி அந்திராயன் முருகமூர்த்தி ஆலயத்தில் நடைபெறும். (ம-117)

## கூட்டுறவு தினம்

தென்மராட்சி,ஜுலை17

79ஆவது சர்வதேச கூட்டுறவு தினத்தையொட்டி கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் எதிர்வரும் 29ஆம் திகதி கூட்டுறவு தின விழாவினை சங்கக் காரியாலயத்தில் நடத்தவுள்ளதாக சங்கத் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை தெரிவித்தார். (ம-117)

## பனையால் வீழ்ந்து மரணம்

யாழ்ப்பாணம்,ஜுலை17

கள் சீவுவதற்காக பனை மரத்தில் ஏறிய ஒருவர் தவறி வீழ்ந்து உயிரிழந்தார்.

சங்கானை நிற்சாமம் பகுதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இச் சம்பவத்தில் சின்னையா திருநாவுக்கரசு(வயது65) என்பவரே மரணமானவராவார்.

பனையால் வீழ்ந்து படுகாயமடைந்த இவர் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சில மணி நேரத்தில் அங்கு மரணமானார். சடலம் மரணவிசாரணையின் பின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ம-15)

## டிராக்டரில் இருந்து வீழ்ந்து குழந்தை காயம்

டிராக்டர் பெட்டியிலிருந்து தவறி வீழ்ந்த ஒன்றரை வயதுக் குழந்தை கால் முறிந்து படுகாயமடைந்த சம்பவம் நேற்று முன்தினம் கரவெட்டியில் இடம்பெற்றது.

இதேயிடத்தைச் சேர்ந்த சிவராமன் சிவதர்சன் என்ற குழந்தையே காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-117)



மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு மானிப்பாய் மகளிர் கல்லூரியில் அண்மையில் சுகாதாரக் கண்காட்சி, கருத்தரங்கு ஆகியவற்றை நடத்தினர்.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட சமூகவியல்துறை தலைவர் டாக்டர் என்.சிவராசா அதில் சிறப்புரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம்.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே.கணேஸ்வரராஜா, யாழ்.சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர்.உமா சிவபாதசுந்தரம், வலி.தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் வெ.அன்ரன் ஜோன்சன், யாழ்.பிராந்திய சுகாதாரக் கல்வி உத்தியோகத்தரும், தலைமை பொதுச்சுகாதார பரிசோதகருமான எஸ்.இராஜேந்திரம் ஆகியோர் மேடையில் உள்ளனர். (ஐ-135)

# அல்லாரை, கல்முனை சம்பவங்களை கண்டித்து வரதர் அணி அறிக்கை

யாழ்ப்பாணம்,ஜுலை17

துப்பாக்கி ஏந்தியிருப்பவர்கள் இன வேறுபாடுகளுக்கும் அப்பால் மனித உரிமைகளை எவ்வளவு தூரம் மலினமாகக் கருதுகிறார்கள் என்பதை அல்லாரை, கல்முனைப் பகுதிகளில் இடம்பெற்ற சம்பவங்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன.

அல்லாரையில் இடம்பெற்ற பாலியல் வல்லுறவுச் சம்பவம் மற்றும் கல்முனையில் இரண்டு முஸ்லிம் மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் வரதர் அணித் தலைவரும், வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான அ.வரதராஜப்பெருமாள் விடுத்த பத்திரிகைச் செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மருதானைச் சோதனைச் சாவடியிலிருந்து அல்லாரை மற்றும் இளவாலை வரை அடுத்தடுத்து பாலியல் வன்முறைகள் வடக்கு - கிழக்கிலும், தெற்கிலும் தமிழ்ப் பெண்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பெண்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் இந்த வன்முறைகள் பெண்களின் உரிமைகள் பற்றி மாத்திரமல்ல, அடிப்படை மனித உரிமைகள் மற்றும் பாதுகாப்பு பற்றிய அச்சமூட்டும் நிலைமைகளின் வெளிப்பாடுகளாகவும் அமைந்துவிடுகின்றன.

இச்சம்பவங்கள் பாலுணர்வு வெறியின் விளைவுகள் என்பதற்கு மேலாக இந்த நாட்டில் நிலவுகின்ற இனரீதியான மேலாண்மை வெறியின் விளைவென்றே கருத வேண்டியுள்ளது. இந்தக் காட்டுமிராண்டித்தனத்தை நீதிமன்றங்களாலும், சட்டங்களாலும் மற்றும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டிய நிறுவனங்களாலும் தடுத்து நிறுத்த முடியாது போவதனால் இந்த நிறுவனங்கள் மீதுள்ள அற்ப சொற்ப நம்பிக்கையையும் மக்கள் இழந்து கொண்டிருக்கின்றனர்.

அரசாங்கமும் சமூக நிறுவனங்களும் இந்த விடயத்தில் உரிய நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்ளவேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

கல்முனையில் பொலீஸார் மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தினால் இரு மாணவர்கள் கொல்லப்பட்டமையை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

துப்பாக்கி ஏந்திய பொலீஸாரும் இராணுவத்தினரும் யார் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்யலாம் என்ற மேலாண்மை அதிகாரம் தொடர்ந்தும் நிலவுவது மேலும் பாரதூரமான விளைவுகளையே ஏற்படுத்தும். சட்ட பூர்வமான நிறுவனங்கள் அராஜகமாகச் செயற்படத் தொடங்கிவிட்டால் பின்னர் நாட்டில் சட்ட விரோதமான நிறுவனங்கள் ராஜாங்கம் நடத்துகின்றன என்பதே அர்த்தமாகும்.

எனவே, அரசாங்கம் உடனடியாக இவ்விடயத்தில் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இந்த நாட்டில் இப்போது சட்ட பூர்வமான நிறுவனங்களைக் கட்டுப்பாடு மற்றும் ஒழுங்குடன் செயற்பட வைப்பது உடனடி அவசியத் தேவைகளில் ஒன்றாகிவிட்டது என்பதை உணர்ந்து இடதுசாரி, ஜனநாயக மற்றும் முற்போக்கு சக்திகள் அனைவரும் ஒரு முகமாகச் செயற்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

## நெருப்புக்காய்ச்சல் பரவுகின்றது

தென்மராட்சி,ஜுலை17

வடமராட்சியில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள பகுதிகளில் நெருப்புக்காய்ச்சல் வேகமாகப் பரவி வருகிறது. இதனால் பீடிக்கப்பட்ட பலர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கரவெட்டி நவிண்டிலில் தங்கியுள்ள ஒரே குடும்பத்தைச் சேர்ந்த செல்வநாயகம் நகுலேஸ்வரன் (வயது 14), செல்வநாயகம் செல்வரதி (வயது 13), செல்வநாயகம் அம்பிகாபதி (வயது 20) இவர்களுடன் தங்கியுள்ள கே.காந்தரூபன் (வயது 20) ஆகியோரும் -

துன்னாலை கொடிக்காடு வீட்டுத் திட்டமுகாமில் தங்கியுள்ள கே.இரத்தினகுமார் (வயது 28) இவரது மனைவியான இரத்தினகுமார் ரவிகலா (வயது 26), பாலசிங்கம் சசிகலா (வயது 28), மனோகரன் பத்மாவதி (வயது 27), ஜெகதீஸ்வரன் ஜெயதீபன் (வயது 6) ஆகியோரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நெருப்புக்காய்ச்சலுடன் வயிற்றோட்டம், வாந்தி ஆகியவற்றால் பீடிக்கப்பட்டவர்களும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மக்கள் நெருக்கமாக வாழ்வதால் நெருப்புக்காய்ச்சல் வேகமாகப் பரவக்கூடிய வாய்ப்புகள் உள்ளதால் கிணற்று நீரைக் கொதிக்க வைத்துப் பருகுமாறும், காய்ச்சல் வயிற்றோட்டம், வாந்தி ஆகியவற்றால் பீடிக்கப்படுவோர் உடனடியாக அருகில் உள்ள சுகாதார உத்தியோகத்தர்களுடன் தொடர்புகொள்ளுமாறும் சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.


## வில்லூன்றி புனித தீர்த்தம் ஆடி அமாவாசைப் பெருவிழா

20.07.2001வெள்ளிக்கிழமை

*தீர்த்தோற்சவம்*

காலை 6.45 மணி — வசந்த மண்டபப் பூசை
காலை 8.00 மணி — தீர்த்த வாரி
காலை 8.30 மணி முதல் 10 மணி வரை — தீர்த்தக் கட்டடத்தில் அனுக்கிரகம்
காலை 10 மணி — சுவாமி கோயிலுக்கு எழுந்தருளல்

*பிதிர்க்கடன்கள்*

காலை 8.15 மணிக்கு தீர்த்தவாரி முடிந்தவுடன் பொதுமக்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த் தர்ப்பணங்கள் செய்து கொள்ளவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தர்மபரிபாலன சபை, வில்லூன்றி தேவஸ்தானம்,
பரிபாலனசபை, வில்லூன்றி புனித தீர்த்தம், வில்லூன்றி.

(90157)



## 31 ஆவது நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 21 . 04 . 1924



உதிர்வு 17 . 06 . 2001

### திருமதி பொன்னையா கண்மணி

பாசத்தின் இருப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய்
நேசமுடன் எமை வளர்த்து
தேசம் புகழவைத்த
அன்புத் தெய்வத்துக்கு எமது அஞ்சலிகள் !

எமது தாயாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு அஞ்சலிகள் தெரிவித்தவர்களுக்கும், எமக்கு பல்வேறு விதத்தில் உதவிகள் செய்தவர்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (17.07.2001) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*ஜெயா தொலைத்தொடர்பகம்,*
*இராச வீதி, அச்சுவேலி.*
தொலைபேசி இல: 070-212599

பொ.ஜெயச்சந்திரனும்
சகோதரர்களும்
(பிள்ளைகள்) (90158)



## தேவை

எமது புத்தகசாலையில் வேலை செய்வதற்கு ஆண்/பெண் இருபாலாரும் தேவை. சுயவிவரங்களுடன் நேரில் வரவும்.

- முகாமையாளர்,
ஸ்ரீகாந் புத்தகசாலை,
*மின்சார நிலைய வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(C/17456)



## கண்ணீர் அஞ்சலி

சாவகச்சேரி பிரதேச சபையின்
ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்

### திருமதி சற்குணதேவி திருக்குமரன்

அவர்கள் சிகிச்சைக்காகக் கொழும்புக்குச் சென்று சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த சமயம் 13-07-2001 அன்று இறைவனடி சேர்ந்ததையிட்டு அன்னாருக்கு எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம். அவர்களின் பிரிவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

*ஊழியர் நலன்புரிச் சங்கம்.*
*சாவகச்சேரி பிரதேச சபை.*

தலைவர், செயலாளர்,
உறுப்பினர்கள்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

(90160)



## மரண அறிவித்தல்

### திருமதி இராஜேஸ்வரி செல்வரெட்ணம்

*(இராசக்கா)*

*(இளைப்பாறிய ஆசிரியை, யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை)*

தெல்லிப்பழை வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி செல்வரெட்ணம் 11.07.2001 புதன்கிழமை லண்டனில் கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற W.V.செல்வரெட்ணத்தின் அன்பு மனைவியும், இராஜசெல்வன் (கனடா), வத்ஸலா (லண்டன்), வசந்தி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், லோஜினி (கனடா), Dr.ஜெய்க்குமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், நிஷாரி, நிரோஷி, றொஷான், ஜெகான் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தனேஸ்வரி (கொழும்பு), காலஞ்சென்ற மகேஸ்வரி, காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் இந்திராணி, காலஞ்சென்ற மதுரராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை எதிர்வரும் (21.07.2001) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இந்திராணி - கிருபராஜ்
(சகோதரி)

*38A, றக்கா லேன்,*
*யாழ்ப்பாணம்.* (90153)

# பல்கலை. ஊழியர்கள் சங்கத்தின் கண்டனக் கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 17

மாணவன் திவ்வியன் கைது செய்யப்பட்டதைக் கண்டித்தும், பல்கலைக்கழகம் மூடப்பட்டதைக் கண்டித்தும் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் நேற்று நடத்தவிருந்த கண்டனப் பொதுக்கூட்டம் கடைசி நேரத்தில் பிற்போடப்பட்டதாக ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது.

பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருக்கும் பாடசாலை மாணவர்களை நாளை முதல் மீண்டும் பாடசாலைகளுக்குத் திரும்புமாறு பல்கலைக்கழக மாணவர்கள் வேண்டியுள்ளனர். இது மாணவர்களின் நல்லெண்ணத்தைக் காட்டுவதாக அமைந்துள்ளது. எனவே தற்போது உருவாகி வரும் நல்லெண்ண நடவடிக்கைகளைக் கருத்திற் கொண்டு எமது கண்டனக்கூட்டத்தைப் பிற்போட்டுள்ளோம்—என்று ஊழியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது- (ஐ-7)

# ஆடி அமாவாசையையொட்டி கீரிமலைக்கு விசேட பஸ்சேவை

யாழ்ப்பாணம், ஜூலை 17

ஆடி அமாவாசை தினமான எதிர்வரும் 20 ஆம் திகதி கீரிமலையில் இடம்பெறும் தீர்த்தோற்சவத்தில் பங்கேற்கச் செல்லும் பக்தர்களின் வசதி கருதி வடபிராந்திய போக்குவரத்துச் சபை விசேட பஸ் சேவைகளை நடத்த உள்ளதாக மேற்படி போக்குவரத்துச் சபை பொதுமுகாமையாளர் எஸ். மணிவாசகம் தெரிவித்துள்ளார்.

பக்தர்கள் தெல்லிப்பழை ஊடாகவும், சேந்தான்குளம் ஊடாகவும் கீரிமலைக்குச் சென்று வர அனுமதிக்கப்பட்டுள்ளதால் இந்தப் பகுதிகளில் இருந்து ஆடி அமாவாசைத் தினத்தன்று கீரிமலைக்கு விசேட பஸ்சேவைகள் நடத்தப்பட உள்ளன. அன்றைய தினம்—

யாழ்ப்பாணத்திலிருந்து நடத்தப்படும் 787, 788, 789, 736 ஆகிய வழித்தட சேவைகள் சேந்தான் குளம் வரையிலும்—யாழ்ப்பாணத்திலிருந்து கே. கே. எஸ். வீதி ஊடாகவும் பலாலி வீதி ஊடாகவும் நடத்தப்படும். 764, 769. 770, 771, 768 ஆகிய வழித்தட சேவைகள் தெல்லிப்பழை வரையிலும் நீடிக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று 811 வழித்தட சேவைகளும் தெல்லிப்பழை வரை செயலாற்றும்.

அத்துடன் காரைநகரிலிருந்து சித்தன்கேணி, பண்டத்தரிப்பு ஊடாக சேந்தான்குளம் வரையும் அன்றைய தினம் விசேட பஸ் சேவைகள் நடத்தப்படும்.

தெல்லிப்பழையிலிருந்து கீரிமலைக்குஇருவழிக்கட்டணமாக 15 ரூபாவும், சேந்தான்குளத்திலிருந்து கீரிமலைக்கு இரு வழிக்கட்டணமாக 10 ரூபாவும் அறவிடப்படும்.

— இவ்வாறு வடபிராந்திய போக்குவரத்துச் சபை பொதுமுகாமையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-ஓ)


## கண்ணீர் அஞ்சலி

எமது கலாசாலையின் ஆசிரிய மாணவி
செல்வி கு. சிவகௌரி அவர்களின்
அன்புத் தந்தையார்
**சின்னத்தம்பி குணரத்தினம்**

அவர்களின் மறைவினால் துயருற்று இருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- கலாசாலைச் சமூகம்.

ஆசிரிய கலாசாலை.
கோப்பாய். (90170)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் முன்னாள் அதிபர்
**பண்டிதர் சின்னத்தம்பி குணரத்தினம்**

அவர்கள் 15-07-2001 இல் இயற்கை எய்தியமையால் மீளாத் துயரில் ஆழ்ந்திருக்கும் அவரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அவரின் ஆத்மா சிவபதப் பேறடைய இறைஞ்சி நிற்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பெற்றோர் அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

யா/பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்,
பண்டத்தரிப்பு.
(90166)

## துயர் பகிர்கின்றோம்

எமது பிரதேச செயலக சமுர்த்தி உத்தியோகத்தர்
செல்வி றஜனி பொன்னம்பலம்
அவர்களின் பாசமிகு தந்தையார்
**வைத்தி பொன்னம்பலம்**

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்
பிரதேச செயலகம் (வலி-கிழக்கு,)
90169) கோப்பாய்.


# சமய சந்நிதிகளில்

யாழ்.கோட்டை ஸ்ரீமுனீஸ்வரன் ஆலயத்தின் தேர்த் திருவிழா இன்று செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ளது.

நண்பகல் 12 மணிக்கு சங்காபிஷேகமும் அதனைத் தொடர்ந்து பிற்பகல் 3 மணிக்கு வசந்தமண்டபப் பூஜையும் இடம்பெறும். (ஐ-17)

★ ★ ★

ஈச்சமோட்டை கலட்டிப் புலம் ஞானவைரவர், ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவத்தின் இறுதிநாளான திருமஞ்சவீதிப் பவனி நாளை புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகும்.

மஞ்சப்பவனி ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகி விதானையார் வீதி, ஈச்சமோட்டைவீதி, பழைய பூங்கா வீதி, கொழும்புத் துறைவீதி, புங்கன்குளம் வீதி வழியாகச் சென்று அங்கிருந்து ஈச்சமோட்டை பிரதான வீதியூடாக ஆலயத்தைச் சென்றடையும்.

மறுநாள் காலையில் பிராயச்சித்த அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து மகேஸ்வரப் பூஜையும் இடம்பெறும். (ஐ-17)

★ ★ ★

பருத்தித்துறை புலோலி மத்தி அவ்வொல்லைப் பிள்ளையார் கோயிலில் குடிகொண்டிருக்கும் காத்தவராயர் சுவாமியின் வருடாந்த பொங்கலும் வேள்வியும் நாளை நடைபெறும்.

இது தொடர்பான கிரியைகள் இன்று ஆரம்பமாகிறது. பொங்கலுக்கான மடைப் பண்டம் இன்று இரவு எடுக்கப்படும். (உ-15)

★ ★ ★

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயத்தில் முதலாவது ஆடிச்செவ்வாய் திருவிழா இன்று சவ்வாய்க் கிழமை பக்திபூர்வமாக நடைபெறவுள்ளது. (உ-88)

★ ★ ★

சுதுமலை ஈஞ்சடி ஞான வைரவர் கோயில் தேர்த் திருவிழா இன்று செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ளது.

மஹோற்சவ காலத்தில் கடந்த 10 தினங்கள் ஆன்மீக சொற்பொழிவாற்றிய ஆசிரியர் ஆறு. திருமுருகன் இன்று தேவஸ்தானத்தினரால் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளார்.

மஹோற்சவ கிரியைகளை நடத்திய மகேஸ்வரக்குருக்களும் கௌரவிக்கப்படுவார்.

# தொண்டர்கள் கடமையில்!

யாழ்ப்பாணம், ஜூலை 17

போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவுத் தொண்டர்கள் நேற்று யாழ். நகரப் பகுதியில் பொலீஸாருடன் இணைந்து கடமையில் ஈடுபட்டனர்.

இவர்களுக்கு யாழ். பொலீஸ் நிலையத்தில் போக்குவரத்துக் கண்காணிப்புத் தொடர்பான பயிற்சிகள் அண்மையில் வழங்கப்பட்டது தெரிந்ததே. (உ-10)

# பகிஷ்கரிப்பைத் தொடர்வதற்கு தொழில்நுட்ப மாணவர் முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ். பல்கலைக்கழக மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியனை விடுதலை செய்யும் வரை எமது பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடர்ந்து நடைபெறும்.

—இவ்வாறு யாழ்.தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் மன்றம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அவர்கள் நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

திவ்வியன் கைது செய்யப்பட்டதைக் கண்டித்தும் பல்கலைக்கழகம் மூடப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் யாழ் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் நடத்தி வரும் பகிஷ்கரிப்பை திவ்வியன் விடுதலை செய்யப்படும் வரை தொடர்ந்து நடத்துவதற்கு தீர்மானித்துள்ளோம்.

பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய உயர் கல்வி நிறுவனங்களும் தாங்கள் நடத்தி வரும் பகிஷ்கரிப்புப் போராட்டத்தை திவ்வியன் விடுதலை செய்யப்படும் வரை தொடர முன்வரவேண்டும் என்று தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் சமூகம் கேட்டுக் கொள்கின்றது— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-6)

# மாணவர் விவரம் பதிவு

யாழ்ப்பாணம், ஜூலை 17

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் கல்வி கற்று தற்போது இடம்பெயர்ந்து வேறு பாடசாலைகளில் கல்வி கற்று வரும், ஜி. சி. ஈ. சாதாரண தர பரீட்சைக்கு முதலாம் முறையாகவும், இரண்டாம் முறையாகவும் தோற்றவுள்ள மாணவர்களையும் மற்றும் தரம் 9 இல் கற்கும் மாணவர்களையும் தமது சுயவிவரங்களை வலிகாமத்தில் இயங்கும் தென்மராட்சிக் கல்விக் கோட்டத்திலும், கரவெட்டியிலுள்ள 'ரலன்ற்' கல்வி நிலையத்திலும் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்பாகப் பதிவு செய்து கொள்ளுமாறு அதிபர் கேட்டுள்ளார். (ஐ)

# கடற்படை சிப்பாய் தற்கொலை

யாழ்ப்பாணம், ஜூலை 17

கடற்படைச் சிப்பாய் ஒருவர் தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்படுகின்றது.

நேற்றுக் காலை 8.30 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் எஸ். இந்திரஜித் (வயது 19) என்ற சிப்பாயே இறந்தவராவார்.

அல்லைப்பிட்டி, மண்கும்பான் வீதியில் உள்ள காவலரணில் கடமையில் இருந்த வேளையிலேயே இவ்வாறு அவர் தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்படுகின்றது.

சம்பவ இடத்துக்கு நேற்றுச் சென்ற யாழ். நீதிமன்ற பதில் நீதிவான் மு. திருநாவுக்கரசு சடலத்தைப் பார்வையிட்டதுடன் பிரேத பரிசோதனைக்காக சடலத்தைக் கொழும்புக்கு அனுப்பி வைக்குமாறும் உத்தரவிட்டார்.

சடலத்தில் கழுத்துக்கும் நாடிக்கும் இடையிலான தொண்டை முடிச்சுப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது (உ-10)

# பலாலி ஆசிரியமாணவர் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 17

மாணவன் திவ்வியனை விடுதலை செய்யக் கோரியும் யாழ். பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளதைக் கண்டித்தும் பலாலி ஆசிரியர் கலாசாலை மாணவர்கள் நேற்று தங்களது விரிவுரைகளைப் பகிஷ்கரித்து எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

இந்த அமைதிப் போராட்டத்தின் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து மாணவர் மன்றத்தினர் கூடி ஆராயவுள்ளதாக மன்றத் தலைவர் தெரிவித்தார்.

இதே காரணத்துக்காக பாடசாலை மாணவர்கள் மேற்கொண்ட பகிஷ்கரிப்பு நேற்றும் தொடர்ந்தது.

அவர்கள் நாளை வழமை போல் பாடசாலைக்குத் திரும்புவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-3)

# மிருசுவில் படுகொலை வழக்கு அ'புர நீதிமன்றுக்கு மாற்றம்?

தென்மராட்சி ஜூலை 17

மிருசுவில் புதைகுழி படுகொலைகள் தொடர்பான பூர்வாங்கவழக்கு விசாரணை கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கட்டளையின் பிரகாரம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்திலிருந்து அநுராதபுரம் நீதிவான்; நீதிமன்றத்திற்கு மாற்றப்படவுள்ளதாகவும்—

அது தொடர்பிலான நடவடிக்கை குறித்து நாளை சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றினால் கட்டளைகள் பிறப்பிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாகவும்—நீதித்துறை வட்டாரங்கள் மூலம் அறியப்படுகிறது.

கடந்த டிசம்பர் மாதம் மிருசுவில் பகுதியில் ஐந்து வயதுச் சிறுவன் உட்பட எட்டு அப்பாவிப் பொது மக்களை வெட்டிக் கொலை செய்து புதைகுழிகளில் புதைத்த சம்பவம் தொடர்பாக 14 படையினர் சந்தேக நபர்களாகக் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிரான பூர்வாங்க வழக்கு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் எடுக்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது (உ-117-173)

# கருங்குளவிகள் கொட்டின

தென்மராட்சி, ஜூலை 17

குவித்து வைக்கப்பட்டிருந்த விறகினை எடுத்துக் கொண்டிருந்த வேளையில் அதற்குள்ளிருந்து புறப்பட்ட கருங்குளவிகள் தாக்கிய சம்பவம் நேற்று முன்தினம் பருத்தித்துறை வீ. எம். வீதியில் இடம்பெற்றது.

இந்தப் பகுதியைச் சேர்ந்த கந்தவனம் சூரியமாலா (வயது 46) என்பவர் முகம், தலை ஆகிய பகுதிகளில் கருங்குளவிகள் தாக்கிய நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-117)

# மூதூரில் சுட்டுக்கொலை

மூதூர், ஜூலை 17

இராணுவப் புலனாய்வுப் பிரிவில் முன்னர் பணியாற்றியதாகக் கூறப்படும் இளம் குடும்பஸ்தர் ஒருவர் மூதூரில் இனம்தெரியாதவர்களால் நேற்றுப் பிற்பகல் 4.30 மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மூதூர் 64 ஆம் கட்டை அருகில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் நெய்தல் நகரைச் சேர்ந்த முகமது ரஜா (வயது 21) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டார். இறந்தவர் ஒரு குழந்தைக்குத் தந்தை எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-ஓ)

# உயர் இரத்த அழுத்தத்துக்கு சித்தத்தில் சிறந்த சிகிச்சை

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' இது பொய்யாமொழியானால் இன்று நோயற்ற வாழ்வை மேற்கொள்ள முடியாமல் இயற்கையே சதிசெய்கிறது.

இன்றைய சூழ்நிலையில் மாசு படர்ந்த மேகம் - தூசு நிறைந்த வானம் - நன்னீர் கிடைக்க முடியாத நீர் நிலை - நிறை உணவு பெற முடியாத சூழ்நிலை - மன அமைதியுடன் வாழமுடியாத வாழ்க்கை அமைப்பு போன்ற காரணங்களால் நோயற்ற வாழ்வு வாழும் குறைவற்ற செல்வத்தை குறிப்பாக வடபுலத்து மக்களால் அடைய முடியவில்லை இந்நிலை என்றுள்ளது. இது எமக்கு ஏற்பட்ட சாபக்கேடாகவும் கருதலாம் அல்லவா?

இன்று குறிப்பாக வடபுலத்தில் இன்னல்கள், இடர்கள் மத்தியில் வசிக்கும் மக்கள் பல்குழல் தாக்குதல், விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல் போன்றவற்றால் தாக்குதல்கள் நேரிடும் போது தாங்கமுடியாத மக்கள் இருதய பலவீனம் - மனஅதிர்ச்சி என்பவனவற்றால் பாதிக்கப்படுகிறார்கள்.

உயர் இரத்த அழுத்தம் சகல நாட்டு மக்களையும் இப்போது பாதிக்கும் நோயாக இருந்த போதிலும் யாழ்.குடாநாட்டை பொறுத்த அளவில் முன்னைய காலங்களிலும் பார்க்க இப்போது கூடுதலாக காணப்படுகின்றது. முன்னர் பணக்காரர்களுக்கு உரித்தானது எனக் கூறப்பட்ட இரத்த அழுத்த நோய் (H.B.P) இன்று ஏழைகளையும் பிடித்துத் தன்னாட்சி கொண்டுள்ளது.

### இவ்வியாதிக்கான காரணங்கள்

1. ஒருவரது வயதுக்கும் உயரத்துக்கும் ஏற்ப நிறை அல்லாது அதிகம் கூடிய நிறை உடையவர்கள்.

2. தாய் - தகப்பனுக்கு பரம்பரையாக இந்த நோய் ஏற்பட்டால் பிள்ளைகளுக்கும் பீடிக்க சந்தர்ப்பம் உண்டு.

3. உட்கொள்ளும் உணவில் உப்பின் அளவைக் கூடுதலாகப் பாவிப்பவர்கள்.

4. குடிவகைகளை அதிகமாகவும் அடிக்கடியும் பாவிப்பவர்கள்.

5. அதிக யோசனை - அதிக கவலை - அதிக கோபம் உள்ளவர்கள்.

6. ஹோர்மோன்களால் ஏற்படும் (Hormone Factors) பிரச்சினை, சுரப்பிகளின் பிறப்புக் குறைபாடுகள் - கட்டிகள் வளர்தல் போன்றன.

இவற்றை விட -

இளமைப் பருவத்தைத் தாண்டியவர்களுக்கு சிறுநீரகத்தில் ஏற்படும் பிரச்சினைகள் :-

I) சிறுநீரகத்தில் கற்கள் உருவாகுதல் (Kidney Stones)

II) உடம்பில் ஏற்படும் மாறமுடியாத அவியல்கள் புண்களினால் சிறுநீரகத்தில் பாதிப்பு ஏற்படுதல்.

III) சிறுநீரகங்களில் உள்ள பிறப்புக் குறைபாடுகள்.

IV) சிறுநீரகத்துக்கு இரத்தம் வழங்கும் குழாய்களில் (Renal Artery Stenosis) சுருக்கு ஏற்படுதல்.

7. இதயத்திலிருந்து உடம்புக்கு இரத்தம் விநியோகம் செய்யும் பெரிய இரத்தக் குழாயில் சுருக்கம் (Coarctaion of Aorta)

**சுகநலம்**

8. சில மருந்துகள் ஒவ்வாமை ஏற்பட்டு இரத்த அழுத்தத்தை தோற்றுவிக்க இடமுண்டு. உதாரணமாக பிரிட்டிசிலோன், லிக்குயோரைஸ் போன்றவையும் கருத்தடை மாத்திரைகளும்.

### இந்நோயின் அறிகுறிகள்

1. சாதாரண தலைவலியில் இருந்து கடுமையான தலைவலியால் கஷ்ரப்படுதல்.

2. நெஞ்சுநோவு, நெஞ்சுவலி ஏற்படல், நெஞ்சு படபடத்தல் போன்றன.

3. கடுமையாக வியர்த்தல்.

4. தலைச்சுற்று, மயக்கம் ஏற்படுதல்.

5. திடீரெனப் பார்வை இழத்தல்.

இத்தகைய அறிகுறிகள் காணப்பட்டால் அருகில் உள்ள வைத்தியசாலைக்குச் சென்று இரத்த அழுத்தம், இரத்தம், சிறுநீர், இதயத்துடிப்பு என்பனவற்றை பரிசீலித்துக் கொள்ள வேண்டும். கறிமுருங்கை இலை அல்லது இயங்கு இலையுடன் சேர்த்து வறுத்த உப்பை பாவித்தல், அதிக உணவை உட்கொள்ளாது உடல் பருமனை குறைக்கக் கூடியதாக கொழுப்புச்சத்து சீனியின் அளவைக் குறைத்து சாப்பிடுதல்.

அடிக்கடி உணவை உட்கொள்ளாது குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் உண்ணுதல் போன்றன உயர் அழுத்தத்தை குறைக்க உதவியாக இருக்கும்.

உடற் பயிற்சி, போதிய நித்திரையும் மனஆறுதலும் மன மகிழ்ச்சியும் உகந்தவையாகும்.

சிறுநீரக சம்பந்தமான நோயாளர்களும் குறிப்பாக நீரிழிவு நோயாளர்கள் அடிக்கடி இரத்த அழுத்த பரிசோதனை செய்வது நல்லது.

உயிர் கொல்லி நோயாக ஒரு காலம் கருதப்பட்ட இந்த உயர் இரத்த அழுத்த நோய் இன்று மாற்றப்படக்கூடிய நோயாக உள்ளதை காணக்கூடியதாக உள்ளது.

கல்வி அறிவு குறிப்பாக நோய்கள் பற்றிய அறிவு இக்கால மக்களிடையே காணப்படுவதால் அவர்கள் தாமாகவே சிகிச்சையை ஆரம்பிப்பதாலேயே இந்நோயில் இருந்து காப்பாற்றப்பட்டு வருவது கண்கூடு.

உயர் இரத்த அழுத்த நோய்க்கு சித்த வைத்தியமுறையில் செய்யக் கூடிய சிகிச்சை முறைகள் சிலவற்றை கீழே குறிப்பிட விரும்புகிறேன்.

1. *அசைச் சூர்ணம் (சீரகம்):-*

Hypertension நோய்க்கு நாற்பது நாள்கள் தினம் இருவேளை 1 தொடக்கம் 2 கிராம் அளவில் வெந்நீரில் பாவித்து வர பலன் கிடைக்கும்.

2. *சின்னச் சிகப்பு மாத்திரை:-*

நெற்சடை வாயு என்பதை - (Angina Pectoris) என்ற வேதனைக்கு ஒப்பிடலாம். இவ்வாயுவால் உண்டாகும் வேதனையும் நெஞ்சுப்படபடப்பு Palpitation - என்பனவும் தீருவதற்கு சின்னச் சிகப்பு மாத்திரையில் 1 தொடக்கம் 2 மாத்திரையினை தினமும் இரண்டு அல்லது மூன்று வேளை வெற்றிலைச் சாற்றில் உரைத்துப் பாவிக்க வேதனை தீரும். அவசியம் ஏற்படும் போது வெற்றிலை அல்லது துளசி இலையில் 01 குளியை வைத்து சப்பி வெந்நீர் குடிக்க வேதனை தீரும்.

**டாக்டர் இரா. கனகலிங்கம்**
வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபை, கரவெட்டி.

3. *வெள்ளை வெங்காய குளிகை:-*

குருதி அழுக்க நோயாளிகள் (Hypertension) இதனை உபயோகித்தலினால் குருதியில் உள்ள கொழுப்புத் தன்மையை குறைக்கவல்லது.

இக்குளிகையை வெந்நீர் அல்லது உள்ளி அவித்த நீர் அல்லது தேன் அல்லது வசதிக்கு ஏற்ற அநுபானத்தில் தினம் 2 அல்லது 3 வேளை 1 தொடக்கம் 4 மாத்திரைகள் தேவைக்கு ஏற்ப பாவிக்கவேண்டும்.

4. *சுக்கு தைலம்:-*

குருதி அழுக்க நோயாளிகள் இதனை சிரசில் வைத்து முழுகி வர உறக்கமும் பித்த சாந்தியும் உண்டாகும்.

5. *மான் கொம்பு பஸ்பம்:-*

மார்பு வலிக்கு (Angina Pectoris) சிறந்த ஒரு மருந்தாகும்.

இம் மருந்து 200 தொடக்கம் 400 மில்லிகிராம் அளவில் எடுத்து உணவுக்கு பின் தினம் இரு வேளை வெண்ணெய் அல்லது தேன் அல்லது ஏற்ற அநுபானத்தில் பாவிக்கலாம்.

மேற்குறிப்பிட்ட மருந்துக்களின் செய்முறை போன்ற விவரங்களை அகில இலங்கை அரச சேவை சித்த ஆயுர்வேத வைத்திய அதிகாரிகள் சங்க வெளியீட்டாளரான டாக்டர் பொன்.இராமநாதன், M.D.(S) விரிவுரையாளர் - யாழ். பல்கலைக்கழகம் அவர்களால் ஆக்கிய சித்த மருத்துவ முறையியல் (Siddha Pharmacopoeia) நூலில் காணக்கூடியதாக உள்ளது. இந்த வெளியீட்டில் மருந்துகளின் செய்முறை அனுபானம், பத்தியம் போன்ற விவரங்களைக் காணக்கூடியதாக உள்ளது.

# ஆங்கிலதினப் போட்டிகள்

யாழ்ப்பாணம். ஜூலை17

யாழ்ப்பாணம், நல்லூர் கல்விக் கோட்டங்களில் பாடசாலைகளுக்கிடையிலான ஆங்கில தினப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

யாழ். கல்விக் கோட்டத்தின் ஆங்கில மொழித்தின குழுப் போட்டிகள் நாளையும் மறுநாள் வியாழக்கிழமையும் 21ஆம் திகதி சனிக்கிழமையும் நடைபெறவுள்ளன.

மேற்பிரிவுக்கான கவிதை நாடகப்போட்டி நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு சுண்டுக்குழி மகளிர் கல்லூரியிலும் -

கீழ்ப்பிரிவுக்கான உரைநாடகப் போட்டி நாளை காலை 9.30 மணிக்கு திருக்குடும்பக் கன்னியர்மடம் பாடசாலையிலும்-நடைபெறவுள்ளன.

மேற்பிரிவுக்கான உரைநாடகம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு சென் ஜோன்ஸ் கல்லூரியிலும்-

குழுப் பாடல் ஆரம்பப் பிரிவுக்கான போட்டி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சென்.ஜோன்ஸ் கல்லூரியிலும்-

கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட பிரிவுகளுக்கான போட்டி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சுண்டுக்குழி மகளிர் கல்லூரியிலும்-

நடைபெறும் என்று யாழ். கல்வி வலய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### நல்லூர் கோட்டம்

நல்லூர் கோட்ட பாடசாலைகளிடையேயான - ஆங்கிலதின நாடக, பாடல் போட்டிகள் எதிர்வரும் 19 மற்றும் 22ஆம் திகதிகளில் இடம்பெற உள்ளன.

1 - 5 தரங்களுக்கான நாடகப் போட்டிகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரியிலும் -

6 - 13 தரங்களுக்கான நாடகப் போட்டிகள் அதேதினத்தில் காலை 9.00 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியிலும் -

ஆங்கில பாடல் போட்டிகள் எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் -

நடைபெறுமென்று நல்லூர் கோட்டக் கல்விப்பணிப்பாளர் திருமதி ச.காங்கேயன் தெரிவித்துள்ளார்.

(ம-ஓ-10)

### மீட்கப்பட்ட சைக்கிள்கள் பொலீஸ் நிலையத்தில்

யாழ்ப்பாணம்,ஜூலை17

குடாநாட்டில் பல்வேறு இடங்களில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்களில் மீட்கப்பட்ட 20க்கும் மேற்பட்ட சைக்கிள்கள் யாழ்.பொலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன.

திருடர்களால் கைவிடப்பட்ட மற்றும் களவாடப்பட்ட சைக்கிள்களே பொலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சைக்கிள்களுக்கு உரியவர்கள் யாழ்.பொலீஸ் நிலையத்துக்கு வந்து ஆதாரம்காட்டி அவற்றை பெறமுடியும் என பொலீஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(ம-4)

### ஊர்காவற்றுறையில் சுற்றிவளைப்பு

ஊர்காவற்றுறை,ஜூலை17

ஊர்காவற்றுறை காம் வீதி, பருத்தியடைப்பு உள்ளிட்ட பகுதிகள் நேற்றுக் காலை 10 மணியளவில் கடற்படையினரால் திடீரெனச் சுற்றிவளைக்கப்பட்டு சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது வீட்டில் உள்ளோரின் அடையாள அட்டைகள் பரிசீலிக்கப்பட்டதுடன் வீடுகளும் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

வீதியால் சென்றவர்கள் தடுத்து வைக்கப்பட்டு அடையாள அட்டைகள சோதிக்கப்பட்ட பின்னர் தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

(ம-16)

# சமூக ஒற்றுமையைப் பேணுவதில் இலங்கை வானொலிக்குத் தனி இடம்

## மெல்லிசை, நாடக விழாவில் உரை

இந்த நாட்டில் வாழும் அனைத்து சமூகங்களிடையிலும் ஒற்றுமையை ஏற்படுத்துவதில் இலங்கை வானொலி முன்னிலை வகிக்கிறது. வரலாற்றுச் சிறப்புமிக்க இப்பணியினால் நாட்டில் விரைவில் சமாதானம் மலரும் என்பது எனது நம்பிக்கை.

வெள்ளவத்தை இராமகிருஷ்ணன மண்டபத்தில் நடைபெற்ற மெல்லிசை, நாடக விழாவின் முதல் நாள் நிகழ்ச்சியில் உரையாற்றிய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சின் செயலாளரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவருமான ஜனதாச பீரிஸ் இவ்வாறு தெரிவித்தார்.

பேராசிரியர் கா.சிவத்தம்பி தலைமையில் கடந்த 14ஆம், 15ஆம் திகதிகளில் இவ்விழா நடைபெற்றது. முதல் நாள் நிகழ வில் 'சிறுவர் பாடல்கள்' ஒலிநாடாவை வெளியிட்டுப் பேசிய செயலாளர் ஜனதாச பீரிஸ் மேலும் கூறியதாவது:-

இசை உலக மொழி. இதற்கு சாதி, மத, மொழி, இனபேதம் கிடையாது. எமது வானொலி காலனித்துவ காலத்தில் இருந்து நீண்ட பாதையைக் கண்டிருக்கிறது. உலகம் சுருங்கிவிட்ட நிலையில் சமுதாய முன்னேற்றத்தில் இருந்தும் எமது கடமையில் இருந்தும் விலகிக் கொள்ள முடியாது. இசைத்துறையில் புதியவற்றைப் புகுத்தவும், கற்றுக்கொள்ளவும் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். மெல்லிசை என்ற புதிய நிகழ்ச்சியை எமது வானொலி 1970 இல் உருவாக்கியது. புகழ்மிக்க பாடல்களைத் தமிழ்கூறும் நல்லுலகிற்குத் தந்துவரும் இலங்கை வானொலியின் சாதனைகளை உலகிற்கு எடுத்துக்காட்ட வேண்டும் - என்றார்.

இரு நாள் கருத்தரங்கிலும் தொடக்கவுரையாற்றிய பேராசிரியர் கா.சிவத்தம்பி கூறியதாவது:-

மெல்லிசை ஒரு காலகட்டத்தில் தமிழகத்தில் லகு சங்கீதம் என்ற சொற்தொடரால் குறிக்கப்பட்டு வந்தது. அதன் தனிச் சொற்பதமாக இருக்கட்டும் என்று மெல்லிசையாக வந்தது என்றும் கூறவேண்டும்.

நாடகத்துறையைப் பொறுத்த வரையிலும் இலங்கை வானொலியின் பங்களிப்பு முக்கியத்துவம் மிக்கது. யாழ்ப்பாணத் தமிழர்களின் வாழ்வை சித்திரிக்கும் நாடகங்களைத தயாரித்தளித்தும், மெல்லிசையின் வளர்ச்சியிலும் ஈடுபாடுகொண்டும் இலங்கை வானொலி இந்தத துறைகளுக்கு புத்துயிரளித்துள்ளது - என்றார்.

இரண்டாம் நாள் இடம்பெற்ற நாடக விழாவில் தேசிய கல்வியமைச்சின் மேலதிகச் செயலாளர் எஸ்.தில்லைநடராசா கூறியதாவது:-

இன்று உலகம் பூராகவும் உள்ள தமிழ் வானொலி நிகழ்வுகளில் பங்களிக்கும் கலைஞர்கள் மட்டுமன்றி அதிகாரிகளும் கூட இலங்கை வானொலிகளில் பணியாற்றியவர்களே. கடந்த இரு தினங்களிலும் தமிழ் வளர்ச்சிக்கும் கலைத்துறைக்கும் அது ஆற்றிய பங்களிப்பை அறிஞர்கள், கலைஞர்கள் எல்லோருமே விரிவாக எடுத்துக் கூறியுள்ளனர். எமது வானொலி மூலம் வெளியான அனைத்து நிகழ்வுகளும் பேணப்பட வேண்டும். எதிர்கால சந்ததி எமது தமிழ்ச் சேவை ஆற்றிய பணிகளைத் தெரிந்துகொள்ளக் கூடியதாக அவை ஆவணப்படுத்தப்பட வேண்டும் - என்றார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனப் பணிப்பாளர் கருணரத்தின பரணவிதான , தினகரன் ஆசிரியர் ஸ்ரீகாந்தா உட்பட கலைஞர்கள் பலரும் உரையாற்றினர்.

தனிப்பாடல், தனிநடிப்புப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (ஐ-111)


**யாழ். நகர மக்களுக்கு!**
**குடிதண்ணீர் வீண் விரயத்தினைத் தவிர்ப்போம்**

யாழ். மாநகரசபையின் குடிதண்ணீர் விநியோக சேவை ஜீ.ரி.இசற் நிறுவனத்தின் உதவியுடன், 1997ஆம் ஆண்டு புனர் நிர்மாணம் செய்யப்பட்டு, நாவாந்துறை, குருநகர், பாசையூர், கொழும்புத்துறை மற்றும் சில பகுதிகளுக்கும் குடிதண்ணீர் வழங்கப்படுகின்றது.

திருநெல்வேலி, கோண்டாவில் ஆகிய நீர்நிலைகளிலிருந்து நீர் பெற்று மக்களுக்குக் குடிதண்ணீர் விநியோகம் செய்வதில் மாநகரசபைக்கு பாரிய செலவினங்கள் ஏற்படுகின்றன. அத்துடன் வரட்சிக்காலத்தில் நீர் நிலைகள் வற்றிப்போவதனால் நன்னீர் உவர்த்தன்மையடைவதுடன், குடிதண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படும் அபாயமும் உண்டு.

எனவே, மாநகரசபையால் அதிக முதலீடு செய்து வழங்கப்படும் குடிதண்ணீரைத் தயவுசெய்து ஏனைய தேவைகளுக்குப் பயன்படுத்தாது, குடிதண்ணீரின் அருமைத்தன்மையினைப் பாதுகாக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இ.இராமலிங்கம்,
*மாநகர ஆணையாளர்,*
*யாழ்ப்பாணம்.*

(C/17458)



**கண்ணீர் அஞ்சலி**

எங்கள் பாடசாலையில் கடமையாற்றும் நல்லாசிரியை
**திருமதி உமையாள் மணிவண்ணன்**
அவர்களின் பாசமிகு தாயார்
**திருமதி ஐயாத்துரை புவனேஸ்வரி**

அவர்கள் 15.07.2001 அன்று காலமானதையிட்டு அவரது பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
*யா/சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம்.*

(90165)

# ஜனாதிபதிக்கு எதிராக 2 வாரங்களுக்குள் குற்ற விசாரணைப் பிரேரணை சமர்ப்பிப்பு

## பத்திரிகையாளர் மாநாட்டில் நேற்று ரணில் அறிவிப்பு

கொழும்பு,ஜூலை17

ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எதிராகக் குற்றவிசாரணைப் பிரேரணை ஒன்று கொண்டுவரப்படவுள்ளது. இதனை இன்னும் இரு வாரங்களுக்குள் கொண்டுவருவதென எதிர்க்கட்சிகள் முடிவு செய்துள்ளன. இது தொடர்பான சட்டவியல் சார்ந்த விடயங்களை ஆராய்ந்து பிரேரணையைத் தயாரிக்கும் பணியை சட்ட நிபுணர்கள் குழுவிடம் ஒப்படைத்திருக்கின்றோம். அது தயாரானதும் சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்படும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"ஜனாதிபதி இப்போது முற்றும் முழுதும் முற்றுகையிடப்பட்டவராக ஆக்கப்பட்டிருக்கின்றார். நிறைவேற்று ஜனாதிபதிக்குரிய அதிகாரங்களைப் பிரயோகித்து அவர் தப்பித்துக்கொள்ள முயன்றால் எம்மிடம் ஒரு கடைசி ஆயுதம் இருக்கிறது. அதுதான் வரவு செலவுத் திட்டம். இதில் அவர் தோல்வி அடைவார்" -

என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் கூட்டத்தில் கலந்து கொள்ள விடாமல் தடுக்க எடுக்கப்பட்ட முயற்சி சட்டவிரோதமானது. நடாளுமன்ற உறுப்பினர்களும் அவர்களது கட்சித்தலைவர்களும் நாடாளுமன்றத்துக்குச் செல்வதைப் பொலீஸார் தடை செய்ய முடியாது. ஆனால் பொலீஸார் எல்லாத் தடைகளையும் நாடாளுமன்றத்தில் பிரயோகித்தனர்.

ஜனாதிபதி உத்தரவுப்படியே தாங்கள் செயற்படுவதாக அங்கிருந்த பொலீஸார் தெரிவித்துள்ளனர். ஜனாதிபதி தொடர்ந்தும் சர்வாதிகாரப் போக்கிலேயே நடந்து கொள்கிறார். ஜனாதிபதியின் செயற்பாடுகள் குறித்து எதிர்க்கட்சிகளின் தலைவர்களுடன் பேசி வருகிறோம். இன்னும் சில நாள்களில் முக்கிய முடிவுகளையும் எடுக்கவுள்ளோம்.

எதிர்க்கட்சிகளின் பலம், அரச தரப்பினை விட அதிகமாகவே இருக்கின்றது. அது குறையவில்லை. ஜே.வி.பியினர் கூட்டங்களுக்கு வருவதில்லை என்றாலும் அரசாங்கத்துக்கு எதிராக இன்னும் 115 கையொப்பங்கள் இருக்கின்றன. எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து செயற்படமுடியாது என்று ஜே.வி.பி. சொல்லவில்லை.

எனக்குத் தெரிந்தவரை பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளில் இருந்து ரவூப் ஹக்கீம் குழுவினரை அந்த முன்னணியின் செயலாளர் நாயகமான டி.எம்.ஜெயரத்னவினால் நீக்கமுடியாது. எனவே எமக்குப் பெரும்பான்மை குறைவு ஏற்பட இடமில்லை.



"நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டு" என்ற கோஷத்துடன் பெரிய ஆர்ப்பாட்டத்தை 19ஆம் திகதி நடத்தவுள்ளோம். இதில் சகல எதிர்க்கட்சிகளும் இணைந்து செயற்படுகின்றன. ஜனநாயகத்தைப் பாதுகாக்க விரும்பும் சகல தரப்பினரையும் இதில் கலந்துகொள்ள வருமாறு அழைக்கிறேன்.

நாடாளுமன்ற உறுப்பினர்களை நாடாளுமன்றத்துக்குச் செல்லவிடாமல் தடுத்த பொலீஸ் அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இதுபற்றி பொலீஸ் மா அதிபருக்கு முறைப்பாடு செய்யவுள்ளோம்.

அரசமைப்பின் 63ஆம் சரத்தின்படி "அரசமைப்பை போற்றிப் பாதுகாப்பேன்" என்றே நாடாளுமன்ற உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் செய்துள்ளனர். சகல அரசியல் கட்சிகளினதும் வாக்குப் பலம் நாடாளுமன்றத்திலேயே பிரதிபலிக்கப்படுகிறது. எனவே இது குறித்து ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் சிந்திக்கவேண்டும். அரசமைப்புத் தந்த அதிகாரங்களைக் கொண்டே அரசியல் அமைப்புச் சரத்துக்களை ஜனாதிபதி மீறிச் செயற்படுகிறார். இதனால் அத்தகைய செயற்பாடுகளுக்கு எதிராகச் சகல நடவடிக்கைகளையும் எடுக்க எதிர்க்கட்சிகள் இணைந்து செயற்படுகின்றன - என்றார். (உ-4-6)

# அடையாளம் காட்டிய இளைஞன் ஈ.பி.டி.பியினரின் பாதுகாப்பில்!

யாழ்ப்பாணம்,ஜூலை17

மீசாலை அல்லாரைப் பகுதியில் பெண் ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவத்தில் தொடர்புடைய இராணுவத்தினரை அடையாளம் காட்டிய - அல்லாரையைச் சேர்ந்த - கணேசபிள்ளை சுதன் என்பவர் பாதுகாப்புக் கருதி கைதடி ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளார் என்று ஈ.பி.டி.பி. செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே மிருசுவில் படுகொலைகளை அம்பலத்துக்குக் கொண்டு வந்த இளைஞர் ஈ.பி.டி.பியினரால் பாதுகாக்கப்பட்டு வருகின்றார் என்றும் -

இத்தகைய அசம்பாவிதங்கள் நிகழ்வதைத் தடுக்கவும், தவிர்க்கவும் வகை செய்யும் விதத்தில் விழிப்புக் குழுக்களை உருவாக்க ஈ.பி.டி.பியினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என்றும் -

அந்தச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# தண்ணீரைச் சிக்கனமாக பயன்படுத்த அறிவுறுத்து!

## மாநகரசபை வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஜூலை17

குடிதண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு யாழ். மாநகர சபை பொதுமக்களுக்கு அவசர கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக மாநகரசபை அறிக்கை ஒன்றையும் விடுத்துள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். மாநகர சபையின் குடிதண்ணீர் விநியோக சேவை 1997ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்டது. திருநெல்வேலி, கோண்டாவில் பகுதிகளில் இருந்து குடிதண்ணீர் பெறப்பட்டு யாழ். நகரின் நாவாந்துறை, குருநகர், பாஷையூர், கொழும்புத்துறை மற்றும் சில பகுதிகளுக்குத் தற்போது குடிதண்ணீர் வழங்கப்படுகின்றது. இதனால் மாநகர சபைக்கு பெரும் செலவீனங்கள் ஏற்படுகின்றன.

வரட்சிக் காலங்களில் நீர் நிலைகள் வற்றிப் போவதனால் நன்னீர் உவர்த்தன்மையடைவதுடன் குடிதண்ணீர்த் தட்டுப்பாடும் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

எனவே பொதுமக்கள் குடிதண்ணீரை ஏனைய தேவைகளுக்குப் பயன்படுத்தாது சிக்கனமாகப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (ம)

# மட்டக்களப்பில் பாதை மூடப்பட்டது

மட்டக்களப்பு நகரிலிருந்து வலையிறவு ஊடாக செல்லும் பாதையை விடுதலைப்புலிகள் மூடியுள்ளதால் நேற்று திங்கட்கிழமை வவுணதீவு பிரதேச செயலகம், பிரதேச சபை அலுவலகங்கள் இயங்கவில்லை.

படுவான்கரைப் பகுதியில் கடமையாற்றும் நூற்றுக்கணக்கான ஆசிரியர்களும் நேற்று பாடசாலைகளுக்குச் செல்லவில்லை. இதனால் படுவான்கரையில் உள்ள பெரும்பாலான பாடசாலைகள் இயங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. படுவான்கரைப் பகுதியிலிருந்து பொதுமக்கள் மட்டக்களப்பு நகருக்கு வராததால் உள்ளூர் மரக்கறிகளும் சந்தைக்கு வரவில்லை. நகரில் உள்ள வர்த்தகர்களும் தமது வியாபாரம் மந்த கதியடைந்துள்ளதாகத் தெரிவித்தனர்.

படுவான்கரைப் பகுதி மக்கள் செங்கலடி, அம்பிலாந்துறை, பட்டிருப்பு ஊடாகவே எழுவான்கரைப் பகுதிக்கு வந்தனர். (உ)

# கிரான் அருகே மோதல்! சிப்பாய் மரணம்!!

கொழும்பு,ஜூலை17

மட்டக்களப்பு, கிரான் பகுதியை அடுத்துள்ள குறுங்கையடியில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நேற்றுமுன்தினம் காலை 7.30 மணியளவில் இடம்பெற்ற மோதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதுடன், மோதலின் நடுவில் சிக்கிய பொதுமகன் ஒருவர் காயமடைந்து வாழைச்சேனை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் -

விசேட ஊடகத்தகவல் நிலையம் நேற்று வெளியிட்ட களநிலைவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-ஒ)

# குடிசன மதிப்பீட்டுப் பணி இன்று; ஆனால் குடாநாட்டில் இல்லை!

## தமிழ்ப்பகுதி எங்கும் அதே நிலைமை

யாழ்ப்பாணம்,ஜூலை17

நாடு முழுவதும் இன்று குடிசன மதிப்பீடு தொடர்பான இறுதிக்கட்ட கணக்கெடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எனினும் இது தொடர்பான ஆயத்தப்பணிகள் எதுவும் செய்யப்படாததால் இந்த நடவடிக்கைகள் குடாநாட்டில் மேற்கொள்ளப்படமாட்டா என்று கருதப்படுகிறது.

குடாநாடு உட்பட வடக்கு - கிழக்கில் பெரும்பாலான பிரதேசங்களில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படமாட்டாது என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

குடிசன மதிப்பீட்டு நடவடிக்கைகளை யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ள வேண்டாம் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினரால் கடந்த மாதம் யாழ்.செயலகத்துக்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனை அடுத்து மதிப்பீடு தொடர்பான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதுடனேயே இடை நிறுத்தப்பட்டன என்பது தெரிந்ததே. (உ-10)

# மரண அறிவித்தல்கள்

## சுவாமிநாதன் சிவகணநாதன்

(திருகோணமலை கோணேஸ்வர இந்துக்கல்லூரி உப அதிபர்)

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சுவாமிநாதன் சிவகணநாதன் அவர்கள் (14.07.2001) சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் திருமதி அபரஞ்சி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சுவாமிநாதன் - மனோன்மணி தம்பதிகளின் அன்பான ஒரே மகனும், கைலாயபிள்ளை (ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர்) - தங்கரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும், கயப்பிரியா, திவாகரி ஆகியோரின் அன்புத் தந்தையும், அன்பரசி (ஜேர்மனி), அழகிரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், நவரத்தினம் - கனகமணி தம்பதிகளின் பெறாமகனும், சண்முகநாதன், சிறிரமணன் (ஜேர்மனி), அழகிரி நிர்மலா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகலனும் காலஞ்சென்ற இராசரத்தினம் (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்), குமரேசு விசுவலிங்கம், குமாரசாமி, திருமதி பாலசிங்கம், இராசசுந்தரம், குலநாயகம் ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்(16.07.2001) திங்கட்கிழமை திருகோணமலை கல்லூரி வீதியில் நடைபெற்றுப் பூதவுடல் திருகோணமலை இந்துமயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*செட்டி வளவு ஒழுங்கை,*
*இணுவில் மேற்கு,*
*இணுவில்.*

(90168)

தகவல்:
அ.அருள்நாதன்
(மருமகன்)

## கதிரித்தம்பி குமாரசாமி

புலோப்பளையைப் பிறப்பிடமாகவும் உசனை வதிவிடமாகவும் கொண்ட கதிரித்தம்பி குமாரசாமி(இளைப்பாறிய கிராம சேவையாளர் - உசன்) நேற்று (16-07-2001) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற புவனேஸ்வரியின் (இளைப்பாறிய ஆசிரியர்- உசன் இராமநாதன் ம.வி) அன்புக் கணவரும் இராஜேந்திரா(பப்புவா நியூகினி), சோமகலா(ஆசிரியர், மிருசுவில் றோ.க), ரவீந்திரா(ஆசிரியர், மிருசுவில் அ.த.க.பா., வட்டு.இந்துக் கல்லூரி), கிருஷ்ணகலா(அவுஸ்திரேலியா), புவனேந்திரா(விவசாயப் போதனாசிரியர்- மன்னார்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், ரவிச்சந்திரிகா (கொழும்பு), ஸ்ரீதரன், முத்துக்குமாரி, மோகனராசா(அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஹரிகாந், துசாநந், சங்கவி, ஜெயகணன், யோகினி, யதுசன், ஆகியோரின் பாசமிகு தாத்தாவும், வன்னியசிங்கம், காலஞ்சென்ற பாலசிங்கம், திருமதி பரமேஸ்வரி - மணிவண்ணன் (விவசாயப் போதனாசிரியர் - கீரிமலை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

நிரந்தர முகவரி:-
*"திருப்பதி"*
*உசன், மிருசுவில்.*

தற்காலிக முகவரி:-
*சிவன் கோயில் வீதி,*
*சித்தங்கேணி.*

தகவல்:
கு.ரவீந்திரா (மகன்)
சு.ஸ்ரீதரன் (மருமகன்)

(90173)

## தம்பித்துரை துரைசிங்கம் (பூபாலு)

ஆறுகால்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பித்துரை துரைசிங்கம் நேற்று (16.07.2001) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தம்பித்துரை - துரையம்மா தம்பதிகளின் மகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் துசிந்தனின் (தம்பி) அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.07.2001) செவ்வாய்க்கிழமை 1.00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மயிலூ வீதி,*
*ஆறுகால்மடம்.*

(90175)

தகவல்:
துசிந்தன் (தம்பி)
(மகன்)

சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு
மாகாண மட்டத்தில் பெருமை சேர்த்த மாணவர்களைப்
பாராட்டி வாழ்த்துகின்றோம்
அண்மையில் நடைபெற்ற வடக்கு - கிழக்கு மாகாண மெய்வல்லுநர் போட்டி, தமிழ்த்திறன் போட்டி ஆகியவற்றில் பங்கு பற்றிய
செல்வி க.சுவர்ணா
21 வயது, 100 மீற்றர் - முதலாம் இடம்
செல்வி க.ஜானகி
17வயது, தட்டெறிதல் - 3ஆம் இடம்
செல்வி சோ.கோமதி
19 வயது, குண்டெறிதல் - 4ஆம் இடம்
செல்வன் து.கேசவன்
பிரிவு 4, இசை தனி - முதலாம் இடம்
பெற்று தேசிய மட்டப் போட்டிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டு, பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். இவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கும் எமது பாராட்டுக்களும் நன்றிகளும் உரித்தாகுக.
*பாடசாலை அபிவிருத்திச் சபை,*
*பழைய மாணவர் சங்கம்,*
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
(90172)

நாகம்ஸ் சுன்னாகம்
சரத்குமார், மீனா
சுவலட்சுமி, வடிவேல்
நடித்த
இனிய பாடல்கள் நிறைந்த
மாயி (ரீல்ஸ்)
காட்சிகள்:- 11.00, 2.30
(90162) (புதிய நேரம்)

ராஜா யாழ்ப்பாணம்
அநேகரின் வேண்டுகோளுக்கு
இணங்க
9 வேடங்களில் நடித்த
அஜித்,
வசுந்தராதாஸ், நக்மா, மீனா
மற்றும் பலர் நடிப்பில்
CITIZEN சிட்டிசன்
தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு :- 10.30, 2.00, 5.00(பு.நே.)

# பொலீஸ் தடைகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை சுமார் 7மணியளவில் ஐ.தே.கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க, ஐ.தே.கட்சியின் துணைத் தலைவர் கரு ஜயசூரிய உட்பட பத்துப் பன்னிரண்டு எம்.பிக்கள் முதலில் அங்கு வந்திறங்கினர்.

நாடாளுமன்றப் பகுதி மூடப்பட்டுள்ளதால் உள்ளே செல்ல அனுமதிக்க முடியாது என்று காவலில் இருந்த பொலீஸார் அவர்களுக்குத் தெரிவித்தனர். அதனால் சீற்றமடைந்த ரணில் விக்கிரமசிங்கவும் அவரது குழுவினரும் பொலீஸாருடன் பெரும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

"எங்களைத் தடுக்க நீங்கள் யார்? நாடாளுமன்றத்தின் தலைவரான சபாநாயகரைத் தவிர வேறு யாரும் இது விடயத்தில் எங்களுக்கு உத்தரவிடமுடியாது" என்று ரணில் குழுவினர் உரத்த குரலில் வாக்குவாதம் செய்தனர்.

இந்தச் சமயத்தில் எதிரணி எம்.பிக்கள் ஒருவர் பின் ஒருவராக அங்கு வந்து சேர்ந்ததை அடுத்து அப்பகுதியில் பெரும் களேபரம் ஏற்படும் அளவுக்கு பதற்ற நிலை உருவானது.

கலவர நிலை ஏற்படும் சூழல் உருவானதை அடுத்து சில எம்.பிக்கள் அங்கிருந்த பொலீஸாரை உதறித் தள்ளி, புறமுதுகிட வைத்துவிட்டு, உள்ளே நுழைந்தனர்.

மற்றும் சில எம்.பிக்கள் போக்குவரத்தை தடுக்கும் விதத்தில் அங்கு நிறுத்தப்பட்டிருந்த பொலீஸ் வாகனங்களுக்குள் ஏறி, சாரதிகளை மிரட்டி வாகனச் சாவிகளை அபகரித்து, பொலீஸ் வாகனங்களையும் பூட்டிவிட்டுச் சாவிகளை எடுத்துச் சென்றனர்.

அப்பகுதியில் களேபரம் கட்டு மீறும் நிலை ஏற்படுவதற்கு முன்னர் இந்த விடயம் சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

அவர் உடனடியாகத் தலையிட்டு, எம்.பிக்களை வழி மறிக்க வேண்டாம் எனச் சம்பந்தப்பட்டோருக்கு உத்தரவு பிறப்பித்தார்.

இதனையடுத்து அங்கு எஞ்சியிருந்த எதிர்க்கட்சி எம்.பிக்கள் 'ஜயவேவா' என்று கோஷமிட்டபடி அங்கு திரண்டிருந்த பத்திரிகையாளர்களையும் கூட்டிக்கொண்டு நாடாளுமன்ற வளாகத்துக்குள் நுழைந்தனர்.

ஐ.தே.கட்சி எம்பிக்களான காமினி அத்துக்கோறளை, ஜோன் அமரதுங்க, ரஜித சேனரத்ன, மகேஸ்வரன் போன்றோர் காலை 8.30 மணி வரை அப்பகுதியில் தங்கி நின்று ஒவ்வொரு எம்.பிக்களாக வரவர அவர்களையும் பத்திரிகையாளர்களையும் உள்ளே பாதுகாப்பாக அனுப்பி வைப்பதில் ஈடுபட்டிருந்தனர்.

அப்படி எம்.பிக்கள் உள்ளே செல்வதை - அதற்கு முன்னர் வழி மறிப்பதில் ஈடுபட்டிருந்த பொலீஸார் - வீதியோரமாக விலகி நின்று பார்த்துக்கொண்டிருந்தனர். நாடாளுமன்றக் கட்டடப் பகுதிக்குள் நுழைந்த எதிரணி எம்.பிக்கள் 'கமிட்டி' அறையில் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூட்டம் ஒன்றை நடத்தினர்.

நாடாளுமன்றக் கட்டடத்துக்குள் நுழையும் தங்களது சிறப்புரிமையை மீறியது குறித்து சர்வதேச நாடாளுமன்றத்தில் முறையிடப்போவதாகத் தெரிவித்த எதிரணி எம்.பிக்கள், இவ்வாறு தடை போடுவதற்கான உத்தரவைப் பிறப்பித்து சர்வாதிகாரி போல செயற்படும் ஜனாதிபதி குமாரதுங்கவை பதவி இறக்குவதற்காக அவருக்கு எதிராகக் குற்ற விசாரணைப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவரப்போவதாகவும் குறிப்பிட்டனர்.

(உ-ஒ-4-6)


எமது இன்றைய புதிய வீடியோ CD வெளியீடு

விஜயகாந்த் நடித்த
❊ நரசிம்மா
சிரஞ்சீவ், சிம்ரன் நடித்த
❊ வேட்டைக்காரன்
பிரதிகளை உடன் பெற்றுக்கொள்ளலாம்
வீடியோ ஆனந்த் ஸ்ரூடியோ
யாழ்.வீதி, மானிப்பாய்.
T.P. 2889
(C/17452)



புதிய வீடியோ CD வெளியீடு

விஜயகாந்த், ரகுவரன்
★ நரசிம்மா
சிரஞ்சீவ், ரம்பா, சிம்ரன்,
★ வேட்டைக்காரன்
விஷ்ணு வீடியோ
கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில்.
(90174)


## யாழ்.செயலக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அல்வாய் மேற்கைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை மங்கேஸ்வரன் (வயது 31) யாழ்.போதனா வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் பனை அபிவிருத்திச் சபை ஊழியராவார்.

கிளைமோர்த் தாக்குதலை அடுத்து சம்பவம் நடந்த பிரதேசத்தைச் சுற்றிவளைத்துப் படையினர் தேடுதல் நடத்தியபோதும் எவரும் கைது செய்யப்பட்டதாகத் தெரியவரவில்லை.

கிளைமோர்த் தாக்குதலை அடுத்து பலாலி வீதி உட்பட இராணுவ வாகனங்களின் போக்குவரத்து அதிகமுள்ள வீதிகளில் இரு புறங்களிலும் உள்ள மரங்கள் மற்றும் செடிகளை அகற்றுமாறு கோரப்பட்டு வருகிறது. (உ-ஒ-4-6-15)

## ஈழத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி கடற்கரைப் பிரதேசத்துக்கு உல்லாசப் பயணம் சென்றனர்.

அவர்களில், இரு போட்டித் தமிழ்க் குழுக்களுக்கிடையிலேயே ஞாயிறு மாலை 7.10 மணியளவில் கைகலப்பு ஏற்பட்டு பெரும் மோதலில் - கத்திக்குத்தில் - முடிந்தது.

முப்பது பேர் வரை மோதலில் ஈடுபட்டனர் எனக் கூறப்படுகின்றது.

### லண்டனிலும் தலையாட்டி

மோதலில் சிறிய காயங்களுக்கு உள்ளான ஒருவரைப் பின்னர் காரில ஏற்றி வந்த பிரிட்டிஷ் பொலீஸார் அவரை நகரின் பல இடங்களுக்கும் கூட்டிச் சென்று - அவரைத் தலையாட்டி போன்று பயன்படுத்தி - ஆள்களின் முன்னிறுத்தி, மோதலில் ஈடுபட்டவர்கள் என அவர் அடையாளம் காட்டிய நபர்களைக் கைது செய்தனர்.

வெம்பிளி பகுதியைச் சேர்ந்த ஒரு குழுவும் டூட்டிங் பகுதியைச் சேர்ந்த மற்றொரு குழுவுமே மோதிக் கொண்டதாகக் கூறப்படுகின்றது.

காயமடைந்தோர் குயின் எலிஸபத், கிங்ஸ்லீன், நோர்விக் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விசாரணை நடத்தும் அதிகாரிகளுக்குத் தமிழ் தெரியாததும், தமிழ மொழிபெயர்ப்பாளர் இல்லாததும் விசாரணைகளுக்குச் சிக்கலாக இருப்பதாக சம்பந்தப்பட்ட பொலீஸ் அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

(உ-ஒ-164)

## சாள்ஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறப்புப் படையணியில் திறமையாகச் செயற்பட்ட போராளிகளுக்கும் தளபதிகளுக்கும் சிறப்புச் சான்றிதழ்களை வழங்கிக் கௌரவித்த தலைவர் பிரபாகரன், படையணிக்குரிய சிறப்புக் கேடயத்தை தளபதி வீரமணியிடம் கையளித்தார்.

பெரும் எண்ணிக்கையான போராளிகளும் தளபதிகளும் கலந்து கொண்ட இந்த நிகழ்வின் இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

(உ-6)

## மணலாறில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று இரவு தெரிவித்தது:-

படையினரிடம் இருந்து ஏ. கே. எல்.எம். ஜி. - 01, ரி-56 துப்பாக்கிகள் - 02 மற்றும் ரவைகள், குண்டுகள், கிளைமோர் குண்டுகள் ஆகியவற்றையும் புலிகள் கைப்பற்றியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(உ-64)

## மேயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாகத் தன் மீது பொய்வழக்கு போடப்படக்கூடும் என்று தான் அஞ்சுவதாகவும் -

தன்னைப் போன்ற சாதாரணமானவர்களைத் துன்புறுத்த வேண்டாமென்று முதல்வர் ஜெயலலிதாவைக் கேட்டுக் கொள்வதாகவும் அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

சென்னை மேயர் மு.க.ஸ்டாலினின் நெருங்கிய நண்பராகக் கருதப்பட்ட ரமேஷ், கடந்த தி.மு.க. ஆட்சிக்காலத்தில் சென்னை மாநகராட்சியின் கட்டட ஒப்பந்தங்கள் பெரும்பாலானவற்றை மேற்கொண்டிருந்தார்.


ஸ்ரீ செல்வா சினிமா
யாழ்ப்பாணம்
விஜயகாந்த், ரகுவரன்
நடித்த
(புதிய வெளியீடு)
தினசரி 10.30, 2.30(ப.நே.)
(C/17459)



எமது புதிய வீடியோ CD வெளியீடு
✪ நரசிம்மா
✪ வேட்டைக்காரன்
பிரதிகளை உடன் பெற்றுக்கொள்ளலாம்.
அல்டி எலக்ரோனிக்ஸ்
13, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(C/17461)


## சர்வஜன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களிடம் கேட்கப்படவிருக்கும் கேள்வி தெளிவற்றதாக இருப்பதனால் அதனை சட்டப்படி சரியானது என்று நிலை நிறுத்துவது சாத்தியமில்லை என்றும் -

மேற்படி கேள்வியின் தெளிவின்மை காரணமாக சர்வஜனவாக்கெடுப்பினால் பெறப்படக்கூடிய பெறுபேறும் கூட சட்டப் பெறுமதியற்றதாகிவிடும் என்றும் - அவர் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

([illegible])


IBMS IBMS IBMS IBMS IBMS

BIT அனுமதி அட்டைகள்

BIT தெரிவுப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெற்றுள்ளன. மாணவர்கள் தமது அனுமதி அட்டைகளை தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

Module Examination
Java

மேற்படி கற்கை அலகுக்கான பரீட்சை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (22.07.2001) 9.00 am - 12.00 pm தலைமைக் காரியாலயத்தில் நடைபெறும்.

Director(Ad).
IBMS No.701 K.K.S Road, Jaffna.



எமது புதிய வீடியோ CD வெளியீடு
★ நரசிம்மா
★ வேட்டைக்காரன்
பிரதிகள் உடன் பெறலாம்
வீடியா விமல்
யாழ்ப்பாணம். (C/17460)


## ஒத்திவைக்கப்பட்டுள்ளது

### யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

இன்று (17-07-2001) செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி, தவிர்க்க முடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

(C/17451) - அதிபர்.


இந்து நாகரிகம் பரீட்சை - 2001

ஆசிரியர் கற்பிக்கும் கல்வி நிலையங்களில் நடைபெறும்.
புதன் (18.07.2001) காலை 8.00 - 11.00 பகுதி I
12.00 - 3.00 பகுதி II

ஆசிரியர் T.ஸ்ரீஸ்

குறிப்பு: வெளிமாணவர்களும் பரீட்சைக்குத் தோற்றலாம்.
(C/30771)



COST TO COST SALES!

SALES

சங்கமம் ரெக்ஸ்

வழங்கும்

மாபெரும் ஆடி மாதச் சிறப்புத் தள்ளுபடி.

10% முதல் 40% வரை விசேட விலைக்கழிவு. இத்தள்ளுபடி 31.07.2001 வரையுமே!

(சகல ரெடிமேட் புடைவை வகைகளுக்கும்)

| ஆண்களுக்கான சேட் வகைகள் | | | பெண்களுக்கான ஸ்கேட் பிளவுஸ் | | |
|---|---|---|---|---|---|
| VAN SON SHIRT | 550/= | 400/= | ERICA FROCK | 950/= | 750/= |
| MANCHESTER SHIRT | 650/= | 500/= | ERICA S/BLOUSE | 1050/= | 850/= |
| CHAROVA SHIRT | 675/= | 550/= | LACE FROCK | 1000/= | 850/= |
| ROYAL MIRAGE | 650/= | 550/= | VELVET SKIRT | 400/= | 300/= |
| CITY SHIRT | 575/= | 450/= | LACE BLOUSE | 600/= | 450/= |
| WELSTER SHIRT | 900/= | 750/= | WHITE BLOUSE | 550/= | 400/= |
| T/சேட் வகைகள் | | | சிறுவர் சிறுமியர்களுக்கான | | |
| ONLY YOU | 450/= | 350/= | சோக்கோ சூட் | 750/= | 600/= |
| TOMMY | 450/= | 350/= | டெனிம் சூட் | 550/= | 400/= |
| FILA | 450/= | 350/= | கோட்டின் FROCK | 500/= | 350/= |

சாறி வகைகள் மற்றும் அனைத்து ரெடிமேட் ஆடைவகைகளுக்கும் நவீன டிசைன் புடைவைகளுக்கும் நாடுங்கள்:

சங்கமம் ரெக்ஸ்

54 A, நவீனசந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம். (C/17457)


## மரண அறிவித்தல்

### கதிரேசு சுப்பிரமணியம்

(சோதிடர் - கோயில் வீதி, நல்லூர்)

நல்லூரைச் சேர்ந்த கதிரேசு சுப்பிரமணியம் (சோதிடர்) நேற்று (16-07-2001) திங்கட்கிழமை பகல் 10.00 மணியளவில் முருகன் திருப்பாதம் சேர்ந்துவிட்டார்.

அன்னார் நாகரெத்தினத்தின் அன்புக் கணவரும், பரமேஸ்வரி (லிங்கம் அன்கோ, ஸ்ரான்லி வீதி), சிவமணி, சண்முகநாதன் (முன்னாள் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர், டென்மார்க்), தனபாலசிங்கம் (நல்லைக் குமரன் - ஸ்ரான்லி வீதி), யோகேஸ்வரி (சோதிடர்), சந்திரபுஸ்பராணி, சிவதர்ஷினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற செ.தர்மலிங்கம், பே.கணேசலிங்கம் (ராஜி ஸ்ரோர்ஸ்- நல்லூர்), செல்வரெட்ணம் (தங்கம் - டென்மார்க்), காலஞ்சென்ற சந்திரவதனா மற்றும் செ.சூரியகுமாரன் (சுபா சென்ரர் - கொக்குவில்), அருள்ராஜா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் லிங்கேஸ்வரி (ஆஸ்திரேலியா), தர்மசீலன் (கைத்தொழில் அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம், நியூசிலாந்து), சண்முகசீலன் (லிங்கம் அன்கோ, ஸ்ரான்லி வீதி), தர்மேஸ்வரி (உதவி அரசாங்க அதிபர் பிரிவு - நல்லூர்), சத்தியசீலன் (திறந்த பல்கலைக்கழகம், கொழும்பு), ஜெயக்குமார் (நொட்டிங்காம் - பல்கலைக்கழகம் பொறியியலாளர் -U.K.), ராஜ்குமார் (லோபுறோ பல்கலைக்கழகம் பொறியியலாளர் - U.K.), சிவாஜினி (யாழ். பல்கலைக்கழகம் நுண்கலைத்துறை), நல்லைக் குமரன் (லண்டன்), இசைவாணி (மருத்துவபீட மாணவி டென்மார்க்), லக்சுமி (மாணவி, டென்மார்க்), சுபநேமி, சுபராமி (மாணவிகள் ஜோன் பொஸ்கோ), லக்ஷன் (லண்டன்), மகேஸ்வரன் (பொறியியலாளர் ஆஸ்திரேலியா), சுதாகரன் (S.T.P. கம்பியூட்டர் வேல்ட் பங்காளர்), நித்தியலக்ஷ்மி (முகாமைத்துவ பீட தலைவர், யாழ். பல்கலைக்கழகம், நியூசிலாந்து), சோதிநாதன் (பொறியியலாளர் - லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் திவ்யன், சுபஹறா (ஆஸ்திரேலியா), பவப்பிரியன் ஆகியோரின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17-07-2001) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*258, கோயில் வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம். T. P. 2448.* (90164)

தகவல்:
தனபாலசிங்கம்
(மகன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.07.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.